# இந்து தருமம்

## 2024



இந்து மாணவர் சங்கம் 23-24

பேராதனைப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



குறிஞ்சிக் குமரனே முருகா முருகா
வறியவர்க்கும் வரம் தருவாய் மருகா மருகா
குறிதவறா கூர்வேலா முருகா முருகா
அறிந்து உந்தன் அருள் பெறுவோம் மருகா மருகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து

# தருமம்

# 2024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூன் முகம்


| | | |
|---|---|---|
| நூல் | : | இந்து தருமம் – 2024 |
| இதழாசிரியர்கள் | : | த.சஜீவன் |
| | | சி.நிதுஷன் |
| | | பு.கிஷோகரன் |
| | | ஜெ.மதுசா |
| | | செ.ரிஷோபிகா |
| வெளியீடு | : | இந்து மாணவர் சங்கம் 2023/2024 |
| | | பேராதனைப் பல்கலைக்கழகம், |
| | | பேராதனை. |
| பக்கங்கள் | : | xviii + 109 |
| பிரதிகள் | : | 100 |
| தாள்கள் | : | 70gsm |
| அளவு | : | B5 Size |
| அச்சுப் பதிப்பு | : | குரு பிறிண்டேர்ஸ், |
| | | இருபாலை, |
| | | தொ.பே: 021 221 4777 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழின் உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | பேராதனை - குறிஞ்சிக்குமரன் திருக்கோயில் பிரதான சிவாச்சாரியாரின் ஆசிச்செய்தி | v |
| 2. | MESSAGE FROM THE DEPUTY VICE - CHANCELLOR | vi |
| 3. | கல்விக் கோயிலில் நிலைக்கொண்ட தமிழ்க் கடவுள் குறிஞ்சிக் குமரன் | viii |
| 4. | பெருந் தலைவரின் வாழ்த்துச் செய்தி | x |
| 5. | பெரும் பொருளாளரின் வாழ்த்துச் செய்தி | xi |
| 6. | பொறுப்பாண்மைக்குழு. இந்துப் பட்டதாரிகள் சங்கத் தலைவர் (2023/24) அவர்களின் வாழ்த்துச் செய்தி | xii |
| 7. | இதழாசிரியரின் இதயத்திலிருந்து... | xiii |
| 8. | இந்து மாணவர் சங்க தலைவரின் வாழ்த்துரை | xv |
| 9. | இந்து மாணவர் சங்கம் 67வது செயற்குழு 2023/2024 | xvii |
| 10. | குறிஞ்சிக்குமரன் ஆலயத்தின் 67வது பொறுப்பாண்மைக் குழு - 2023 / 2024 | xviii |
| 11. | குறிஞ்சிக் குமரன் ஆலய வரலாறு | 01 |
| 12. | சேயோன் மேய மைவரை உலகம் | 02 |
| 13. | எதிர்காலம் + தமிழ் = சவால் | 05 |
| 14. | முருகாற்றுப்படை காட்டும் முருகியலின்பம் | 07 |
| 15. | தமிழர் கட்டடக்கலையில் கோயில்கள் | 13 |
| 16. | தமிழர்களின் சிற்பக்கலை உணர்வு | 17 |
| 17. | சைவமும் தமிழும் | 21 |
| 18. | குறிஞ்சிக் குமரன் | 22 |
| 19. | மனிதனை கடவுள் படைத்தானா? இல்லை கடவுளை மனிதன் படைத்தானா? | 23 |
| 20. | அறிவியல் என்பது ஆற்றல்களின் ஆரம்பமா? அழிவுகளின் ஆரம்பமா..? | 26 |
| 21. | காதலும் கணிதமும் | 27 |
| 22. | இந்து தர்மத்தின் மீதான அறிவியல் பார்வை | 29 |
| 23. | திருமந்திரம் தரும் அறிவு | 30 |
| 24. | தமிழர்களின் இறை நம்பிக்கை | 32 |
| 25. | தமிழர் திருநாள் என்று அழைக்கப்படும் பொங்கல் திருநாள் | 34 |
| 26. | சைவமும் அறிவியலும் | 36 |
| 27. | ஓம் நமசிவாய சிவனும் சிதம்பரமும் | 38 |
| 28. | விநாயக சஷ்டி விரதத்தின் மகிமை | 43 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. சிவம் 45
30. திருஞானசம்பந்தருடைய தலைமைத்துவம் 46
31. நாவலர் 48
32. சிவபெருமானின் 64 வடிவங்கள் 51
33. தீபாவளிப் பண்டிகை 54
34. அமெரிக்காவில் இந்து பாரம்பரியம் 55
35. வாழ்வை வளம்படுத்தும் விரதங்கள் 57
36. நம் தாய்மொழி தமிழ் 59
37. கைலாய நந்தி 61
38. தமிழும் சைவமும் 63
39. தாண்டவலாஸ்யா !!! 65
40. தமிழ் வளர்ப்போம் 66
41. நற்பண்புகள் 67
42. நொந்துதடு மாறுவோர்க்கு நொடியில் விடை விளக்கிடுவீர்! 69
43. சிவபெருமானின் மகிமைகள் 71
44. தித்திக்கும் தமிழ்மொழி 73
45. தமிழ் மெழுகிட்ட உள்ளீடு பல 75
46. இந்து மதம் சொல்லும் அறம் 76
47. தமிழ் மொழியின் சிறப்பு 78
48. சிவலிங்கம் 80
49. Temple worship 82
50. செம்மொழியாம் தமிழ்மொழி 84
51. எங்கே சுதந்திரம்...? 87
52. வாழ்வியலில் இந்து தர்மம் 89
53. இன்றைய உலகில் மனிதனைப் புனிதனாக்கும் இந்து சமயம் 91
54. இந்து சமயத்தில் புதைந்துள்ள அறிவியல் தொழில்நுட்பம். 94
55. உள்ளத்திற்கு ஊக்கமளிக்கும் இறையுணர்வு மற்றும் நம்பிக்கை 97
56. மானுட வாழ்வியலில் சமயத்தின் போக்கு 99
57. இந்து தர்மம் 103
58. 2023/2024 ஆம் ஆண்டு இந்து மாணவர் சங்க 67வது செயற்குழுவின் ஆண்டறிக்கை 105
59. "1952ம் ஆண்டு முதல் இன்று வரை இந்து மாணவர் சங்கப் பெருந்தலைவர்கள் மற்றும் தலைவர்கள்" 108
60. நன்றிகள்... 110



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேராதனை - குறிஞ்சிக்குமரன் திருக்கோயில் பிரதான சிவாச்சாரியாரின் ஆசிச்செய்தி

பேராதனைக்குன்றத்தில் வீற்றிருக்கும் குறிஞ்சிக்குமரனின் அருளைப்பெற இந்து மாணவர்கள் பல்வேறு தொண்டுகளைச் செய்து வருகிறார்கள். இவற்றில் மிகச்சிறப்பு வாய்ந்தது **"இந்து தருமம்"** வெளியீடாகும்.

ஒவ்வொரு ஆண்டும் வெளியிட்டு இந்து மதத்திற்கு பெருமையைச் சேர்த்து நிற்கின்றது. இப்பூவுலகில் மலர்கள் பல மலர்கின்றன. மணம் உள்ள மலர்களையே அதிகம் விரும்புகின்றார்கள். அதைப்போலவே இந்து தருமமும் மணம் உள்ள பல கட்டுரைகளைத் தாங்கி ஒவ்வொரு ஆண்டும் மலர்கின்றது. மதங்கள் பலவாக இருந்தாலும் எல்லா மதங்களுமே தர்மத்தையும், அன்பையும், கருணையையும் போதிக்கின்றது.

இம் மாணவர்களின் பணி மேலும் மேலும் அவர்கள் வாழ்க்கையில் எல்லா நிலைகளிலும் முன்னேறக் குறிஞ்சிக் குமரனின் நல்லாசிகளை வேண்டி நிற்கின்றேன்.

ஓம் சரவண பவாய வித்மஹே,
சக்தி ஹஸ்தாய தீமஹி, தன்னோ,
குறிஞ்சிக் குமரப் ப்ரசோதயாத்.

**க.வரதராஜ குருக்கள்,**
**குறிஞ்சிக்குமரன் கோயில்,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்,**
**பேராதனை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# MESSAGE FROM THE DEPUTY VICE - CHANCELLOR

It is with great pleasure and enthusiasm that I extend my warmest greetings to the Hindu Student Union of the University of Peradeniya on the occasion that they publish Indhu Dharmam magazine for the year - 2024. As we navigate through the diverse and dynamic landscape of academia, I find myself inspired by the potential that the Hindu student community brings to the University of Peradeniya.

The Indhu Dharmam magazine has been published by the students annually for many years in the past. This year, the student union is publishing the 67th volume on Maha Sivarathri day. This magazine mainly consists of articles from students across all nine faculties. In addition, it always welcomes articles from other universities too. Oftentimes, the academic members also contribute to the magazine by providing articles mostly based on Hindu religion and culture. Releasing the Indhu Dharmam magazine is one of the major activities of the Hindu Student Union of the university. In addition, the student union organizes and takes part in Pooja's of the Kurunchi Kumaran temple.

The University of Peradeniya is more than just a place of higher learning. It is a vibrant hub of ideas, creativity, and collaboration. We always promote all ethnic groups to live in harmony and the university provides all the support to this effect. Each of you, as student, contributes significantly to this dynamic environment, shaping the future of our institution by contributing to this magazine by way of submitting articles, editing, page setting, and printing.

In the pursuit of academic excellence, let us remember that knowledge has no boundaries. It is nurtured through curiosity, critical thinking, and a willingness to



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

embrace new perspectives. I encourage each of you to explore beyond your field of choice, engage in interdisciplinary dialogue, and promote ethnic harmony in Sri Lankan society, which is very much needed. I have full confidence in the potential within each of you to make a positive impact on our university and the world.

I congratulate you all on releasing the latest volume of the magazine in time and take this opportunity to appreciate the guidance provided by the senior treasurer and the academic advisors. I am excited to witness the incredible accomplishments of the Hindu Student Union in the years to come.

**With warmest regards,**
***Professor Terrence Madhujith,***
***Deputy Vice-Chancellor.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
යාපනය විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව
**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

மெய்ப்பொருள் காண்பது அறிவு

***Professor. S. Srisatkunarajah***
***Vice Chancellor***
*B.Sc(Hons) Jaffna, PGDE(Merit) OUSL, Ph.D Heriot-Watt,*
*Professor in Mathematics*

எமது இல. / මගේ අංකය / My Number

உமது இல. / ඔබේ අංකය / Your Number

Date : 25.02.2024



# கல்விக் கோயிலில் நிலைக்கொண்ட தமிழ்க் கடவுள் குறிஞ்சிக் குமரன்

பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு இலங்கைப் பல்கலைக்கழகங்களின் வரலாற்றில் முதன்மையான இடமுண்டு. இலங்கையில் சுயாதீனமாகச் செயற்படத்தக்க வகையில் தாபிக்கப்பட்ட முதலாவது பல்கலைக்கழகமான இலங்கைப் பல்கலைக்கழகத்தின் மறுவடிவமாக இன்று நம் முன் இருப்பது பேராதனைப் பல்கலைக்கழகம். நூற்றாண்டு கடந்த கல்விப் பாரம்பரியத்துடன் இனிதாக பயணிக்கின்றது.

மூவின மக்களும் கல்வி கற்கின்ற பணி புரிகின்ற ஒரு கல்விக் கோயிலாக பேராதனைப் பல்கலைக்கழகத்தை இன்று நாம் காண்கின்றோம். அப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப நாள்களில் அதன் மாணவர் எண்ணிக்கையில் கணிசமான தொகையினராக தமிழ் மாணவர்கள் குறிப்பாக யாழ்ப்பாண மாணவர்கள் இருந்தனர். அதுபோன்று அதன் கல்வி சார் ஆளணியிலும் தமிழ்ப் புலமையாளர்களின் பங்கு பெரிதாகவேயிருந்தது. பொறியியல் பீடம் ஆரம்பிக்கப்பட்டதும் இவ் எண்ணிக்கை பலமடங்காகியதுடன் பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த இந்துக்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. அத்தகைய பின்னணியின் சாட்சியமாக இருப்பது பேராதனை குறிஞ்சிக்குமரன் ஆலயம்.

இலங்கைத் தமிழர்களுக்கும் முருக வழிபாட்டுக்கும் இடையில் மிக நெருக்கமான தொடர்புண்டு. இலங்கையில் யாழ்ப்பாண வாழ்வியல் கந்தபுராண கலாசாரம் வாழ்வியல் எனச் சிறப்பிப்பார் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழர்கள் பலருக்கும் அது போன்று ஏனைய தமிழ் பிரதேசங்களைச் சேர்ந்தவர்களுக்கும் ஆண் பெண் வேறுபாடின்றி முருகப் பெருமானுடன் தொடர்புடைய பெயர்கள் உள்ளமையை இன்றும் நாம் அவதானிக்கலாம். முருகக் கடவுள் மலையும் மலை சார்ந்த குறிஞ்சி நிலக் கடவுள் எனச் சிறப்பிக்கப்படுபவர். இலங்கையில் மலைச் சாரலில் உறைந்து அருள்பாலிக்கின்ற முருகனின் தலங்களுள் குறிப்பிடத்தக்கது பேராதனை குறிஞ்சிக்குமரன் ஆலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சித்தர் யோகர் சுவாமிகள் பேராதனை மலைக்குன்றுகளில் சுற்றித்திரிந்த காலப்பகுதியில் குறிஞ்சிக்குமரன் ஆலயம் தற்போது அமைந்துள்ள பகுதியைக் காட்டி இங்கு கடவுள் இருப்பதாகவும் இவ்விடத்தில் ஒரு கல்வி தாபனத்தை மையப்படுத்தி ஒரு ஆலயம் மேலெழும் எனவும் அருள்வாக்குச் சொன்னதாக யோகர் சுவாமிகளின் வரலாற்றைப் பதிவுசெய்யும் அமரர் எஸ்.அம்பிகைபாகன் குறிப்பிடுகின்றார். பேராதனை குறிஞ்சிக் குமரனின் வரலாற்றை புரட்டிப் பார்க்கும் போது இலங்கையில் தமிழர்கள் சந்தித்த இன்னல்கள் நிறைந்த வரலாறும் சமாந்தரமாகப் பயணிக்கும். இலங்கையில் இடம்பெற்ற பிரதான இனக் குழப்பங்களின் போது குறிஞ்சிக்குமரன் ஆலயமும் சேதத்துக்குள்ளானது. இருந்தும் பாதிக்கப்பட்ட அனைத்துத் தருணங்களிலும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய தமிழர்களான பேராசிரியர்களின் பெருமுயற்சியாலும் இளையவர்களான மாணவர்களின் முன்னெடுப்புக்களினாலும் குறிஞ்சிக்குமரன் ஆலயம் புனர்நிர்மாணம் பெற்றது.

பேராதனையில் கல்வி கற்ற கற்கும் அனைத்து இந்து மாணவர்களும் பணியாற்றிய பணியாற்றும் இந்துக்களும் ஒன்றாகக் கூடி ஓர் ஆன்மீக நெறிப்பட்ட சமூக வாழ்வை வாழ வழிசெய்யும் இடம் குறிஞ்சிக்குமரன் ஆலயம். இந்த ஆலயத்தில் அவர்கள் சரியைத் தொண்டுகளில் ஈடுபடுவதும் அதுவே ஒரு வழக்கமாக மாறி அவர்கள் உலகின் எப்பாகத்துக்கு சென்றாலும் தொடர்வதும் இன்று வரை தொடர்கதை. குறிப்பாக புலம்பெயர்ந்த பேராதனைப் பொறியியலாளர்கள் பலர் தாம் வாழும் நாடுகளில் முருகக் கோவில்களை அமைப்பதில் முன்னிற்பதிலும் அங்கு ஆன்மீகப் பணிபுரிவதும் இன்று பொதுவான ஒரு நிகழ்வு. இதற்குப் பின்னால் இருப்பது குறிஞ்சிக்குமரன் ஆலயத்தின் மகிமை என்பது உற்று கவனம் கொள்ளத்தக்க விடயம்.

இவ்வாறு பல்பக்க ஆன்மீகப் பரிமாணம் கொண்ட குறிஞ்சிக்குமரன் ஆலயத்தின் குமரப்பெருமானின் பெருங்கருணை எல்லோர் மீதும் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

**பேராசிரியர் சிறிசற்குணராஜா**

Prof.S.Srisatkunarajah
B.Sc(Hons) Jaffna, PGDE(Merit) OUSL
Ph.D Heriot - Watt
Professor in Mathematics
Vice Chancellor
University of Jaffna



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெருந் தலைவரின் வாழ்த்துச் செய்தி

எல்லாம் வல்ல குறிஞ்சிக்குமரனின் பாதார விந்தங்களைப் பணிந்து இவ் வாழ்த்துரையினை தொடங்குகிறேன்.

முதற்கண் கடந்த 12 ஆண்டுகளிற்கு மேலாக இந்து மாணவர் சங்கத்துடன் இணைந்து செயலாற்றுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஒவ்வொரு பீட மாணவர்களும் தங்கள் கல்விச் சுமைக்கு மத்தியிலும், இந்து சமய வளர்ச்சியின் மேம்பாட்டிற்காக தங்களால் முடிந்த பங்களிப்பை இம் மடலின் மூலம் நோக்க கூடியதாக உள்ளது.

மேலும் இக் குறிஞ்சிக்குமரன் கோவிலின் சரியைத் தொண்டை இந்து மாணவர் சங்கத்தின் உறுப்பினர்கள் முன் நின்று சிறப்பாக நடத்துவது, புதிதாக பல்கலைக்கழகத்திற்கு உள் வாங்கும் மாணவர்களிற்கு ஓர் முன் உதாரணமாக திகழ்கிறார்கள்.

"இந்து தருமம்" தனது 67வது அகவையில் இன்று தடம் வைக்கிறது. இது இந்து மாணவர்களின் ஆற்றலை கடந்த 70 வருடங்களாக பறை சாற்றி வரும் ஒரு இதழாக விளங்குகிறது.

ஆண்டுக்கொருமுறை வெளிவரும் இதழான "இந்து தருமம்" மென்மேலும் வளர்ச்சியடைந்து, தனது ஆக்கங்களின் மூலம் இந்து சமயத்தின் மேன்மைகளை உலகெங்கும் பரப்ப வேண்டுமென்று கூறி இவ் வாழ்த்துரையை முடிக்கின்றேன்.

**பேராசிரியர் த. சிவானந்தவேள்,**
**பெருந் தலைவர்,**
**இந்து மாணவர் சங்கம்,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெரும் பொருளாளரின் வாழ்த்துச் செய்தி

பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தினால் வருடாந்தம் வெளியிடப்படும் இந்து தருமம் சஞ்சிகையின் 2024ம் ஆண்டுக்கான இதழில் குறிஞசிக் குமரன் அருளோடு இந்து மாணவர் சங்க பெரும் பொருளாளராக வாழத்துரை அளிப்பதில் மட்டற்ற மகிழச்சிகள்.

இலங்கையின் மிகச்சிறந்த பல்கலைக்கழகமாய் திகழும் பேராதனைப் பல்கலைக்கழகத்திலே இந்து சமய தர்மங்களையும் விழுமியங்களையும் பேணிப்பாதுகாப்பது மட்டுமன்றி அடுத்த இளந்தலைமுறையினருக்கும் கடத்திச் செல்வதில் இந்து மாணவர்களின் அடையாளமாக இருந்து இந்து மாணவர் சங்கம் ஆற்றும் பணிகள் அளப்பெரியவை. அத்தகைய பணிகளில் ஓர் சிறப்பம்சமே இந்து தருமம் சஞ்சிகை.

தொழிநுட்பயுகத்தில் வேகமாய் ஓடிக்கொண்டிருக்கும் பல்கலைக்கழக சமூகத்தில் மறைந்து கொண்டும் மறந்து கொண்டும் வரும் ஆன்மீகம் சார் சிந்தனைத்திறனையும் எழுத்தாற்றலையும் ஊக்குவித்து அனைத்து பீட இந்து மாணவர்களின் பங்களிப்பில் இந்து சமயத்தின் சிறப்புகளோடு பெருமையுடன் வெளிவந்திருக்கிறது இந்து தருமம் - 2024 சஞ்சிகை.

பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தின் ஆன்மீகப் பணியின் சிறப்பம்சமான இவ் இந்து தருமம் - 2024 நூல் வெளியீடு சிறப்புற அமைய வாழத்துவதோடு இதற்கு முன்னின்று தொண்டாற்றிய மாணவர்களுக்கும் குறிஞ்சிக்குமரன் நல்லாசிகள் வேண்டி பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

**சி. மயூரன்,**
**சிரேஷ்ட விரிவுரையாளர்,**
**பெரும் பொருளாளர்,**
**இந்து மாணவர் சங்கம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொறுப்பாண்மைக்குழு, இந்துப் பட்டதாரிகள் சங்கத் தலைவர் (2023/24) அவர்களின் வாழ்த்துச் செய்தி

இந்து மாணவர் சங்கத்தின் இந்து தருமம் ஊடாகச் சந்திப்பதில் மனமகிழ்வடைகின்றேன். குறிஞ்சிக் குமரன் ஆலயத்தின் பல்வேறு கருமங்களிலும் பொறுப்பாண்மைக் குழு, இந்துப்பட்டதாரிகள் சங்கம் மற்றும் இந்து மாணவர் சங்கம் போன்ற அமைப்புக்கள் ஈடுபடுகின்ற பொழுதிலும் இதில் இந்து மாணவர் சங்கத்தின் பங்களிப்பே மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில், ஆலயத்தின் நாளாந்தக் கடமைகளிலும், ஆலய சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதிலும், ஆலயத்தின் கலாசார மற்றும் பண்பாட்டைப் பாதுகாப்பதிலும் இந்து மாணவர்களின் பங்களிப்பென்பது மிகவும் அளப்பரியதாகும். எனினும், அண்மைக் காலமாக இவர்களின் பல்வேறு செயற்பாடுகளிலும் ஒரு தொய்வு நிலை காணப்படுவது மிகவும் வேதனை தரும் விடயமாகும். குறிப்பாக, நாளாந்தக் கடமைகளில் இவர்களின் செயற்பாடானது அருகி வருவதும், கோவிலுக்கு வருகை தரும் இந்து மாணவர்களின் எண்ணிக்கையில் ஒரு வீழ்ச்சிப் போக்குக் காணப்படுவதும் மிகவும் வேதனை தரும் விடயமாகும். அத்துடன், அண்மைக் காலமாக தைப்பொங்கல், நவராத்திரி மற்றும் சிவராத்திரி போன்ற விசேட தினங்களில் பல்வேறு பீடங்களின் இந்துமாணவர்களும் இந்து மதம் சாராத தமது சகபாடிகளை எமது ஆலயத்துக்கு அழைத்து வருகின்றார்கள். இது வரவேற்கத்தக்க ஒரு விடயமாகும். ஏனெனில், இந்து மதம் சாராத மாணவர்கள் இவ்வாலயத்திற்கு வருகை தருவதன் மூலம் இந்து மக்களின் கலாசாரத்தையும் பாரம்பரியத்தையும் அறிந்து கொள்ள அவர்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கின்றது. இது இலங்கைபோன்ற பல் கலாசார நாடொன்றில் தேவையான மற்றும் விரும்பத்தக்க ஒன்றேயாகும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. எனினும், இந்து மதம் சாராத தமது சகபாடிகளை அழைத்துவரும் இந்து மாணவர்கள் எமது பண்பாடு பாரம்பரியங்களை அவர்களுக்கு எடுத்துக் கூறி எமது கலாசாரத் திற்கும் ஆலயத்தின் புனிதத்தன்மைக்கும் எவ்வித பங்கமும் ஏற்படாத வகையில் நடந்து கொள்வது மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும்.பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியிலும் வழமை போன்று இந்து மாணவர் சங்கத்தினர் தமது இந்து தருமம் நூலை வெளியிடுகின்றார்கள். அந்தவகையில், தொடர்ந்தும் அவர்களின் பணிகள் சிறப்படைய எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.வடிவேல்முருகன் தர்மதாசன்,**
**தலைவர் – பொறுப்பாண்மைக் குழு, இந்துப் பட்டதாரிகள் சங்கம்,**
**குறிஞ்சிக் குமரன் கோவில், பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர் குழாம்



சி.அ. நிதுசன் சோசை



த. சஜீவன்



பு. கிஷோகரன்



செ. ரிஷோபிகா



ஜெ. மதுஷா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதழாசிரியரின் இதயத்திலிருந்து...

மலையகத்தில் கலையின் ஒளிபரப்பி கவிநூறு நிலைபரப்பி சமாதானத்திற்கும் சகவாழ்விற்கும் வேற்றுமையில்லாத ஒற்றுமைக்கும் உயர்பண்பிற்கும் உறுதியாக இருந்து வந்து எம்பணி இனிதே நிறைக்க அருளது புரிந்து மூத்தோன் அண்ணன் விநாயகப்பிள்ளைக்கும் இளையோன் தம்பி குறிஞ்சியிலமர்ந்த குமரன் தனக்கும் முதலது வணங்கி....

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களால் 67வது இதழாக இந்து தருமம் வெளிவருகிறது. மலையகத்திலிருந்து மண்ணின் மணத்தோடு மாணவர்களின் அளப்பரிய பங்காற்றலோடு பல்வேறு செய்திகளோடு இந்த இந்து தருமத்தை நீங்கள் சந்திக்கலாம்...

இன்னும் மானிடம் ஜீவிதமாக இருக்கிறது என்றால் அதற்கு ஜீவ வித்தாக இருந்து வருவது இந்து தருமங்களே... ஒரு சமூகத்தின் உயிர் வேர் ஆன்மீகம்... ஆன்மீகமில்லாத வாழ்வென்பது மீகாமன் இல்லாத நாவாய்... மனித வாழ்விற்கு நம்பிக்கையைக் கொடுத்து நாளைய இருப்பை அர்த்தப்படுத்துவதில் இந்து மதமும் இந்து தர்மக் கோட்பாடுகளும் இன்னும் வலுவை இழந்துவிடவில்லை. எப்படி ஒவ்வொரு தனிமனிதனும் அறத்தோடும் தர்மத்தோடும் வாழ வேண்டுமென அறநெறிக் களஞ்சியங்கள் எம்மிடையே ஏராளமாக விரவிக் கிடக்கின்றன. அர்த்தமுள்ள ஒரு வாழ்க்கையை ஒரு கட்டுப்பாட்டுடன் வாழ வேண்டியது எவ்வளவு அவசியமோ அதை விட அதிசயம்...

சங்க காலங்கள் சரித்திர காலங்களுக்கு முதலே மனித நாகரிகம் தோன்ற முதலே மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே இந்து தருமங்கள் முளைவிட்டிருக்கின்றன. இருக்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல திறப்பட்டோரின் அனுபவங்கள், ஆக்கங்கள், ஆதங்கங்கள், ஆதரவுகளுடன் 67வது இதழாக வெளிவருவதில் மட்டில்லாத மகிழ்ச்சி அடைகிறோம். ஏதோ இமயத்தின் உச்சியில் ஏறி நந்திக் கொடியைப் பதித்த உணர்வு எங்களுக்குள்.. உள்ளே நுழையத் தயாராகுங்கள்...

இருக்க..

மலர்க்குழு மற்றும் ஆக்கம் நல்கிய அத்தனை பேர்க்கும் அருந்துணை நின்ற பொறியியல் குழாம் தனக்கும் அழகுற அச்சது ஏற்றி இனிதே தந்த குரு பிறிண்டேர்ஸ் அச்சகத்தினர்க்கும் இன்னும் ஆதரவதனை அள்ளி வழங்கிய அத்தனை பேர்க்கும் நன்றிகள்... நன்றிகள்

தன்னை உணர்ந்தவனே மனிதருள் முதல்வன்
அவன் பாவங்களை நோக்கிச் செல்வதில்லை.

**இதழாசிரியர்,**

**த.சஜீவன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்து மாணவர் சங்க தலைவரின் வாழ்த்துரை

குறிஞ்சி வளமிகு கண்டி மாநகரில் ஹந்தானை மலைச்சாரலில் அமைதியின் சொரூபமாய் குன்றுதனில் அமர்ந்து அடியார்கள் குறைகள் தீர்த்து அருள் புரியும் குறிஞ்சிக்குமரனின் பாதங்களை பணிந்து கொண்டு, குறிஞ்சிக்குமரன் ஆலயம் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களினதும் நாடி வரும் பக்தர்களினதும் வழிபாட்டுத் தலமாக திகழ்கிறது. இவ் ஆலயத்தின் பூஜை நிகழ்வுகளையும் பராமரிப்பு செயற்பாடுகளையும் இந்து மாணவர் சங்கம் மிகவும் சிறப்பாக நிகழ்த்தி வருகிறது. அந்த வகையில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இந்து மாணவர் சங்கத்தினுடைய 67வது செயற்குழு தலைவராக நான் தெரிவு செய்யப்பட்டமையானது குறிஞ்சிக்குமரனின் பேரருளாகவே கருதுகிறேன். குறிஞ்சிக்குமரனுக்கு தொண்டுகள் செய்வதற்கு நமக்கு வாய்ப்பு கிடைத்ததை இந்து மாணவர்களாக நாம் பெரும் பேறாகவே கருதுகின்றோம்.

நமது ஆலயத்தில் 12 வருடங்களின் பின்பு மகா கும்பாபிஷேகம் நிகழ்ந்தது யாவரும் அறிந்ததே. அக்காலத்தில் நாம் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றதை ஒரு வரமாகவே கருதுகிறோம்.

அதை விட எம்பெருமானுக்கு வருடாவருடம் தைப்பொங்கல், அலங்கார உற்சவம், கந்த ஷஷ்டி, மஹா சிவராத்திரி, நவராத்திரி, கார்த்திகை, மணவாளக் கோல தின நவவோத்திர சங்காபிஷேகம், திருவெம்பாவை போன்ற மேலும் பல விஷேட உற்சவங்களும் வெள்ளிக்கிழமை தோறும் கூட்டுப்பிரார்த்தனையும் தங்குதடை இன்றி மிகவும் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றோம்.

இன்னும் பல பணிகள் எதிர்காலத்தில் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம். இறை அருள் கைகூடினால் எதிர்காலத்தில் அவற்றையும் மிகவும் சிறப்பாக முன்னெடுத்துச் செல்ல தயாராக உள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் இந்து மாணவர் சங்கத்தினால் ஆண்டுதோறும் மேற்கொள்ளும் பணிகளில் மிக முக்கியமான நிகழ்வு இந்து தருமம் மலர் வெளியீடு ஆகும்.

அந்த வகையில் இவ்வருடம் மலரை வெளியிடுவதற்கு இறையருள் கூடி உள்ளது. இவ் இதழ் சிறப்புற எல்லாம் வல்ல குறிஞ்சிக்குமரனை வேண்டி பிரார்த்திப்பதோடு குறிஞ்சிக்குமரன் திருவருள் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கிறேன்.

"வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்."

**சி. டிலக்ஷன்,**
**தலைவர் இந்து மாணவர் சங்கம்,**
**பொறியியல் பீடம் (2019),**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மாணவர் சங்கம் 67வது செயற்குழு 2023/2024

| | | |
|---|---|---|
| பெருந்தலைவர் | :- | பேராசிரியர் த. சிவானந்தவேள் |
| தலைவர் | :- | திரு. டிலக்ஷன் |
| உபதலைவர் | :- | திரு. சுபாங்கன் |
| இணை செயலாளர்கள் | :- | திரு. பானுஜன் |
| | | திரு. கோபிகன் |
| பொருளாளர் | :- | திரு. நந்தபாலன் |
| இதழாசிரியர்கள் | :- | திரு. சஜீவன் |
| | | திரு. நிதுஷன் |
| | | திரு. கிஷோகரன் |
| | | செல்வி. ரிஷோபிகா |
| | | செல்வி. மதுஷா |
| நூலகர் | :- | திரு. சஜீவன் |
| பண்டக முகாமையாளர்கள் | :- | திரு. ரஜீவ் |
| | | திரு. துஷாந்த் |
| நிர்வாக உறுப்பினர்கள் | :- | திரு. இனியவன் |
| | | திரு. சயுகன் |
| | | திரு. சதுர்ஷான் |
| இணைப்பாளர் | :- | திரு. கேதாரகன் |
| செயற்குழு உறுப்பினர்கள் | :- | திரு. ஜேனுஷன் |
| | | திரு. அனோஜன் |
| | | திரு. ஜயந்தபிரதீன் |
| | | திரு. பிரகஜன் |
| | | திரு. விபூஷணன் |
| | | திரு. யூட்டினோஷன் |
| | | திரு. டிலுக்ஸன் |
| | | திரு. சதுர்ஷன் |
| | | திரு. தனுஷன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிஞ்சிக்குமரன் ஆலயத்தின் 67வது

# பொறுப்பாண்மைக் குழு - 2023 / 2024

| | | |
|---|---|---|
| தலைவர் | – | வடிவேல்முருகன் தர்மதாசன் |
| பொதுச் செயலாளர் | – | இரா . மகேஸ்வரன் |
| நிர்வாகச் செயலாளர் | – | பேராசிரியர் த. சிவானந்த வேள் |
| பொருளாளர் | – | எஸ் மயூரன் |
| செயற்குழு உறுப்பினர்கள் | | |
| | 1. | து . சிவசுப்பிரமணியம் |
| | 2. | கலாநிதி த. விநாயக தாசன் |
| | 3. | கலாநிதி கே. நவரத்தினராசா |
| | 4. | லோ. தசாந்தன் |
| | 5. | த. வெங்கடேஸ்வரன் (முழுபு சார்பான நியமன உறுப்பினர்) |
| | 6. | சி. டிலக்சன் |
| | 7. | ந. பானுஜன் |
| | 8. | ஞா. நந்தபாலன் |
| | 9. | சி. நிஜன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மாணவர் சங்கம் 67வது செயற்குழு - 2023/2024
## பேராதனைப் பல்கலைக்கழகம்



இருப்பவர்கள் - இடமிருந்து வலம்

திரு.த.கோபிகன், திரு.ஞா. நந்தபாலன், திரு.சி.டிலக்சன், திரு. சி. மயூரன், Professor Terrence Madujith (Deputy vice chancellor), Prof.த. சிவானந்தவேள், திரு.சி.சுபாங்கன், திரு.ந. பானுஜன்

நிற்பவர்கள் - இடமிருந்து வலம்

செல்வி.செ. ரிஷோபிகா, திரு.வ.அனோஜன், திரு.சே. டிலுக்ஷன், திரு.கே.தனுசன், திரு.பி.றெ.ஜெ. யூட் டினோசன், திரு.கு. சயுகன், திரு.த .சஜீவன், திரு. ஸ்ரீ. ரிசாந்தன்,திரு. ப. ரஜீவ், திரு.தா.விபூஷணன், திரு.சி.நிஜன், திரு.ந.சதுர்ஷன், திரு.ப. கேதாரகன், திரு.சி.துசாந்த், திரு.தி. இனியவன், திரு.பு.கிஷோகரன், திரு.மு.பிரகஜன், திரு.சு. பியோசன், திரு.வீ. ஜயந்த பிரதீன், திரு.ம.ஜேனுஷன், செல்வி.ஜெ.மதுஷா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொறுப்பாண்மைக்குழு குறிஞ்சிக்குமரன் ஆலயம் - 2023/2024



திரு.L.தசாந்தன், Dr.S.மகேஸ்வரன், Prof. T.சிவானந்தவேள், Dr.S.K நவரட்ணராஜா, திரு.V.தர்மதாசன், திரு. S.மயூரன், திரு.N.பானுஜன், திரு.S.சுபாங்கன், திரு.S.டிலக்ஷன், திரு.G. நந்தபாலன், திரு.T.கோபிகன்

## இந்து பட்டதாரிகள் சங்கம் பேராதனைப் பல்கலைக்கழகம்



Prof.T. சிவானந்தவேள், திரு.V.தர்மதாசன், Dr.S.மகேஸ்வரன், Dr.S.K. நவரட்ணராஜா, திரு S.தங்கராஜ், திரு.L.தசாந்தன், T.வெங்கடேஸ்வரன், S.கருணாகரன், Dr. கோமதி மகேஸ்வரன், Dr. J.வேல்முருகு, Dr. T.விநாயகதாசன், T. ராஜேஸ்வரன், Dr. K. குலேஸ்வரகுமார், Dr.M. பாலமயூரன், R.மனேஸ்வரன், S.சிவானந்தவேள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிஞ்சிக் குமரன் ஆலய வரலாறு
# (சுருக்கம்)

பேராதனைப் பல்கலைக்கழகம் 1952 இல் பேராதனையில் இயங்கத் தொடங்கிய ஆண்டிலேயே இந்து மாணவர் சங்கமும் உருவாகியது. ஆரம்ப காலத்தில் இச் சங்கம் இந்து மத விழாக்களைக் கொண்டாடுதல், வெள்ளிக்கிழமைகள் தோறும் மாலை வேளையில் கலைப்பீட அறை ஒன்றில் கூட்டுப்பிரார்த்தனை செய்தல், சமய சொற்பொழிவுகள், கருத்தரங்குகளை நிகழ்த்தல், இந்து சமய சஞ்சிகைகளை வெளியிடல், தலயாத்திரை மேற்கொள்ளல் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வந்தது.

பேராதனைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்ட காலம் முதலாக இங்கு இந்து மத ஆலயம் ஒன்றினை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் பல்வேறு காரணங்களுக்காக அதனை செயற்படுத்த முடியாது போனது. இருப்பினும் 1966 ம் ஆண்டு இந்து மாணவர் சங்கப் பெருந்தலைவர், செயற்குழு உறுப்பினர்களது அயராத முயற்சியாலும், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள், முருக பக்தர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடனும் குறிஞ்சிக் குமரன் கோவிலுக்கான அமைப்புப் பணிகள் ஆரம்பமாகின.

- 1966 ஆடி மாதம் குன்றுகள் தகர்க்கப்பட்டு, மேடுகள் தட்டையாக்கப்பட்டு, நிலம் மட்டமாக்கப்பட்டது.
- 1966 கார்த்திகை மாதம் அத்திவாரமிடப்பட்டது. (27-11-1966)
- 1968 சித்திரை மாதமளவில் கட்டிட வேலைகள் நிறைவேற்றப்பட்டன.
- 1968 வைகாசி மாதம் மகாகும்பாபிஷேகம் நிறைவேறியது. (06-06-1968 முதலாவது கும்பாபிஷேகம்)
- 1980ம் ஆண்டு இரண்டாவது கும்பாபிஷேகம்
- 1986ம் ஆண்டு மூன்றாவது கும்பாபிஷேகம்
- 1998ம் ஆண்டு நான்காவது கும்பாபிஷேகம்
- 2010ம் அண்டு ஐந்தாவது கும்பாபிஷேகம்
- 2022ம் ஆண்டு ஆவணி மாதம் நடைபெற்ற மகாகும்பாபிஷேகமே இறுதியாக நடைபெற்ற கும்பாபிஷேகமாகும். (05.09.2022)

இன்று இக் கோவில் இந்து மாணவர் சங்கம், இந்துப் பட்டதாரிகள் சங்கம், பொறுப்பாண்மைக் குழு ஆகியோரின் ஒத்துழைப்புடனும், முருக பக்தர்களின் ஆதரவுடனும் வளர்ச்சி கண்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேயோன் மேய மைவரை உலகம்



"சேயோன் மேய மைவரை உலகம்" என்ற பதிவு தொல்லிலக்கணமான தொல்காப்பியத்தில் அகத்திணையியலிலே உள்ள நூற்பாவில் அமைந்துள்ளது. இந்தப் பதிவினை நான் முதலிலே பார்வையிட்டது ஏறக்குறைய அறுபத்தியிரண்டு ஆண்டுகளுக்கு முன்னராகும். பேராதனைப் பல்கலைக்கழகத்திலே தமிழ் சிறப்புக் கலை பயிலும் மாணவியாக இருந்த காலம் அது. பேராசிரியர் வி. செல்வநாயகம் தொல்காப்பியம் கற்பிக்கின்றார். அது ஓர் உயர் இலக்கணக் கற்கை நெறி. எனினும் நாம் இருந்த சூழலின் பின்னணியிலே அவர் பொருள் இலக்கணத்தை நயமாக விளக்குவது இன்னமும் காதில் ஒலிக்கிறது.

'திணை' என வழக்கப்பட்ட நிலங்களைத் தொல்காப்பியம் ஒரு நூற்பாவிலே வகுத்துக் கூறியுள்ளார். அது வருமாறு,

**" மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையால் சொல்லவும் படுமே."**

இந் நூற்பாவின் இரண்டாவது அடியைப் பேராசிரியர் விளக்கும் போது "மைவரை உலகம்" என்பதற்கு கூறும் விளக்கம் எம்மை மெய்சிலிர்க்க வைக்கும். இப்போது நீங்கள் இருக்கும் இடம் தான் மைவரை உலகம். எம்மைச் சூழ இருந்த மலையை ஒரு முறை நாம் நிமிர்ந்து பார்த்தோம். தொடர்ந்த அவர் விளக்கம் இன்னும் வியப்பை இன்று மீள எண்ணும் போது தருகின்றது. "இங்கே தான் சேயோன் என அழைக்கப்படும் முருகனும் என்றும் உறைகின்றான்." அவர் அப்போது முருகன் இங்கே உறைகிறான் என்று கூறிய போது அம்மலையிலே முருகன் கோயில் எதுவும் இருக்கவில்லை.

ஆனால் அவர் கூறியது முற்றிலும் உண்மையென்பதை சில மாதங்கள் கழிய நான் நன்கு உணர்ந்து கொண்டேன். அதனைப் பதிவு செய்வதே இந்த எழுத்துருவின் இலக்காகும். பேராதனைப் பல்கலைக்கழகத்திலே சைவ மாணவர்கள் வழிபாடு செய்வதற்குரிய கோயில் எதுவும் நாம் கற்ற காலத்தில் இல்லை. அதனால் அப்போதிருந்த 'இந்து மன்றம்' வெள்ளிக்கிழமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை வேளையில் சைவ மாணவர் வழிபாடு செய்ய ஒரு வழிபாட்டு அறையை ஒழுங்கு செய்து அக்குறையை நீக்கியது. கலைப்பீட விரிவுரை நடைபெறுகின்ற ஒரு வகுப்பறையை (கீழ்த்தளத்தில்) 4.30 மணிக்கு விரிவுரை முடிவடைய உடனடியாக அங்குள்ள கதிரைகளை வெளியே எடுத்து ஒழுங்காக அடுக்கி விட்டு நீர் தெளித்து தூய்மையாக்கி வழிபாட்டறையாக மாற்றித் தரும் பணி அது.

அந்த வழிபாட்டறையில் எல்லாத் தெய்வ உருக்களின் படங்களையும் வைத்து மலர் சாற்றி திருவிளக்கு ஏற்றித் தேவாரங்கள் பாடி நாம் வழிபாடு செய்வோம். அப்போது மலையில் உறைந்திருக்கும் முருகன் தான் எங்கள் விரிவுரை அறையிலே வந்து வீற்றிருந்தது எமது ஊனக்கண்களுக்குத் தெரியவே இல்லை. ஆனால் மேலும் ஒரு மாதம் கழிய இந்து மன்றம் பல்கலைக்கழகத்தில் இந்து மாணவர் வழிபாடு செய்ய ஒரு கோவில் கட்டுவது என முடிவு செய்தது. அதற்குரிய நிலத்தைத் தருமாறு பல்கலைக்கழக உபவேந்தருக்கு எழுத்து மூலமாக விண்ணப்பம் அனுப்பப்பட்டது. நாம் எதிர்பார்க்காத நிலையில் மிக விரைவாகவே உபவேந்தரிடம் இருந்து மறுமொழி எழுத்துமூலமாக வந்தது.

அந்த எழுத்து வடிவத்தில் வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. "உங்களுடைய வழிபாட்டிடத்துக்கு உரிய நிலப்பகுதி தீர்மானிக்கப்பட்டு விட்டது. இந்து மன்றத்தலைவரும் உறுப்பினர்களும் குறிப்பிட்டுள்ள நாளிலே என்னை நேரில் வந்து காணவும்." இக்குறிப்பு எமக்கு மிக்க மகிழ்வைத்தர வகுப்பறையிலே நாம் வழிபட்ட தெய்வங்களை நினைந்து குறித்த நாள் உபவேந்தரை நேரில் காணச் சென்றோம். நாங்கள் ஐவர் சென்றிருந்தோம். அதில் இருவர் பெண்கள் ஆவர். நானும் ஒருத்தியாக இருந்தேன். உபவேந்தரோடு நான் உரையாடிய முதல் நாளும் அதுவே. அவர் எங்களிடம் சொன்ன செய்தியின் குறிப்பு வருமாறு,

" உங்கள் வழிபாட்டு இடத்துக்கான பகுதி எம்மால் உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆனால் அந்தப்பகுதியை பல்கலைக்கழகச் சுற்றுப் புறத்திலே தருவதற்கில்லை. எனவே அதோ தெரிகிறதே அந்தப் பெரிய குன்றுப்பகுதியை நாம் இந்து மன்றச் செயற்பாட்டுக்குத் தந்துள்ளோம்." இவ்வாறு சொல்லிக் கொண்டே எழுந்து சாளரத்தின் கதவைத் திறந்து அப்பெரிய குன்றைத் தன் கைகளால் சுட்டிக் காட்டினார். நாமும் சாளரத்தின் ஊடாக அத்திருக்குன்றத்தைப் பார்த்தோம். எனக்கு அப்போது பேராசிரியர் வி. செல்வநாயகம் கூறிய முருகன் இங்கே உறைகின்றான் என்ற கூற்று மீளக்காதில் கேட்டது. உபவேந்தருக்கு நன்றி கூறி விட்டு வெளியே வந்து மீண்டும் எல்லோரும் அந்தக் குன்றை நிமிர்ந்து பார்த்தோம். "குறிஞ்சிக்குமரன்" எம்மை நோக்குவது அன்று தெளிவாகவே தெரிந்தது.

இரண்டு கிழமையாக மழை பெய்தமையால் அத்திருக்குன்றத்தைப் போய்ப் பார்க்க முடியவில்லை. எனினும் மழை ஓயவே ஒரு ஞாயிற்றுக்கிழமை உபவேந்தரிடம் சென்ற குழுவினர் குன்றைப் பார்க்கப் புறப்பட்டோம். மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி நிலம் எனத் தொல்காப்பியர் பகுத்த நிலத்தைக் கண்டோம். பற்றைகளைத் தள்ளி, பெருமரங்களுக்கு விலத்தி, கொடிகளிலே சிக்காமல், சுனைகளிலே விழுந்து விடாமல் மெல்ல மெல்ல வழியைத் தேடி ஏறக்குறைய மூன்று மணித்தியாலங்களின் பின்னர் குன்றின் உச்சியை அடைந்தோம். காலெல்லாம் சேறு, தலையெல்லாம் நீர்த்தாரை, மலர்களின் சிதறல், அட்டைக்கடியின் அறிகுறிகள். இந்தக் கோலத்தில் உச்சியில் நின்ற போது குளிரைப் போக்குவது போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரவனின் வெம்மையான சுடர்கள் எம்மைத் தழுவிய அந்த வேளை! நான் இறையருளும், தோற்றமும் இதுதான் என்று உணர்ந்த அரிய வேளை. குறிஞ்சிக்குமரன் உறையும் அந்தக் குன்றிலிருந்து நாம் கீழே பார்வையைச் செலுத்தினோம். சொல்ல முடியாத பெருவியப்பு. பேராதனைப் பல்கலைக்கழகச் சூழல் மட்டுமல்ல முழுப் பேராதனைப் பகுதியையும் ஒரே நோக்கில் கண்டோம். "குன்றிலே முருகன் நின்று ஆள்கின்றான்" என்ற உண்மையை நாம் உணர்ந்து கொண்டோம். ஏனைய வழிபாட்டு இடங்களையும் மேலே நின்று கண்ட போது சொல்ல முடியாத மனநிறைவு. மலையாக நின்ற குறிஞ்சிக்குமரன் தாளிலே விழுந்து வணங்கினோம். கண்களில் அப்போது உருண்ட கண்ணீர்த் துளிகளை நான் மீள எனது வாழ்நாளில் உகுக்கவில்லை. "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" என்ற சம்பந்தக் குழந்தையின் குரல் சொன்ன கண்ணீர் அது என்பதை எல்லோரும் உணர்ந்தோம்.

தன்னுடைய குன்றத்திருவுருவைக் காட்ட எம்மை அழைத்து அருள் செய்த குமரனுக்குத் திருக்கோயில் கட்டப்பட்டுள்ள பல்கலைக்கழகமே வழிபாடு செய்கிறது. உலகமே வழிபட்டு நிற்கிறது. குறிஞ்சிக்குமரன் உறையும் குன்றின் அடிவாரத்தில் சில ஆண்டுகள் குடும்பமாக வாழ்கின்ற பேறும் எனக்குக் கிடைத்தது. அருணாசலம் மண்டபத்திற்கு அருகில் அமைந்த வீட்டிலே வாழ்கின்ற போதும் ஒவ்வொரு நாளும் குறிஞ்சிக்குமரன் கோயிலுக்கு போக வாய்ப்பு இருக்கவில்லை. ஆனால் காலையும் மாலையும் திருக்கோயில் மணியோசை எம் வீட்டடியில் வந்து என் காதில் விழும் அருளோசை தான் ஆனால் திருவிழாக் காலங்களில் முழுமையான அழகுக் கோலம் கண்டு பரவசமாகி நின்ற வேளைகள் அழியாத கோலங்கள். இறைவன் இருக்குமிடம் மலையென நம்பி வழிபட்ட நம் முன்னோர் நமக்குக் கையளித்த வழிபாட்டு மரபு இதுவே.

குறிஞ்சிக்குமரன் குன்றத்தில் முதல் செய்த வழிபாடும் அதனால் பெற்ற அருளாலும் உலகம் முழுவதும் எழுந்தருளியிருக்கும் முருகனை நேரில் கண்டு வழிபடும் அரிய வாய்ப்பு இன்றுவரை கிடைக்கிறது. ஆறுபடை வீடு எனத் திருமுருகாற்றுப்படை நூல் பதிவு செய்த முருகன் திருக்கோயில்களில் வழிபாடு செய்யும் போதெல்லாம் எம் முன்னோர் நாம் எமது பேராதனைக் குறிஞ்சிக் குமரனைக் கண்டது போலவே கண்டு வழிபட்டிருப்பார் என்பது திண்ணமாகத் தெரிகிறது. அன்று முருகனைக் குன்றமாகக் கண்டவர்கள் குழுவினரில் இப்போது இருவர் மட்டுமே வாழ்கிறோம். ஏனையவர் முருகன் திருவடிப் பேறு பெற்று விட்டனர். எனக்கு இப்பதிவைச் செய்யும் பணியை குறிஞ்சிக் குமரன் தான் தந்தருளியுள்ளான் என எண்ணுகிறேன். குறிஞ்சிக்குமரன் திருக்கோயில் சென்று வழிபட்டால் அவன் அருளால் நம் வேண்டுகைகள் எல்லாம் நிறைவேறும். முருகனை நேரில் கண்ட என் பட்டறிவு எல்லோருக்கும் கிடைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

**முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்,**

**முன்னாள் ஆய்வுநிலைப் பேராசிரியர்,**

**கச்சுயின் பல்கலைக்கழகம்,**

**டோக்கியோ, ஜப்பான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலம் + தமிழ் = சவால்



அரன் இட்ட தீ முப்புரத்திலே. அனுமன் இட்ட தீ தென்னிலங்கையிலே. காற்று வைத்த தீ காட்டிலே. கடவுள் இட்ட தீ(பசி) அடிவயிற்றிலே என்றவாறு வளமாக சொற்களெடுத்து வக்கணையாகக் கவி பாடிக் களித்திருந்ததொரு காலம். ஆனால் இன்றோ தமிழுக்குத் தீ தமிழ் சொற்களுக்குத் தீ தமிழனுக்குத் தீ... தீ... தீ... வேகவேகமாய் அழிவைத் தொடத் தொடங்கி விட்டது தமிழ்.

தமிழர்களின் கண்ட நகர்வோடு தமிழும் தன் சீரிளமைத் திறத்தை விட்டு நகரத் தொடங்கி விட்டது என்றே கூறவேண்டியுள்ளது. தமிழில் பேசுதல் எழுதுதல் அவமானமெனக் கருதும் பலர் பல நாடுகளின் சுதேசிய இனங்களுடன் கலப்புற்று வாழப் பழக்கப்பட்டதால் அந்தந்த நாகரிகப் பூச்சுக்களைப் பூசிக் கொள்ள முயல்வதால் தமிழ் கிட்டத்தட்ட மறக்கப்பட்டு விடப்படுகிறது. அல்லது வேண்டுமென்றே புறக்கணிக்கப்படுகிறது. அதுதான் நிதர்சனம்.

தமிழன் என்ற ஒரு இனம் தமிழ் என்ற ஓர் மொழி. தாயகம் வாழ்க்கை முறை கலாசாரம் பழக்கவழக்கமெல்லாமே பாரம்பரியமாக கடத்தப்பட்டு வந்த நிலை இன்று இல்லை. பல இளைய தலைமுறையினருக்கு ஒத்த எதிர்ச் சொற்கள் புரியவில்லை. தமிழை உரமிட்டு வளப்படுத்திய பழமொழிகள் தெரியவில்லை. தெரிந்தாலும் பேசுவதில் சொல்வதில் கூச்சம். தமிழர் தம் வாழ்க்கைக் கோலம் ஒன்றும் சாதாரணமானதல்ல. தெய்வீகத்தோடும் தத்துவங்களோடும் வாழ்வியலோடும் பிரிக்க முடியாமல் பிணைந்த சகட சக்கரம்.

தமிழ் என்ற மூன்று (03) சொற்களுக்குள் இந்த பூமிப்பந்தின் மையக்கருவே மையம் கொண்ட ஆச்சரியம் இயலாய் இசையாய் நாடகமாய் அக்கக்காய் ஆணியாய் வேராய் உடனாய் தானாய் பக்கம் பக்கமாய் தமிழர் தம் வாழ்வைப் படம் போட்டுப் பதப்படுத்தி வாழ்க்கையை அர்த்தப்படுத்திய தமிழுக்கு ஈடுண்டோ இன்னமோர் பிறமொழி.

முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என முச்சங்கம் கண்டு வளர்ந்த வளர்த்தவனொன்றும் பேடியுமல்ல பேதையுமல்ல. முடிமன்னர் போர் வென்ற இடமெல்லாம் கொடியோடு நாட்டி வைத்த தமிழுக்குப் பெருமை பிறிதுண்டோ.

போகட்டும் பழம் பெருமை பேசுவதில் பயனென்ன சொல். ஆனால் எமக்கேயெமக்கான நாகரிகக் கோலங்கள் எங்கே. நம் சிறார்கள் விளையாடிய விளையாட்டுக்கள் எங்கே. கும்மியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலாட்டமும் குத்துப் பாடல்களுக்கும் பொப் பாடல்களுக்கும் முன்னே காணாமல் போனதேன்..?

உலகத்திற்கே நாகரிகத்தை, கட்டுமானத்தைக் கற்றுக் கொடுத்த தமிழ் நாகரிகம் உடையென்ற சில துண்டுகளுக்குள் நடையை உடையை மாற்றிக் கொண்டதேன்.? தமிழை சரியாக உச்சரிக்கவோ பேசவோ முடியாத நிலைமைக்குள் செந்தமிழர் நாப்பழக்கம் மாறிக் கொண்டதேன். இளந்தலைமுறையினர் மற்றும் அடுத்த தலைமுறையினர் தமிழ் பற்றிக் கொண்டுள்ள கருத்துவாக்கம் என்ன?

தமிழில் பேசுவது அவமானம் தமிழர் சடங்கு பண்பாடுகள் அநாகரிகம். தமிழ் முதியவர்கள் வீடுகளிலிருப்பது ஒரு வகை அசூசை.. நுனி நாக்கலிருந்து வழுக்கி வழுக்கி வரும் ஆங்கிலம் அல்லது ஏனைய மொழிகள் அந்தந்த நாடுகளின் கலாசாரத்திற்கேற்ப மாறிக்கொள்ள முனைகின்ற அவசர முனைப்பு ஏன்...? ஆணிவேரையே அறுத்து விடும் அவசரம்..? புரியவில்லை. வெறும் மேடைகளில் பேசுவதற்கான ஆரம்ப அடுக்காகத் தமிழை எடுத்தாண்டு அப்பாலே அவசியச் செருகல்களாய் ஆங்கிலத்தைப் புகுத்திவிட்டு தமிழுக்கு விழா எடுக்கும் புலம்பெயர் நாடுகளில் தமிழ் வேடிக்கைப் பொருளாவது வாடிக்கையாகி விட்டது.

இதற்கெல்லாம் காரணம் புலம்பெயரும் தாயக உறவுகள் தாய் மண்ணுடனான உறவையோ தங்களின் நேச உறவுகளையோ தமிழையோ பேண முன் வராததுதான். பெரும்பாலும் புலம்பெயர் தாக்கங்கள் உள்நாட்டிலும் அலைகளை வீசாமலில்லை. எதற்கு எடுத்தாலும் இன்னொரு கலாசாரத்தைக் குறை கூறுவது இக்கட்டுரையின் நோக்கமல்ல. அவரவர்க்கு அதது பெரிது. ஆனால் முன்தோன்றி வில்லேந்திய முதற்குடி என்று மார்பையும் தோளையும் தட்டிக் கொள்ளும் தமிழர் ஏன் எதற்கு என்ற ஆராய்ச்சியை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

"என் பிள்ளை தமிழ் கதைக்க மாட்டான்" என்பதில் பெற்றவருக்கு பூரிப்பு... சேலை கட்டத் தெரியாது என்பதில் பருவப் பிள்ளைக்குப் பூரிப்பு. அச்சம், மடம் , நாணம், பயிர்ப்பு. எந்தக் கார்ட்டைக் (card) கொடுத்து எந்த மோலில் (mall) வாங்கலாம்...? ம்... வெட்கம் என்றால் என்ன? ஏன் வெட்கப்பட வேண்டும்..? எப்படி வெட்கப்பட வேண்டும்...? இப்படியா...? இந்தளவு இந்தளவுக்கும் போதும். போதும் .. எதிர்காலம் + தமிழ் = சவால்.....

**செ.ரேணுகா,**
**ஆசிரியை,**
**வ/விபுலானந்தா கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகாற்றுப்படை காட்டும் முருகியலின்பம்



முருக வழிபாடு தொன்மை வழிபாடு. வேற்றுச் சமயத்தோரும் விரும்பி வழிபடும் தெய்வம் முருகன். அழகு, இளமை, ஆற்றல் மிக்க "அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூட் சேய்" செந்தமிழ் பரமாசாரியன் முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பவன் தேவ முதல்வனான சிவபெருமானுக்கும் முனிமுதல்வனான அகத்தியர்க்கும் மனிதரில் முதல்வனான அருணகிரிநாதருக்கும் உபதேசம் செய்த குருமூர்த்தி.

செந்தமிழ் விருப்புமிக்க மதுரை கணக்காயனார் மகன் நக்கீரர்க்கு இலக்கணங்களை அருளியதோடு இக்ஷனிமுகி என்ற பூதத்தால் சிறைப்பட்ட பொழுது தன்னைப் பாட "உலகமுவப்ப" என் ரக்ஷகச் சொல்லமைத்து அடி எடுத்துக் கொடுத்த அருளாளன். இதனை அருணகிரிநாதர் பெருமான் தனது திருப்புகழில்

"வளவாய்மை சொற்ப்பரமந்த முளகீர னுக்குகந்து
மலர்வாயி லக்கணங்க ளியல்போதி
அடிமோனை சொற்கி ணங்க வுலகாமுவப்ப என்று
ளருளால ளிக்கு கந்த பெரியோனே"
என்று அருள்கின்றார்.

"திருமுருகாற்றுப்படை" மிகச் சிறந்த மந்திரசித்தி மிகுந்த பாராயணப் பனுவல், முருகனால் முதற்சொல் எடுத்துக்கொடுக்கப்பெற்று பழுத்த தமிழ் புலமைமிக்க நக்கீர தேவரால் அருளப்பெற்றது. கலிக்கும், சிலிக்கும் தெய்வமான முருகனது திருவருளைப் பெற விழைந்தோருக்கு வழிகாட்டும் ஒளிநெறி கடைச்சங்க நூல்களுள் பத்துப்பாட்டில் முதற்பாடலாய் திகழ்வது. சைவத் திருமுறைகளுள் பதினோராந் திருமுறையில் அமைந்து அருள்நலம் தருவது. "ஆற்றுப்படை" என்பதற்கு வழிப்படுத்துதல் என்பது பொருளாகும். பரிசில் பெற்று வரும் ஒருவன், அது பெறவிழையும் ஒருவனுக்கு பரிசில் வழங்குந் தலைவனுடைய சிறப்புக்களை எடுத்துக்கூறி அவனிடம் செலுத்துவாக அமைக்கப்படும் ஒரு பாவகை. தொல்காப்பியம் புறத்திணை இயல் 36ம் சூத்திரமாகிய "தாவில் நல்லிசை" எனத் தொடங்கும் சூத்திரத்தில்

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருநலம் பெருஅர்க் கறிவுரீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் பகுதியில் தெளிவாக்கப்பட்டுள்ளது. கூத்தராற்றுப்படை, பாணராற்றுப்படை, பொருநராற்றுப்படை, விறலியாற்றுப்படை என ஆற்றுப்படை நூல்களுள் தலைமாணிக்கமாக மதிக்கப்படுவது திருமுருகாற்றுப்படை நூலாகும். திரு என்னும் அடைமொழியுடன் புணர்க்கப்பட்டு வாரி வழங்கும் வள்ளல் வள்ளி மணாளனின் திருவடிமலர்களுக்கு பக்தர்களை ஆற்றுப்படுத்தும் அரியநூல். பலாப்பழத்தின் முள்ளைப்போல் மேலோட்டமாகப் பார்க்கும் பொழுது இறுகிய தமிழ் நடையைக் கொண்டிருந்தாலும் உள்ளே நுழைந்து பார்த்தால் இனிய தேன் சுவையைத் தரவல்லது.

வீடுபெற விழையும் அடியவர்க்கு வீடுபெற்ற அடியவர் ஒருவர் முருகனது மணங்கமழ் இளநலம் சிறந்து நிற்கும் ஆறுபடை வீடுகளை அடையும் நெறியைக் கூறி அங்கு அருள் நலம் பெருக்கும் ஆறுமுகனது திருவோலக்கம் காட்டி, அவ்வருட்காட்சி சுட்டும் அரும்பொருள் கூறி, வள்ளல்பால் சென்றிரக்கச் சென்ற இரவலனையே வள்ளலாக்கி விடும் வன்மையுடையது திருமுருகாற்றுப்படை.

திருமுருகாற்றுப்படை சுட்டும் ஆறுபடை வீடுகளின் சிறப்புக்குறித்து சிறிது சிந்திக்கலாம். முதற்படை வீடாகக் காட்சி தருவது ஓங்கி உயர்ந்து நிற்கும் திருப்பரங்குன்றம். முருகன் ஆறெழுத்திற்கு உரியவன். ஆறு திருமுகங்கள் கொண்டவன். அவன் எழுந்தருளும் படை வீடுகளும் ஆறே.

"ஆறு திருப்பதி கண்டு ஆறு எழுத்தும் அன்பினுடன்
கூறுமவர் சிந்தைகுடி கொண்டேனே"

– கந்தர்கலி –

"திருப்பரங்குன்றத்துச் சேயைப் போற்றுவாம்"
"சீரலைவாய் வரு சேயைப் போற்றுவாம்"
"ஆவிநன்குடி வரும் அமலற் போற்றுவாம்"
"ஏரகத்து அறுமுகன் அடிகள் ஏத்துவாம்"
"குன்று தோருடிய குமரற் போற்றுவாம்"
"பழமுதிர் சோலையம் பகவற் போற்றுவாம்"

என குமரகுருபரரும், கச்சியப்பரும் ஆறுபடை வீடுகளின் சிறப்பைக் கூறுகின்றனர். இவ்வமைப்புமுறை முதலில் பரங்குன்றம், அடுத்துத் திருச்சீரலைவாய், கொங்குநாட்டில் அமைந்துள்ள ஆவிநன்குடி பின்பு மலைநாட்டிலுள்ள திருவேரகம் (இதில் ஏரகம் மலைநாட்டில் உள்ளது என்றும், இல்லை சோழநாட்டிலுள்ள சுவாமிமலையே திருவேரகம் என்று கூறுவாருமுளர்) அங்கிருந்தே குன்றுகள் தோறும் குமரனின் படைவீடுகளாகக் கண்டு "குன்றுதோறாடலும் நின்றதன் பண்பே" என அமைத்து வணங்கினார் நக்கீரர் பெருமான்.

முதற்படை வீடாகக் காட்சி தருவது திருப்பரங்குன்றம். இத்தலத்தை எருக்காட்டூர் தாயங்கண்ணனார், அகநானூற்றிலும், குன்றம் பூதனார், நப்பண்ணனார் முதலியோர் பரிபாடலிலும் திருப்பரங்குன்றத்தை வியந்து போற்றியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமால் முதலிய தேவர் பெருமக்களும் ஆதித்தர் பன்னிருவரும் மருத்துவர் இருவரும், வசுக்கள் எண்மரும், உருத்திரர் பதினொருவரும் ஆகிய முப்பத்துமூவரும், திடகாப்போர் எண்மரும், மற்றைய தேவர்களும் அவுணர்களும், முனிவர்களும், முருகப்பெருமானை தரிசிக்க வருதலால் பரங்குன்றம் இமயமலையை நிகர்த்த சீர்மை பொருந்தியது என நல்லந்துவனார், மருதனின் நாகனார் முதலியோர் புகழ்ந்துரைக்கின்றனர்.

"யாவரும் மறகும் அமரரு மவுணரும்
மேவரு முதுமொழி விழுத்தவ முதல்வரும்
பற்றாகின்றுநின் காரண மாகப்
பரங்குன் றிமயக் குன்ற நிகர்க்கும்

– பரிபாடல் 8 –

திருப்பரங்குன்றம் உயர்ந்த மாடகூடங்கள் நிறைந்து கன்னித் திருநாடாம் மதுரைக்கு மேற்கே அமைந்துள்ளது. அறிமுக வரியிலேயே வீரம் மிகுந்த பாண்டிய மன்னனின் வெற்றித் திரு வீற்றிருக்கும் மதுரை நகர வாயில் சுட்டப்படுகின்றது. அங்கே வானைமுட்டும் நீள் கொடிகள் அசைந்தாடுகின்றன. இன்னும் சிறிது அருகே சென்று நோக்கினால் பந்தும் பாவையும் தொங்கிக் கொண்டிருக்கின்றன. இவை எதற்கு? என்ற கேள்வி நம்முள் எழுகின்றது. பந்தையும் பாவையும் வைத்து விளையாடுபவர்கள் அறியாக் குழந்தைகளாக இருக்க வேண்டும் அல்லது அழகிய பெண்களாக இருக்க வேண்டும். ஆம்... பாண்டிய மன்னன் தன் பகை மன்னரை பந்தும் பாவையும் வைத்து விளையாடும் பேதையராகத்தான் நினைத்தான். மடவார் போல வலிமையற்றவ ராகத்தான் நினைத்தான். அவர்களை இழிவுபடுத்தவே பந்தையும் பாவையும் கட்டியிருந்தான். எனவே அவனது பாண்டிநாடு போரற்றுக் காட்சியளித்தது.

போரில்லாத நாட்டிலே தான் செல்வம் நிறைந்திருக்கும். கோட்டை வாயிலைக் கடந்தால் செல்வத் திருமகள் கொலு வீற்றிருக்கும் கடைத்தெருக்கள் காணப்படுகின்றன. அதனையும் கடந்து சென்றால் அகன்ற தெருக்கள் அழகிய மாளிகைகள், பகையும் பசியும் கடந்த அமைதியான மக்கள், இத்தனைக்கும் சொந்தக்காரன் வீரத்திருமிக்க வழுதியர் கோனே. அவனுடைய தலைநகராம் மதுரை மாநகர்க்கு மேற்கே விளங்குவது திருப்பரங்குன்றம்.

பரங்குன்று – இறைவனின் குணங்குறிகளைக் கடந்த பர நிலையை விளக்குவது. இதனை நக்கீரர் மிகக் குறிப்பாக உணர்த்துவார். குன்றத்தின் அருகே கரிய சேறு மிகுந்த வயல்கள். அங்கே முள் அடர்ந்த தண்டினையுடைய சேற்றினில் கமலங்கள் மலர்ந்து காட்சி தருகின்றன. அம்மலரில் மாலை நேரத்திலே வண்டுகள் தங்கியவுடன் தாமரை இதழ்களை மூடிக்கொண்டு விடுகின்றது. வண்டுகளும் வெளியே வரஇயலாமல் அம்மலரினுள்ளேயே உறங்கிவிடுகின்றன. வைகறைப் பொழுது சிறிதே கமல இதழ்கள் விரிகின்றன. உறங்கி விழித்த வண்டுகள் அருகிலுள்ள நெய்தல் மலரில் சிறிதே தேனை அருந்துகின்றன. அந்நிலையில் கதிரவன் உதிக்க குறைந்த தேனை அருந்திய சுரும்பினங்கள் ஒய்யெனப் பறந்து பரங்குன்றின் உச்சிக்குச் செல்கின்றன, அங்கே சுனையில் மலர்ந்துள்ள மலர்களில் அமர்ந்து நிரம்பத் தேனை உண்டு மகிழ்ச்சியால் ஆரவாரிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிகழ்ச்சியில் முருகனின் இயல்பைக் கூறாது வண்டுகளின் செயலைக் குறிப்பாக நக்கீரர் உணர்த்திய காரணம் என்ன? சற்றுச் சிந்தித்தால் புலனாகும். திருவுருவத்தை வர்ணிக்கும் புலவர் பரங்குன்றில் யாதுமே கூறாதது ஏன்? அடுத்து வரும் படைவீடாகிய திருச்சீரலைவாயில் முருகப்பெருமானது பரங்குன்று ஆறாது தத்துவங்களையும் அதன் மேலும் கடந்து நிற்கும் குமரப்பெருமானின் அருவநிலையாம் பரநிலையை உணர்த்தி நிற்கின்றது.

ஆன்மாக்களுக்கு கேவலநிலை, சகலநிலை, சுத்தநிலை என மூன்று நிலைகள் உண்டு. இருட்கேவலத்தில் கட்டுண்டு அறிவு விளக்கமற்று ஒடுங்கிக் கிடக்கும் ஆன்மாவின் நிலையையே வண்டுகள் தாமரை மலரில் சிறைபட்டிருப்பதை உணர்த்துகின்றது. அறிவு மயங்கி மாயையில் கட்டுண்டு இருக்கும் ஆன்மாவிற்கு உடலைக் கொடுத்த இறைவன் சிறிது அறிவு, விளக்கம் செய்கிறான். இறைவன் தந்த உடலுடன் சிற்றின்ப போகத்தை நுகர்கின்ற ஆன்மா சிறிய நெய்தல் மலரிலுள்ள சிறிய தேனை மாந்துகின்ற வண்டைக் குறிக்கின்றது. பகலவன் உதித்துத் தன் அலர் கதிரால் மலர்களை நன்கு மலர்த்தியவுடன் தினைத்தனை உள்ளதோர் பூவினில் தேனுண்ணாது பறந்து சென்று மலையுச்சிக்குச் சென்று சுனைமலர்களில் நிரம்பத் தேனை உண்ணுகின்றது. அதுபோல சிற்றின்பத்தையே நுகர்ந்து மயங்கும் ஆன்மாக்களைத் தன்திருவடிகாட்டி இறைவன் பேரின்பநெறியில் செலுத்தி அந்நெறி சென்று நினைத்தொறும், காண்தொறும், பேசுந்தொறும் ஆனந்தத் தேன் சொரியும் பேர்இன்பப் பெருநிலையை அடைவிக்கின்றான்.

"இருஞ்சேற் றகல்வயல் விரிந்து வாயவிழ்ந்த
முட்டாட் டாமரை துஞ்சி வைகறைக்
கட்கமழ் நெய்த லூதி ஏற்படக்
கண்போல் மலர்ந்த காமரு சுனைமலர்
அஞ்சிறை வண்டின் அரிக்கண மொலிக்கும்
குன்றமர்ந் துறைதலும் உரியன்"

என்பார் ஆசிரியர். இருட்கே வலத்திருந்த ஆன்மாக்கள் இறையருள் துண்ட சகல நிலையை அடைந்து பின்பு அச்சகல நிலை நீங்கி சுத்தநிலையை அடைந்து மகிழும் அருள் நிலைக்குரியது பரங்குன்றம்.

இரண்டாவதாக இறைவன் உலகமாய் நிற்கும் பருநிலையைச் சுட்டுகின்றது திருச்சீரலைவாய். திருப்பரங்குன்றிலே அருவாய்த் தோற்றமளித்தவன் தலைவாயில் உருவத் திருமேனி தாங்கி ஆறுமுகமும் பன்னிருகரங்களும் கொண்டு மணிமுகம் என்னும் யானையின் மீது எழுந்தருளி காட்சி தருகின்றான். உலகவிளக்கம் அன்பர்க்கு அருளும் திறம், அந்தணர் பூசனை ஏற்றல், காத்தல், தீயோனைச் செறுதல், இன்புறுத்தல் என்னும் அருட் செயல்கள் ஆறும் ஆறுமுகங்களாகவும் அமரருக்குப் பாதுகாப்பளித்தல், இடையில் சேர்த்தல், துடையின் மீது அமர்தல், அங்குசம் கடாவுதல், கேடயம் வேலாயுதம் இவற்றைச் சுழற்றல், மௌனமுத்திரை, மாலையோடு சேர்தல், ஆயுதங்களை சுழலச் செய்தல் பெருமைமிகுந்த மணியை இரட்டல், மழை பொழிவித்தல், தெய்வயானைக்கு மணமாலையைச் சூட்டும் என பன்னிரு கரங்களும் திருமுகங்களுக்கு ஏற்ப வினை புரிகின்றன.

"மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம் ஒருமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்வளர் ஏத்த அமர்ந்தினி தொழுகிக்
காதலின் உவந்து வரங்கொடுத்தன்றே ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ
தந்தணர் வேள்விஓர்க் கும்மே ஒருமுகம்
எஞ்சிய பொருட்களை ஏமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட் டன்றே ஒருமுகம்
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே"

பன்னிரு கரங்களின் தொழில்களைக் குறிப்பிடும்பொழுது

"விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது
ஒருகை உக்கம் சேர்த்தியது ஒருகை
நலம் பெறு கலிங்கத்துக் குறங்கின்மிடை அசைஇய தொருகை
அங்குசங் கடாவ ஒருகை இருகை
ஐயிரு வட்டமொடு எஃகுவலந் திரிப்ப
ஒருகை மார்பொடு விளங்க
ஒருகை தாரொடு பொலிய, ஒருகை
கீழ்வீழ் தொடியொடு மீமின் கொட்ப, ஒருகை
பாடின் படுமணி இரட்ட, ஒருகை
நீனிற விசும்பின் மலிதுளி பொழிய, ஒருகை
வாரை மகளிர்க்கு வதுவை சூட்ட"

என நக்கீரர் குறிப்பிடுவது இறைவன் உலகமாய் "பரு" நிலையாகி நிற்கும் இயல்பைச் சுட்டுவதாகும். அறுமுகமும் பன்னிரு கரங்களும் உலக நிகழ்ச்சி யாவும் செவ்வனே நடைபெறுவதற்காக என்பதால் முருகன் கலப்பால் உலகமேயாகின்றான்.

அடுத்த படைவீடு திருஆவிநன்குடி. இங்கு உலக உயிர்களுக்கு உயிர்க்குயிராகி இறைவன் நிற்கும் நிலையை விளக்குவது, ஆனேறு உயர்த்திட்ட ஐயர்க்கும், அம்மைக்கும் அருமருந்தாகி நிற்கும் அறுமுகப் பரம்பொருளை தரிசிக்க காமமொடு கடுஞ்சினம் கடிந்த முனிவர்கள் முன்பு செல்ல அவர்களைத் தொடர்ந்து மும்மூர்த்திகள், தேவர், கந்தருவர் முதலியோரும் தம்தம் குறைகளில் நிறைவுகாண முருகன் தெய்வயானை அம்மையோடு அமர்ந்து காட்சி தருகின்றார்.

தத்துவங் கடந்த பரிநிலையில் காணப்படும் திருப்பரங்குன்றத்தையும் முருகனது உருவத் தோற்றமாகிய பருநிலையை திருச்சீரலைவாயிலும் கூறிய புலவர் உடனாகி விளங்கும் நிலையை திருஆவிநன்குடியிலே...

"தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்
ஆவிநன்குடி யசைத்து முரியன்" என்று அருட்சக்தியோடு இலங்கும் நிலையைக் காட்டுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து இடம்பெறுவது திருவேரகம். இறைவனின் உண்மை நிலையை பரநிலையாக, பருநிலையாக, உடனிலையாக திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் திருஆவிநன்குடியில் சுட்டிக்காட்டி, வீடுவிழையும் மக்கள் இம்மூவகை நிலையிலே வழிபடுகின்ற தன்மையைக் கூறுகின்றார்.

திருவேரகத்தில் நாற்பத்தெட்டு ஆண்டு மகமசர்யம் காத்து ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் ஆறுதொழிலையும் செய்து ஆகவனீயம், காருகபத்தியம், தகசஹிணாக்னி என்னும் முத்தீ ஓம்பி வரும் அந்தணர்கள் வழிபடுவதைக் கூறுகின்றார் புலவர். அவ்வந்தணர்கள் விரையுறு நறுமலர் ஏந்தி, உச்சிக் கூப்பிய கையினர் ஆகி, ஆறெழுத்து அடக்கிய அருமறை கேள்வி, நா இயல் மருங்கின் நவிலப் பாடுகின்றார்கள்.

இது அருவாய் அருள்தரும் இறைவனுக்குரிய பரநிலை வழிபாடு. இது உணர்த்தப்படுகின்றது. அவர்கள் கரங்களில் ஏந்திச் செல்லும் மலர்கள் கூடி மந்திரங்கள் ஓசையெழாது மனதிற்குள்ளேயே உச்சரிக்கப்படுவதால் விரையுறு நறுமலராக உருவமுடைய மலரில் ஊடுருவி நிற்கும் நறுமணம் கொண்ட அருவ நிலைக்குரிய வழிபாட்டுக்குரியதாகக் காணப்படுகின்றது.

அடுத்து குன்றுதோறும் உரிய குமரவேலைக் குன்றுதோறாடலில் காண்கின்றோம். இது இறைவன் கலப்பால் உலகமாய் நிற்கும் 'பரு' நிலை வழிபாடாகத் தெரிகின்றது. முருகனாய் வேடமிட்ட பூசாரியே வேலனாக அதேநிலையில் தோன்றி வெறியாட்டயரும் சிறப்பினை தரிசிக்கின்றோம்.

அடுத்து பழமுதிர்ச்சோலை இங்கு ஆகமத்திற்கோ, சாத்திரங்களுக்கோ உட்படாமல் நிகழ்த்தும் அன்புவழிபாடு வேண்டினர் வேண்டியாங்கு வழிபடும் வழிபாடு சுட்டப்படுகின்றது. சிறிய தினையரிசியை மலரொடு கலந்து வைத்து ஆட்டுக்கிடாயை அறுத்து கோழிக்கொடியுடனே நிறுத்தி ஊர் ஊர்தோறும் விழா கொண்டாடப்படுகின்றது. குறமகளின் வெறியாடல் வழியாக ஆவேசமான பக்திநிலை புலப்படுகின்றது.

திருவேரகத்தில் அந்தணர் வழிபாட்டிலும் வேலன் வெறியாட்டிலும் முருகன் நேரே வந்ததாகக் கூறாது குறமகளின் வழிபாட்டில் முருகன் வந்ததாகக் கூறுவது உயிரோடு உடனாம் இந்தத் தன்மையை சுட்டும் பொருட்டே எனத் தெளியலாம்.

முருகனின் தோற்றத்தை நூலின் துவக்கத்திலேயே ஒளி வடிவமாகக் காட்டி அருவம், உருவம், அருவுருவமாக ஆறுமுகப்பரம் பொருளை, ஆறுபடை வீடுகளிலும் அமைத்துக்காட்டி அவனது அருளும் அவரவர் பக்குவத்திற்கேற்பக் கிடைக்கும் என ஆற்றப்படுவது திருமுருகாற்றுப்படையின் சிறப்பாகும்.

**சி.கஜானா,**
**உதவி விரிவுரையாளர்,**
**தமிழ்த்துறை,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் கட்டடக்கலையில் கோயில்கள்





உலகின் மிகப்பழமையானதும் மூத்த இனங்களில் ஒன்றான இனம் நம் தமிழினம். நம் இனத்தின் கைவண்ணத்தால் உயர்ந்து நிற்கும் கோபுரங்களும், கோயில்களும், மாளிகைகளும் பழந்தமிழர்களின் கட்டடக்கலை வண்ணத்திற்கு சான்றாக திகழ்கின்றன. கட்டடக்கலையில் சிற்பக்கலையும் ஓவியக்கலையும் பிரிக்க முடியாத ஒன்றாக கலந்த வண்ணம் உள்ளன. கட்டடக்கலையில் முதன்மையாக கோவில் கட்டடக்கலை திகழ்கிறது.

கோயிற் கட்டடக்கலையில் படிப்படியான வளர்ச்சி நிலைகள் உள்ளன.

1) மரத்தளிகள் (மரத்தால் கட்டிய கோவில்கள்)
2) செங்கல், சுண்ணாம்பு, மரம் இணைந்த கட்டடக்கோயில்கள்
3) குகை–குடைவரை கோயில்கள்
4) கற்றளிகள் (கல்லால் கட்டப்பட்ட கோவில்கள்)
5) மண்தளிகள் (மண்ணால் கட்டப்பட்ட கோவில்கள்)

**மரத்தளிகள்**

பெரும்பாலான கேரளாப்பகுதியிலுள்ள கோயில்கள் முழுமையாக மரத்தினால் கட்டப்பட்டன. மரக்கூரை, தூண்கள் பழுதடையா வண்ணம் செம்பிலும், தங்கத்திலும் தகடுகள் வேயப்பட்டன. பிற்காலத்தில் கருங்கல்லுக்கு சில கோவில்கள் மாற்றம் செய்யப்பட்டன.




**செங்கற் கோவில்கள்**

மரக்கோயில்கள் தீயினால் அழியும் ஆபத்தை கொண்டமையால் பிற்காலத்தில் செங்கல், சுண்ணாம்பினால் கோவில்கள் கட்டப்பட்டன. சோழ செங்கணான் சுமார் எழுபதிற்கும் மேற்பட்ட திருக்கோயில்களை செங்கற்களால் கட்டியதாக கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாறைக் கோவில்கள்**

மகேந்திரவர்மன் எனும் பல்லவ மன்னனின் ஆட்சியில் (கி.பி.600 முதல் 630 வரை) கோயிற் கட்டடக்கலை புது மாற்றத்தை சந்தித்தது. பெரிய கற்பாறைகளை குடைந்து குகைக் கோயில்களை (பாறைக் கோயில்) அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இந்தியாவில் விழிப்புரத்தில் உள்ள மண்டகப்பட்டு எனும் ஊரில் பாறைக்கோயில் உள்ளது.



**கற்கோயில்கள்**

பாறைக் கோயில்களுக்கு பின்னர் கற்றளிகள் எனப்படும் கருங்கற்களை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி கட்டப்பட்ட கற்கோயில்கள் எழுச்சி பெறத் தொடங்கியது. மாமல்லபுரத்தில் உள்ள கற்றளியும், காஞ்சியிலுள்ள கைலாசநாதர் கோயிலும் கற்கோயில் வகையை சார்ந்தவையாகும்.

**மாடக்கோயில்கள்**

ஒன்றின் மேல் ஒன்றான ஒன்பது நிலைகளை உடைய மாடக்கோயில்கள் பின்னைய காலத்தில் அமைக்கப்பட்டது. ஆனால் தற்காலத்தில் ஒன்பது நிலைகளும் நிறைய கட்டப்பட்ட மாடக்கோயில்கள் அரிது. ஒவ்வொரு கோயிலும் மானுட உடம்பை ஒத்து கட்டப்படுகிறது. தமிழர் கோயில் கட்டடக்கலையில் ஆறு பெரும் உறுப்புகள் உள்ளன.

1) அதஷ்டாமை (அடி)
2) பாதம் (உடல்)
3) மஞ்சம் (தோள்)
4) கண்டம் (கழுத்து)
5) பண்டிகை (தலை)
6) ஸ்தூபி (முடி)



Vastu Purush Mandala

ஒவ்வொரு கோயிலும் மேற்குறிப்பிட்ட அமைப்பை ஒத்து கட்டப்படுவதால் பஞ்ச பூதங்களின் பரிமாணத்தை எடுத்தியம்பும் கலைப்படைப்பாக கருதப்படுகிறது. ஒவ்வொரு கோயிலும் அமைந்துள்ள கட்டடமும் சிற்பமும் நிலத்தை குறிக்கிறது. கோயில் தீர்த்தக்கிணறு அல்லது திருக்குளம் நீரினைக் குறிக்கிறது. சுடர், ஒளி விளக்குகள் தீயினை குறிக்கையில் அச்சுடர் ஒளியினை நம் கண்ணுக்கு புலப்பட துணை நிற்பது காற்று எனும் பூதமாகும்.

**இந்துக் கோயில்களின் முக்கிய கூறுகள்**

1. **கர்ப்பகிரகம்** – இதை கருவறை என்றும் அழைப்பர். கருவறையினுள்ளே திருவருட் சக்தி நிறைந்த மூலவர் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கும். பொதுவாக கருவறை சதுர வடிவில் அமைக்கப்பட்டு கிழக்கு திசை நோக்கி வாயில் கட்டப்படும்.
2. **விமானம்** – கருவறையின் மேல் கட்டப்படும் கூம்பு வடிவ கட்டடத்தை விமானம் என்று அழைப்பர். விமானத்தின் மேற்பகுதியை சிகரம் என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. **பிரகாரம்** – கர்ப்பகிரகத்திற்கு வெளியே அமைக்கப்பட்ட மூடிய வராந்தை ஆகும். இதன் வழியே வலஞ்சுழியாக பக்தர்கள் சுற்றி வந்து வழிபடுவர்.
4. **மண்டபம்** – கர்ப்பக்கிரகத்திற்கு முன்னே தூண்களால் அமைக்கப்பட்ட கட்டடமாகும். அர்த்த மண்டபம், மகா மண்டபம், நீராட்டு மண்டபம், அலங்கார மண்டபம், சபா மண்டபம் ஆகியன ஆதார மண்டபங்களாக கொள்ளப்பட்டன.
5. **கோபுரம்** – ஆலய வாயிலில் அமைக்கப்படுவது கோபுரமாகும். உயர்ந்த கோபுர வாயிலில் உள்ளே நிறுத்தப்பட்ட பக்கக் கால்களில் நடனச்சிற்பங்கள் சிலவற்றில் செதுக்கப்பட்டிருக்கும். உதாரணமாக சிதம்பர கோயிற் கோபுர வாயில்.

**இந்துக் கோயில்களின் கேத்திரவியல்**

பொதுவாக கோயில்களில் கேத்திரவியல் வாஸ்துபுருஷ மண்டலம் எனப்படும். கேத்திரவியலை அடிப்படையாக கொண்டது. இதன் அடிப்படையாக சதுரமும் (பூமியைக் குறிக்கும்) வட்டமும் (பிரபஞ்சத்தைக் குறிக்கும்) கொண்டதாக காணப்படும். மண்டலம் எனப்படுவது ஒரு சதுரத்தை சிறிய சதுரங்களாக பிரித்து கட்டமாக ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்பாகும். ஒவ்வொரு சிறிய சதுரமும் ஒவ்வொரு கடவுளுக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ளது. பொதுவாக பயன்படுத்தப்படும் மண்டலமானது 64 அல்லது 81 சிறிய சதுரங்களாக பிரிக்கப்பட்ட ஒரு பெரிய சதுரமாகும்.

கோயிலின் அடித்தள வரைபடமானது சதுரத்தின் வெளிப்புறப் பகுதியானது ஆலய சுவற்றினையும். மத்தியிலுள்ள நான்குசதுரங்களும் மூலவர்க்கு ஒதுக்கப்பட்டதாகவும் உட்புற 12 சதுரங்களும் கர்ப்பகிரக சுவற்றினையும் அடுத்த 16 தொடக்கம் 28 சதுரங்களும் பிரகாரத்தையும் குறிக்கிறது. ஒரு சதுரத்தின் இந்த எளிய பிரிவுகள் தான் மிகவும் சிக்கலான அமைப்பை கொண்ட கோயிலின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைகிறது.

**இந்துக் கோயில்களின் சில சிறப்புகள்**

கோயிலின் மூலதெய்வம் அமைந்திருக்கும் பகுதி தான் கோயிலின் மையப்பகுதியாகும். அது தான் பின்னைய நாட்களில் புவியின் காந்த அலைகள் அதிகம் இருக்கும் பகுதியென அறியப்பட்டது. ஆலய கட்டடக்கலை கூறுகளில் சாளரங்கள் காற்றோட்டத்திற்காகவும் வெளிச்சத்திற்காகவும் பொருத்தப்பட்டன. ஆலயச் சாளரங்கள் பொதுவாக சதுர வடிவ அல்லது வட்ட வடிவ துளைகளை கொண்டது. எனினும் சில கோயில்களை கட்டிய சிற்பியர்கள் அவர்களின் சோதிடம், வானியல் மற்றும் சாத்திர அனுபவத்தையும் பயிற்சியையும் கொணடு சிறப்பாக வடிவமைத்துள்ளனர்.



காலை அல்லது மாலையில் சூரிய ஒளியானது ஆலய வாயில் வழியாக பலிபீடம், கொடிக்கம்பம், நந்தி ஆகியவற்றை கடந்து மூலவர் திருமேனியில் குறிப்பிட்ட சில நாட்களில் படுமாறு கட்டடக் கலைஞர்கள் வடிவமைத்துள்ளனர். கும்பகோணம் நாகேசுவர கோயில் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவேதிமுடி வேதபுரீசுவரர் கோயில் காலைக் கதிர்கள் இவ்வண்ணம் படுவதையும், தாரமங்கலம் சிவாலயத்தில் மாலைச் சூரிய ஒளி படுவதையும் காணலாம்.

திருக்கழுக்குன்ற கோயில் கருவறை கலசத்தின் மேல் துவாரமொன்று போடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட ஒரு நாளில் இடி விழும் போது அந்த துவாரம் வழியாக உள்ளே வந்து இலிங்கத்தை சுற்றி வெளிச்சத்தை ஏற்படுத்தும். இதனால் கோயிலுக்கு எந்த சேதமும் ஏற்படுவதில்லை. இரண்டாம் இராஜராஜன் கட்டிய தாராசுரம் ஐராதீசுவரர் ஆலயத்தில் ஒரு சிறப்புண்டு. இவ்வாலயத்தில் பலிபீட மண்டபம் ஒன்று உள்ளது. இதில் 10 படிகளைக் கொண்ட கருங்கல்லாலான இசைப்படிக்கட்டு உள்ளது. இந்த இசைப்படிகளில் கல்லால் தட்டுகையில் க,ம,ப,த,நி,ச,ரி,க என்ற சங்கராபரண ராக ஸ்வரங்களை கேட்கலாம்.

ஆலயத் தூண்கள் கட்டடக்கலையையும் சிற்பக்கலையையும் சிறப்பாக காட்டக்கூடிய அம்சமாக காணப்படுகிறது. சிற்பியர்கள் தூண்கள் வாயிலாக சில நுட்பங்களை புலப்படுத்தியுள்ளனர். சதுரத் தூண்கள் நான்முகனிற்கும், எண்கோணத் தூண்கள் திருமாலுக்கும், வட்டத்தூண்கள் அல்லது பதினாறு பட்டைத் தூண்கள் உருத்திர சிவனுக்கும் என்று தொடர்புபடுத்தியுள்ளனர். கல்லால் ஆன தீபத் தூண்களும், அகல்விளக்கு தூண்களும் பல்லவர் காலத்தில் செதுக்கப்பட்டுள்ளன. இசைத் தூண்கள் எனப்படும் சிறப்பும் பழந்தமிழர் கட்டடக் கலையில் மிக முக்கிய இடத்தை வகிக்கிறது. தூண்களில் இசையொலிகள் உண்டாகுமாறு அவற்றை ஒரு வகை இசைக் கருவிகள் போல் அமைத்துள்ளனர்.



மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் கோபுரத்திற்கு அருகிலுள்ள 5 இசைத் தூண்கள் கலைநுட்பம் வாய்ந்தவை. இவற்றில் எழும் சுரத்தின் கிளைச் சுரங்கள் பக்கத்திலுள்ள இசைத் தூண்களில் இருந்தும் அதிர்வுகளால் தாமாகவே ஒலிக்கின்றன. இவ்வாறு அறிவியலையும், வானியலையும், கணிதவியல், சிற்பம், கட்டடக் கலை, சமூகவியல் என அனைத்தையும் ஒருமித்து கொண்ட நம் பண்டைய தமிழரின் நுண்ணறிவையும் ஆளுமையையும் பாராட்டி, போற்றி நம் கட்டடக் கலைகளை பாதுகாக்க வேண்டியது நம் தலையாய கடமையல்லவா?

மூலம் : Prathamesh Gurme x Uday Patil (2022) : A Review study on Architecture of Hindu temple : Vol-8 : Issue-4.

: நா.பார்த்தசாரதி (1992): பழந்தமிழர் கட்டடக்கலையும் நகரமைப்பும்.

**க.தர்சிகா,**

**இணைந்த சுகாதார விஞ்ஞான கற்கைகள் பீடம்,**

**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் சிற்பக்கலை உணர்வு



மனிதன் படைத்த கலைகளுள் மிகச் சிறந்தது சிற்பக்கலை என்பர். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இக்கலை வளர்ந்து வருகின்றது. மனித நாகரிகத்தையும் அதன் வளர்ச்சியையும் எடுத்துக்காட்டும் சிற்பக்கலையை விட சிறந்தது வேறொன்றில்லை. கட்டடக் கலையைவிட சிற்பக் கலை நுட்பமானது. மனிதன், விலங்கு, பறவை, மரம், செடி, மலை, கடல் முதலிய இயற்கை உருவங்களையும், கடவுள், தெய்வம், தேவர், அரக்கர் முதலிய கற்பனை உருவங்களையும் அழகுபட அமைப்பதே சிற்பக் கலையாகும். நமது கோயில்களிலே சிற்பக் கலை பெரிதும் இடம் பெற்றிருக்கிறது. சிற்பஉருவங்கள் அமையாத கோயிற் கட்டடங்கள் இல்லை என்று கூறலாம். கோயிலின் தரை, சுவர், சிகரம், கோபுரம், மண்டபம், தூண்கள், வாயில் நிலைகள் முதலிய கட்டடங்களின் எல்லா இடங்களிலும் சிற்ப உருவங்கள் அமைந்துள்ளன.

தமிழ் நாடுகளின் தொன்மை வரலாற்றை அம்மக்கள் வளர்த்த சிற்பக்கலை வழியாகவே பெரிதும் அறிய முடிகின்றது. கல், உலோகம், செங்கல், மரம் முதலியவற்றைக் கொண்டு கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் உருவங்கள் அமைக்கும் கலையே சிற்பக்கலை எனலாம். அதனை வடிப்பவன் சிற்பி எனப்படுவான்.

**"கல்லும் உலோகமும் செங்கலும் மரமும்**
**மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும்**
**கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை**
**பத்தே சிற்பத் தொழிற்குறுப் பாவன"**

என்று திவாகர நிகண்டு கூறுகிறது.

**சிற்பங்களின் வகைகள்**

சிற்பங்களை அவற்றின் உருவ அமைப்பு அடிப்படையில் முழு உருவச் சிற்பங்கள், புடைப்புச் சிற்பங்கள் என இரண்டாகப் பிரிக்கலாம். உருவத்தின் முன்பகுதியும் பின்பகுதியும் தெளிவாகத் தெரியும் வகையில் முழு உருவத்துடன் அமைந்த சிற்பங்களை முழு உருவச் சிற்பங்கள் என்றும், வடிவத்தின் முன்புறம் மட்டும் தெரியும்படி அமைக்கப்பட்ட சிற்பங்களை புடைப்புச் சிற்பங்கள் என்றும் வகைப்படுத்துவர். தெய்வ உருவங்கள், இயற்கை உருவங்கள், கற்பனை உருவங்கள், முழு வடிவ உருவங்கள் என நான்கு நிலைகளில் உலோகத்தினாலும் கல்லினாலும் சிற்பங்கள் அமைக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டுச் சிற்பங்களின் சிறப்பியல்புகளில் ஒன்று ஆடற்கலை இலக்கணங்கள் அவற்றில் அளவாய் அமைந்துள்ள நிலையாகும். இவ்விரு கலைகளுமே கோயில்களால் வளர்க்கப்பட்டமையால், இவை எளிதாக கைவரப்பெற்றன. சிற்ப வடிவங்கள் நின்றாலும், அமர்ந்தாலும் கிடந்தாலும் வேறெந்த அமைதியில் தோன்றினாலும், அவை பெரும்பாலும் ஆடற்கலை இலக்கணத்தையொட்டி அமைந்திருப்பதைக் காணலாம். சிற்பிகள் ஆடற்கலை இலக்கணத்தை நன்கு அறிந்து தம் கலையுணர்வு, கற்பனைத் திறன் கலந்து அமைப்பதால், தெய்வத் திருமேனிகள் நிறுவப்படும் இடத்துக்குத் தக்கவாறு கலையழகை மட்டுமன்றி அவ்வடிவ அமைப்புகளின் உட்கருத்தையும் உணர்த்தும் வகையில் உள்ளன.

தமிழகத்தில் பல்லவர்களின் மாமல்லக் குகைக் கோயில் சிற்பங்கள் வரலாற்றுப் புகழ் பெற்றவை. பாண்டியர் கால சிற்பங்களும் தமிழகச் சிற்பங்களின் கலைத்திறனுக்குச் சான்றாய் விளங்குகின்றன. தமிழகத்தில் சோழர்காலக் குடந்தை நாகேசுவரர் கோயில், தஞ்சைப் பெரிய கோயில், கங்கை கொண்ட சோழீச்சுரம், தராசுரத்து ஐராவதேசுவரர் திருக்கோயில் ஆகியவற்றிலுள்ள சிற்பங்கள் உலகப் புகழ் பெற்றவை. இவை சிற்பக் கலை வளர்ச்சியையும், அக்கலையில் தமிழகச் சிற்பிகள் பெற்றிருந்த பெருந்திறனையும் உலகுக்கு உணர்த்துவன.

### 1. பல்லவர் கால சிற்பக் கலை

தமிழகத்தில் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு கி.பி. 6ஆம் நூற்றாண்டு முதல் 9ஆம் நூற்றாண்டு வரை தொண்டை மண்டலத்தை ஆட்சி செய்தவர்கள் பல்லவப் பெருவேந்தர் களாவர். இவர்களே தமிழகத்தில் கோயில்களைக் குடைவித்தும் கட்டுவித்தும் அவைகளில் சிற்பங்கள் பலவற்றைச் செதுக்கியும் தமிழகத்திற்குக் கற்கோயில்களை அறிமுகம் செய்தவர்கள் ஆவர்.

பல்லவர்களின் கோயில் அமைப்பு மூன்று வகைப்படும்.

1. குடைவரைக் கோயில்
2. கட்டட வகைச் சிற்பம் அல்லது ஒற்றைக் கற்கோயில்
3. கட்டுமானக் கோயில்



கால வளர்ச்சியில் இவை ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றியவை. இக் காலத்தில் சுதையினாலும் கருங் கற்களாலும் சிற்பங்கள் அமைக்கப்பட்டன. கோவில் தூண்கள் சிற்பங்களால் அழகு பெற்றன. தூண்களில் யாழி, சிங்கம், தாமரை மலர், நுட்பமான வேலைப்பாடுகள் நிறைந்த வட்டங்கள் போன்றவை பொறிக்கப்பட்டன. மாமல்லபுரம், காஞ்சிபுரம், திருச்சி மலைக்கோட்டை போன்ற இடங்களில் காணப்படும் பல்லவர் கால சிற்பங்கள் சிறந்த கலை நுட்பத்துடன் அமைந்தவை.

### 2. பாண்டியர் கால சிற்பக் கலை

பாண்டியர் காலத்தில் அமைக்கப்பட்ட குகைக்கோவில்களில் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்துள்ளன. பாண்டியர்கள் குடைவரைகளைத் தொடங்கியது முதல் கருவறைகளில் இறையுருவைத் தவறாது இடம்பெறச் செய்துள்ளனர். ஒற்றைக்கல் இரதமான கழுகுமலை வெட்டுவான் கோயில் இன்றளவும் மிகச் சிறப்பான ஒரு படைப்பாகக் கருதப்படுகிறது. காரணம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு ஒற்றைக்கல் இரதங்கள் பாண்டிய நாட்டில் தோற்றுவிக்கப் படவில்லை என்பதுவே. மேலும் கலை அழகு வாய்ந்த, எழிலார்ந்த சிற்பங்களைக் கொண்டு விளங்குவதால் அது தென்னக எல்லோரா என்று சிறப்பிக்கப்படுகிறது.



**கழுகுமலை வெட்டுவான் கோயில்**

### 3. சோழர் கால சிற்பக் கலை

சிற்பக் கலையின் பொற்காலம் எனக் கருதப்படுவது சோழர் காலம். இவர்களது கோயிற் கட்டடக் கலையும் சிற்பக் கலையும் பல்லவ பாண்டியர் கலைகளில் இருந்து வளர்ச்சி அடைந்தவை ஆகும். சோழர்கள் மிக உயர்ந்த விமானங்களைக் கட்டினர். கோபுரங்களைச் சிறியதாக அமைத்தனர். பரிவார தேவதைகளுக்கு முக்கியத்துவம் அளித்தனர். பெரும் பான்மையும் கோயிலின் அனைத்துப் பகுதிகளையும் கல்லினால் கட்டினர். சோழர்கள் கட்டடத்திற்கும் சிற்பத்திற்கும் அதிக முக்கியத்துவம் அளித்தனர்.சோழர்களின் சிற்பங்கள் பொதுவாகப் புராணக் கதைகளை விளக்குவதற்காக மட்டும் அமையாது ஏதேனும் ஒரு கருவை மையமாக வைத்துப் படைக்கப்பட்டு இருக்கும்.

எடுத்துக்காட்டாக இராசராச சோழன் பெற்ற பெரும் வெற்றிகளால், தான் கட்டிய தஞ்சைப்





பெரிய கோயிலுக்குத் தனது பெயராலே இராச ராசேச்சுரம் என்று பெயரிட்டான். தமிழகத்தில் உள்ள சைவக் கோயில்களிலேயே மிகப் பெரிய விமானம் உடையது பெரிய கோயிலாகும். இக்கோயிற் கருவறையில் உள்ள சிவலிங்கமும் மிகப் பெரிதாக உள்ளது. தமிழகக் கோயில்களில் மிகப் பெரிய சிவலிங்கங்கள் இந்த தஞ்சைப் பிரகதீசுவரர் கோயிலிலும், கங்கைகொண்ட சோழபுரத்துக் கோயிலிலும் அமைந்துள்ளன. பெரிய கோயிற் கருவறையில் உள்ள சிவலிங்கத்தின் உயரத்திற்கு ஏற்பக் கருவறையின் முன்னே இருபுறமும் துவார பாலகர் சிற்பங்கள் சுமார் பன்னிரண்டு அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

### 4. விஜயநகர–நாயக்க மன்னர்களது சிற்பக்கலை

விஜயநகர – நாயக்க மன்னர்களது காலத்தில் கோயில்களில் சிற்பங்கள் பெரிதும் போற்றப்பட்டன. இச்சிற்ப அமைப்புகளைச் சுதைச் சிற்பங்கள், கல் சிற்பங்கள் என இரண்டாகப் பிரிக்கலாம். இவைகளில் சுதைச் சிற்பங்கள் கோயில் விமானத்தின் தளங்களில் இடம்பெற்றன. சுதைச் சிற்பங்கள் இடம்பெறும் விமானங்களின் உயரத்தைச் சுருக்கியும் கோபுரங்களின் உயரத்தைக் கூட்டியும் இவர்கள் அமைத்ததால் சுதைச் சிற்பங்களைக் கோபுரங்களில் அதிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவில் காணலாம். கற்சிற்பங்கள் பெரும்பாலும் மண்டபங்களில் தூண்களை ஒட்டி ஆளுயரச் சிற்பங்களாக அமைக்கப்பட்டன. இவை தவிரத் தூண்களின் சதுரப் பகுதிகளிலும் கற்சிற்பங்கள் இடம்பெற்றன.

### 5. நவீன கால சிற்பக்கலை

கலை வரலாற்றில் விஜயநகர – நாயக்கரது ஆட்சிக் காலத்திற்குப் பின் தோன்றி வளர்ந்த கலையை இக்காலக் கலை எனலாம். இதிகாசங்களான இராமாயணம், மகாபாரதம், வைணவ சமயம் தொடர்பான பாகவதம், சைவ சமயம் தொடர்பான சிவ புராணம் முதலிய கதைகளின் அடிப்படையில் மரபு சார்ந்த சிற்பங்கள் செதுக்கப்பட்டன. இவை திறமை மிக்க வல்லுநர்களால் கல், உலோகம், மரம் முதலான பொருட்களில் செய்யப்பட்டன. அவ்வாறு செய்யப்பட்ட சிற்பங்கள் சமயங்களோடு தொடர்புடையனவாக இருந்தமையால் பெரும்பான்மையும் கோயில்களில் இடம் பெற்றன. இக்காலத்தில் நவீனச் சிற்பங்கள் குறிப்பிட்ட பொருள்களில் தான் படைக்கப்பட வேண்டும் என்ற சமயச் சார்பான கட்டுப்பாடுகள் உடைபட்டுவிட்டன. மரபு சார்ந்த உருவம் அல்லது இறையுருவம் என்று இல்லாமல் படைப்பாளியின் மனத்தில் தோன்றும் எந்தக் கருத்துக்கும், உணர்ச்சிக்கும் வடிவம் தருவதாக நவீனச் சிற்பம் தோற்றம் பெறுகிறது. நவீனச் சிற்பங்கள் புதிய கருத்துகளின் அடிப்படையில் உருவாக்கப்படுகின்றன.

காவியப் புலவர் கற்பனைகளை அமைத்து நூல் எழுதுவது போலவே, சிற்பக் கலைஞரும் தமது கற்பனைகளினாலே பலவகையான சிற்பங்களை அமைக்கிறார்கள். சிற்பக் கலைகள், கண்ணையுங் கருத்தையும் கவர்ந்து மனத்திற்கு இன்பங் கொடுக்கும் இனிய கலைகள். அவற்றின் அழகும் அமைப்பும் எல்லோருக்கும் உணர்ச்சி கொடுத்து மகிழ்வூட்டுகின்றன. ஆனால், அவற்றில் சிறிது கருத்தூன்றிக் காண வேண்டும். சற்றுக்கலைச்சுவையும் இருக்கவேண்டும். இக் கலையுணர்வு பெற்றோர், அழகிய கலைப்பொருள்களைக் காணுந்தோறும் புதியதோர் இன்ப உலகத்திலே வாழ்கிறார்கள்.

மூலம் :- அ. தட்சிணாமூர்த்தி. (1994). தமிழர் நாகரிகமும் பண்பாடும். சென்னை: ஐந்திணைப் பதிப்பகம்.

**இ.சர்மிலா,**
**தொழிநுட்ப பீடம்,**
**கொழும்பு பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவமும் தமிழும்



நவீனம் கண்ட நவநாகரிக
உலகினில் தவழும் மாந்தருள்
மண் மணம் மாறா மனமும்
சைவமும் தமிழும் கலந்த
தேன் சுவையும் இன்றுவரை
இப்பூவுலகில் தேன் பாடும்
பண் இசையும், நா பாடும்
பண்பின் இசையும் இயைந்து
கலை, கலாசாரம் இணைந்து
இன்றும் தமிழ் மணம் கலந்து
பண்டிகை பண்பு இயம்ப
விரதமும், நன்நாட்களும்
நயம்பட நைவேத்தியத்துடன்
இறைவனின் துதி பாடி
மங்கல சின்னமும்
மந்திர எண்ணமும் என்றும்
நம் சமுதாயத்தில் ஓங்கி
வளர்ந்த ஆலமரமாய்
நாம் அறிவோம் தமிழ் இசை
பார் எங்கும் பறைசாற்ற
கொழுகொம்பாய் சைவமும்
தலையசைத்த கதை கேட்ட
சந்ததி நாம்
என்றும் எதிர்காலம்
தளைத்திடும் சைவத்தில்
திளைத்திடும் தமிழில்

த.சஜீவன்,
பொறியியல் பீடம் (2020),
பேராதனைப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குறிஞ்சிக் குமரன்

குறிஞ்சி குமரனவன் குறமகளின் மணவாளன்
அறிஞர் வாழ்வதற்கு அணியான திருமகனான்
நெறியால் மனமுருகி கெடும்பத்தி தனைக்கொண்டு
அறிவோம் அவனருளை அவனியில் உய்வடைவோம்.

கலியுகத்தின் வலியதனை கருணையுடன் அதைவிலத்தி
கிலிகொள்ளும் நிலைநீக்கி கிட்ட எம்மை அணைத்து நிற்கும்
கடம்பகத்தான் பகைமுடித்து கருணை மழை சொரிந்திடுவோன்
தடம்மொற்றி திடம்கொள்வோம் தரணியில் உயிர் வாழ்வோம்.

சூரன் உரம் அறுத்து சூழும் வினை முடித்து
ஆரம் தடம் பொருத்து ஆடும் மயில் இடத்து
வீரன் முருகன் உகந்து வீரும் கிடைக்க செய்யும்
சூரன் அவன் அருளில் தீமைகள் அகன்றிடுமே.

ஆறுமுகமான முருகா முருகா !
ஆறுதல் தருவாயே மருகா மருகா !
சூழும் வினையறும்பிய முருகா முருகா !
வீழும் நிலை தடுப்பாய் மருகா மருகா !

குறிஞ்சிக் குமரனே முருகா முருகா !
வறியவர்க்கும் வரம் தருவாய் மருகா மருகா !
குறிதவறாய் கூர்வேலா முருகா முருகா !
அறிந்து உந்தன் அருள் பெறுவோம் மருகா மருகா !

**சி.நிஜன்,**
**பொறியியல் பீடம் (2020),**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனை கடவுள் படைத்தானா? இல்லை கடவுளை மனிதன் படைத்தானா?



இதை நான் எந்த மதத்தையும் தாழ்வு படுத்தும் நோக்கிலோ ஒருவரின் நம்பிக்கையை அழிக்கும் நோக்கிலோ கடவுள் இல்லை என்பவருக்கு கடவுள் இருக்கிறான் என உணர்தலோ இல்லை. கடவுள் இருக்கிறான் என்பவற்றுக்கு கடவுள் இல்லை என்று உணர்துவதற்காகவோ இதை எழுதவில்லை. எனது மனதில் இத்தனை நாட்களாக ஓடிக்கொண்டிருந்த பல கேள்விகளை எனது பேனா மையின் மூலம் இந்த சமூகத்தில் தெளிப்பதே எனது ஒரே ஒரு எண்ணம்.

நான் யாழ்ப்பாணத்தில் உள்ள நல்லூர் பிரதேசத்தை சேரந்தவன். எனது வசிப்பிடம் நல்லூர் ஆலயத்திற்கு மிக அருகாமையில் உள்ளது. எனவே தினமும் ஆறு வேளை முருகனின் மணி ஒலி எனது காதுகளில் ஒலிக்கும். அதனாலோ என்னவோ தெரியவில்லை எனக்கு கடவுள் நம்பிக்கை உள்ளது. ஆனால் நானும் மனிதன்தானே அதனால் என்னுள் ஒரு சந்தேகம் எழும். அதாவது கடவுள் இருக்கிறானா? இல்லையா? என்று.

பொதுவாக மனிதன் என்பவன் கண்ணெதிரே பார்த்து உணராத பொருள் ஒன்றை நம்பமாட்டான். என்னதான் கடவுள் பார்த்துக்கொள்வார், கடவுள் உதவுவார், கடவுள் இருக்கிறார் கடவுள் மன்னிப்பார் என்று சொன்னாலும் கூட கடவுள் இருக்கின்றார் என்பதற்கான தேடல் மனிதனிடமும் தனிப்பட்ட ரீதியில் இருந்து கொண்டுதான் இருக்கிறது. அத்தேடல் இப்போதைய காலகட்டத்தில் அதிகமாக உள்ளது.

நாம் பிறந்ததில் இருந்து இறக்கும் வரை நாம் செய்யும் செயல்கள் பல சம்பிரதாயங்கள் பலவற்றில் கடவுள் நம்பிக்கை புதைந்து காணப்படுகிறது. எமது பெற்றோர்கள், ஆசிரியர்கள் என பலர் எமக்கு பல புராணக் கதைகள் சொல்லி இருக்கிறார்கள் உதாரணமாகக் பல ஆண்டுகளாக மூடி இருந்த கதவு தேவாரங்கள் பாடியவுடன் திறந்தது, மழை இல்லாது வரண்டு போய் இருந்த பிரதேசத்தில் யாகம் செய்து தேவாரம் பாடியவுடன் மழை பெய்தது, சுந்தரர் முதலை உண்ட பாலகனை தேவாரம் பாடி உயிர்ப்பித்தார், பணத்தேவைக்காக தேவாரம் பாடி செங்கட்டிகளை பொன்கட்டிகள் ஆக்கினார் என பல்வேறு புராணக்கதைகளை கூறி இருக்கிறார்கள். நான் ஒரு இந்து சமயத்தவன் என்பதால் எனது உதாரணங்கள் இந்து சமயத்தை சார்ந்ததாக உள்ளது. இவ்வாறு ஒவ்வொரு மதத்திலும் பல்வேறு கதைகள் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று உலகில் பல்வேறு பிரதேசத்தில் பல மக்கள் மழை இல்லாததால் பயிர்கள் விளையாது பசியாலும் பட்டினியாலும் இறக்கிறார்கள். அந்த காலத்தில் யாகம் செய்து தேவாரம் பாடியவுடன் மழை கொடுத்த கடவுள் இன்று ஏன் தேவாரம் பாடி யாகம் செய்யும் போதும் அந்த மழையை கொடுத்து மக்களின் பசியை போக்கவில்லை. எத்தனை நாட்டு மக்கள் பணம் இன்றி வறுமையால் இறந்து போகிறார்கள். அவர்கள் மண்கட்டியை எடுத்து வைத்து தேவாரம் பாடும் போது இன்று அது ஏன் பொன்கட்டியாக மாறவில்லை. இன்று எத்தனை இளைஞர்கள் பாம்பு, முதலை போன்ற உயிரினங்களால் அகால மரணம் அடைகிறார்கள். அவர்கள் முன் தேவாரம் பாட அவர்கள் ஏன் உயிருடன் எழவில்லை. அன்று தேவாரம் பாடியவுடன் எல்லாவற்றையும் செய்த கடவுள் இன்று ஏன் செய்யவில்லை. இதற்கு காரணம் அன்றைய காலத்தில் மக்கள் மனதில் இருந்த பக்தி இன்று இல்லை என்பதனாலோ இல்லை. அன்றைய காலம் தொட்டு அவரகள் எமக்கு சொன்ன கதைகள் எல்லாம் கட்டுக்கதை கடவுள் என்பதே கட்டுக்கதை என்பதனாலேயோ எவர் அறிவார் உண்மையான காரணம்.

மகாபாரதம் எனும் பெரும்புராணத்தில் பிள்ளை பெறும் பாக்கியத்தை இழந்த குந்திதேவி தேவர்களை நோக்கி மந்திரத்தை கூறியவுடன் அவர் பிள்ளைகளை பெற்று கொள்கிறார். இன்று எத்தனை பேர் பிள்ளைகள் இன்றி கவலை படுகிறார்கள். அவர்கள் அவ்மந்திரத்தை கூற அவர்களால் மட்டும் ஏன் பிள்ளை செல்வத்தை அடைந்து கொள்ள முடியவில்லை.

இவ்வாறான காரணங்களால் தான் எனது மனதில் கடவுள் இருக்கிறாரா என்ற எண்ணம் தோன்றியது. இதில் நான் எதை நம்புவது? என்னுள் தோன்றும் எண்ணங்களையா? இல்லை எமது முன்னோர்கள் சொன்ன கதையையும் கடவுளையுமா? இந்த கேள்விக்கான பதிலை உங்களிடமே விடுகிறேன்.

நாம் இவ்வாறு எவ்வளவு காரணம் சொன்னாலும் மனித சக்திக்கு மேற்பட்ட ஒரு சக்தியாகத்தான் இருக்க வேண்டும். மனிதர்கள் இடையே ஒரு பொய்யானதொன்றை பரப்பி இருந்தால் அது சிறிது காலத்தில் அழிந்திருக்கும். ஆனால் இவ்வளவு ஆயிரம் ஆண்டுகள் தாண்டியும் கடவுள் என்ற நம்பிக்கை எம்மிடையே இப்பொழுதும் இருக்கிறது என்ற நம்பிக்கை உண்மைதானே.

எனது மனதில் ஒரு கதை ஒன்று தோன்றுகிறது. ஒரு பாடசாலையில் கடவுள் நம்பிக்கை அற்ற ஒரு புவியியல் பாட ஆசிரியர் இருந்தார். அவர் ஒரு நாள் தனது மாணவர்களுக்கு பாடம் எடுத்தார். அவர் அப்போது கூறினார், இந்த பிரபஞ்சம் என்பது தானாக உருவாகியது. இதை நீங்கள் நினைப்பது போல் யாரும் படைக்கவில்லை என கூறினார். இதை அங்கே இருந்த ஒரு மாணவனால் ஏற்றுகொள்ளமுடியவில்லை. அதே போல் தனது எண்ணத்தை ஆசிரியரிடம் எவ்வாறு உணர்துவது என்றும் தெரியவில்லை. அன்று ஆசிரியர் அவர்களுக்கு ஒரு வீட்டு பாடத்தை கொடுத்தார், நாளை எல்லோரும் உலகப்படம் வரைந்து வரும்படி, அடுத்தநாள் எல்லோரும் ஆசிரியர் கூறியதை போல வரைந்து கொண்டு வந்தார்கள். ஆனால் அந்த மாணவன் மட்டும் ஒரு வெள்ளைத் தாளில் நிறப் பென்சிலில் கிறுக்கிவிட்டு மற்றைய மாணவர்களை போல் ஆசிரியரின் மேசையில் தான் கொண்டு வந்ததையும் வைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் அவனது படத்தை பார்த்து விளக்கம் கேட்ட போது அவன் அந்த தாளில் தன்பாட்டில் ஒரு பென்சில் கிறுக்குப்பட்டு அது தற்செயலாக வந்திருக்கும் என கூறினான். அதற்கு ஆசிரியர் கோபமடைந்து தண்டிக்க சென்ற போது அவன் இந்த பிரபஞ்சமே யாரும் இல்லாமல் தன்பாட்டில் உருவாகிய போது இவ் கிறுக்கல் சித்திரம் எம்மாத்திரம் என வினாவினான். ஆசிரியரால் ஒன்றும் கூறமுடியாது வாயடைத்து போய் நின்றார்.

நாம் சற்று சிந்தித்து பார்க்க வேண்டும். நாம் இருக்கும் இந்த உலகம் இன்னும் கொஞ்சம் சூரியனுக்கு அருகில் இருந்திருந்தால் அனைத்து ஜீவராசிகளும் எரிந்து போய் இருக்கும். இன்னும் கொஞ்சம் தொலைவாக இருந்திருந்தால் எல்லா ஜீவராசிகளும் உறைந்தே இறந்திருக்கும். எனவே இந்த பூமி, சூரியனில் இருந்து ஒரு ஒழுங்கான இடத்தில் அமைதிருக்கும் என்றால் காரணம் யார் இறைவன் தானே.

நாம் எல்லோரும் தினமும் கடவுளைப் பார்கிறோம், பேசுகிறோம். ஆனால் நாம் அதை ஏற்றுகொள்கிறோம் இல்லை. நான் என்ன கூறுகிறேன் என்றால் நாம் இந்த பூமியில் பிறக்க வேண்டும் என்று தன் அத்தனை வலியையும் பொறுத்துக்கொண்டு பத்து மாதங்கள் தவமிருக்கும் உன் தாய் ஒரு கடவுள். உனக்காக தன் வாழ்வை அர்பணிக்கும் தந்தை ஒரு கடவுள். நாம் படித்து முன்னேறி கொண்டு செல்ல ஒரே நிலையில் இருந்து தான் பெற்ற கல்வியை நமக்காகத் தரும் ஆசிரியர் ஒரு கடவுள். நாம் மூன்று வேளை உணவு உண்பதற்கு மழை வெய்யில் பாராது சேற்றில் இறங்கி உழைக்கும் விவசாயி ஒரு கடவுள். உன் நல்லது கெட்டதில் பங்கேற்கும் சகோதரர்கள், நண்பர்களும் கடவுளுக்கு சமனானவர்கள் தான்.

இப்படி பலவற்றை எல்லாம் சிந்தித்து எனது மனதில் எழும் எண்ணத்தை மனிதனை கடவுள் படைத்தான் என்று நம்பி என் சிந்தனைகளுக்கு ஒரு அணைக்கட்டை போடுகிறேன். நீங்களும் உங்கள் சிந்தனையை அலைய விட்டு கடவுள் இருக்கிறான் என்பதை நம்புங்கள்.

**ஞா. நந்தபாலன்,**
**பொறியியல் பீடம் (2020),**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிவியல் என்பது ஆற்றல்களின் ஆரம்பமா? அழிவுகளின் ஆரம்பமா..?

அடுத்த நூற்றாண்டில் மனித குலம் இருந்தால் தானே அதனின் சவால் என்ன என்று ஆராய வேண்டும். போகின்ற போக்கைப் பார்த்தால் இந்த ஐயம் எழாமலில்லை.

கடந்த 3 நூற்றாண்டுகளில் விஞ்ஞானம் அது சார்ந்த அறிவியல் கண்டுபிடிப்புகள் வளர வளர ஆக்கிரமிப்புக்களும் அழிவுகளும் கூடவே வளர ஆரம்பித்து விட்டன. மனிதனின் ஆக்கிரமிப்பு பல உயிரினங்களை நாசஞ்செய்து விட்டது. அமெரிக்காவில் ஆஷ்டெக என்ற சாம்ராஜ்ஜியம் சாம்பல் குவியலாகி விட்டது. செவ்விந்தியர் எனப்படும் அமெரிக்க குடிமக்கள் கிட்டத்தட்ட அழிந்து விட்டார்கள். பல அபூர்வ விலங்குகள், பூமியின் சுவாசக் காடுகள் இருந்த இடமே இல்லாமல் போய் விட்டன. மனிதனின் நுண்ணறிவு எதைச்சாதித்தது...? இனி 7ம் அறிவு விழித்துக் கொண்டால் ஞாயிற்றுத் தொகுதியில் பூமி இருந்த இடத்தில் பொத்தல் விழுந்திருக்கும்.

அமெரிக்காவின் வல்வடித்தளம் 20ம் நூற்றாண்டில் 2 ஜப்பான் நகரங்களை 1000 ஆண்டுகளானாலும் மீள முடியாத அளவு ஒழித்தாயிற்று. ஏரின் பின்னது உலகம் என்று சொன்ன உயிர் வேலி இப்போது இல்லை. ஒவ்வொரு நாடுகளும் அழிவாற்றல் சோதனையில் ஜல்லிக்கட்டு ஆடுகின்றன. தங்கள் வல்லமையை நிரூபிக்க அழிவுப்போட்டி ....வரும் நூற்றாண்டுகளில் மண்ணும் மனித விதையும் இருக்குமா...? மிஞ்சுமா...?

ஆராய்ச்சி விஞ்ஞானிகளுக்கு மனித குலத்தின் இருப்பு உயிரினங்களின் இருப்பு உயிரினங்களின் இருப்பு பற்றிய பிரக்ஞை இல்லையா...? எதைப் பேண எதைச் சாதிக்க ...? யாருக்காக இந்த அசுர வேட்டை....?

மனிதனுக்கு உண்மையான முன்னேற்றம் உண்டாக வேண்டுமானால் மனிதனுக்கே சவாலாகும் மனிதனின் அழிவாற்றல் செயற்பாடு கட்டுப்படுத்தப் படவேண்டும். வானை உடைத்து ஊடுருவிச் செல்ல வளர்ச்சி பெற்றதென்றாலும் மனித அழிவிற்கும் அதுவே ஆயுதமாகி விட்டதே... ஐன்ஸ்டைன் தன் வாழ்நாளின் தான் கண்டுபிடித்த சார்புக் கொள்கையை ஏன் வெளியிட்டோம் என மிக மிக வேதனைப்பட்டாராம்....

ஏனெனில் அணுவைப்பிளந்து அழிவுச் சக்தியை வெடியாக்கும் அடுத்த கட்டத்திற்கு அந்தக் கண்டுபிடிப்புத் தானே ஆதாரமாக இருந்தது....? எனவே ஆக்கத்திறன்கள் இனிவரும் காலங்களிலாவது அழிவுக்கு மாற்றாக ஆற்றல்களிற்கு வழியமைக்க முடிந்தால் நன்றியுடன் முழு உயிரும்....

**செ.ரிக்ஷோபிகா,**
**பொறியியல் பீடம் (2020),**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலும் கணிதமும்



தூய கணித தாலாட்டுகளில்
தொட்டில் குழந்தையாக தவழ்ந்து கொண்டிருந்த வேளையிலே
c=0 ஆன இதயங்களின் மோதல்
உருவாகியது combined காதல்.

எப்போதுமே delta புன்னகையுடன் கூடிய
நீள்வளைய முகம்
பரவளைவாள இரு புருவங்கள்.

எளிதில் நெருங்க முடியா நிலைக்குத்து அணுகுகோடு
அவள்.
முடிவிலியிலாவது நெருங்கி விட வேண்டும் என
முடிவெடுத்து விட்டேன்.

அவள் நினைவுகள் மெய்யச்சில் நகர
என் கனவுகள் எப்போதும் கற்பனை அச்சிலேயே கிடக்க
காதல் எனும் ஆகன் தளத்தில்
அலைந்து திரியும் சிக்கலெண் நான்.

வாழ்க்கை எனும் சட்டப்படலில்,
உன்னால்,
சில இடங்களில் இழுவைகள்
சில இடங்களில் உதைப்புகள்
போவின் குறியீடு பொய்த்துப் போன தருணங்கள்.

காதல் என்கிற சாய்தள சமநிலையில்
சறுக்க கூடாது என பிடிவாதமாய் இருந்தேன்
இதய இணைகோடு வழியே ஏற்பட்ட இழுவையால்
கவிழ்ந்து விட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளாக நாளாக $\frac{dy}{dx} > 0$ ஆகும்,
காதலின் சார்புகள்.

என் காதல் வட்டங்கள் தோறும்
உன் தொடலிப் பார்வைகள்.
அவை மறுபடியும் என்னைத் தீண்டாதா
என்ற பேராசையில் கிடக்கின்றேன்.

இறுதியாக,
அவள் செல்லும் பாதைகளே
என் ஒழுக்குகளாக
மாறிவிட்டது.

**ப.ரஜீவ்,**
**பொறியியல் பீடம் (2020),**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**

சந்தமிகு செந்தமிழில் மாலை தொடுத்தேன்
செந்தில் வளர் கந்தனிடம் தூதுவிடுத்தேன்
அந்தமிகு குகன்நெஞ்சில் இடம் பிடித்தேன்
ஆறுமுகன் பேரழகைப் படம் பிடித்தேன்

வண்ணமயில் வாகனத்தில் வேல் முருகன்
வள்ளி தெய்வயானையுடன் மால் மருகன்
தென்னகத்தில் வாழுகின்ற சிலையழகன்
என்னகத்தில் காட்சிதந்தான் கலை அழகன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து தர்மத்தின் மீதான அறிவியல் பார்வை



இந்து மதம் உலகின் பழமையான மற்றும் விரிவான மரபுகளைக் கொண்டுள்ளது. இது ஒவ்வொருவருக்கும் சுய-உணர்தல் மற்றும் கடவுள்-உணர்தல் ஆகியவற்றின் மூலம் உயர்ந்த ஆன்மீகத் தத்துவங்களை வலியுறுத்துகிறது. இந்து மதம் இலங்கை, இந்தியாவில் மட்டுமல்ல, கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளில் கூட தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே இதை வெறும் இந்து தர்மம் என்று அழைக்காமல் சனாதன தர்மம் என்று அழைப்பதே பொருத்தமானது என்கின்றனர் தத்துவவியலாளர்கள். இந்து மதத்தை "அறிவின் நித்திய வழி" என்று கூட மொழிபெயர்க்கலாம். ஏனெனில் தர்மம் என்ற சொல் ஞானத்தையும், பண்பாட்டையும் குறிக்கிறது. இப்படிப்பட்ட அறிவார்ந்த இந்து மதத்தினுள் பொதிந்துள்ள விஞ்ஞானத்தை நாம் ஆராய வேண்டும். இந்து தர்மம் வெறும் வெளிப்புற அல்லது தனிப்பட்ட நம்பிக்கையாக அல்லாமல், மாறாக உள் தேடலை ஊக்குவிக்கின்றது. இந்து தத்துவ நூல்கள் மேற்கத்திய தத்துவாக்கத்திற்கு முந்தியவை என்று கூறப்படுகிறது. இந்து தர்ம நூல்கள் ஆழமானவையாக உள்ளன. ஆனால், இதை மேற்கத்திய சிந்தனையின் வாயிலாக புரிந்து கொள்வது மட்டும் கடினமாக உள்ளது. தத்துவ பேச்சு, மத நம்பிக்கை என்று மட்டும் இல்லாமல் வாழ்க்கையின் மர்மங்களுக்குள் அழைத்துச் செல்லக் கூடிய ஒரு ஆழமான மதமாக திகள்கின்றது . இந்து மதம் மனதை ஒருமுகப்படுத்தும் தியானத்தை ஊக்குவிக்கின்றது. ஆன்மீகம், ஆயுர்வேதம், வேத ஜோதிடம், வாஸ்து, இசை, கோயில் கட்டடக் கலை, ஓவியம் என்று தனிப்பட்ட ஒரு அந்தஸ்தை இந்து மதம் நிலை நாட்டியுள்ளது . நமது இந்து மதம் கலை, இசை, அறிவியல் இவற்றை ஒரு போதும் அசுத்தமானது என்று நிராகரிக்கவில்லை. மாறாக கலைகளை ஊக்குவித்துள்ளது . மற்றும் யோகா செய்வதை வலியுறுத்தியது. இந்த தியான அடிப்படையிலான தத்துவங்கள் விஞ்ஞானம் மற்றும் அறிவியல் முன்னேற்றத்திற்கு கிடைத்த மிகப்பெரிய பரிசு என்றே கூறலாம். எனவே இந்து மதம், அர்த்தமுள்ள மதம் என்று அனைவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய விடயமே நவீன உலகம் முன்னேற ஆழமான கருத்துக்களின் மையப் புள்ளி இந்து மதம் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

**த.ஹரீஸ்ராஜ்,**
**பொறியியல் பீடம் (2021),**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திரம் தரும் அறிவு



சைவ சித்தாந்தத்தின் பெருமையை சைவ அறிஞர் உலகம் போற்றி புகழும். மேலும் வேதத்தை பொது என்றும் சைவ ஆகமத்தை சிறப்பு என்றும் கூறுவர். அத்தகைய சைவ சித்தாந்தத்தின் பன்னிரு திருமுறைகளில் பத்தாவது திருமுறையாக திருமந்திரம் அமைந்துள்ளது. இந்நூலை தமிழ் மூவாயிரம் அல்லது திருமந்திரமாலை என்றும் கூறுவர். மந்திரம் என்றால் எண்ணுகின்றவனை, மனத்தினுள் கொள்பவனை காப்பது என்று பொருள். இந்நூல் படிப்பவர்களுக்கு பக்தித் திருவையும், சித்தித் திருவையும், சிவத் திருவையும் தந்து அருள்வது என்பதற்கு இதன் தலைப்பே சான்றாகும்.

உலக நிலையில் மெய்யறிவுத் தவத்தில் உண்மையும் முதன்மையும் பெற்றுத் திகழ்ந்தவர் பெருஞ் சித்தர் திருமூலர். தாம் படைத்த மெய்யறிவுக் கொடையான இத்திருமந்திர நூலை "இறைநூல்" என்றும் "தமிழ்ச் சாத்திரம்" என்றும் கூறியுள்ளார்.

தனது நூலை ஒன்பது பிரிவுகளாகப் பிரித்து ஒன்பது தந்திரங்கள் எனப் பெயர் சூட்டியுள்ளார்.அவற்றை பொருள் நோக்கில் ஆராய்ந்து பார்க்கும்போது ஒவ்வொன்றும் ஒவ்வொரு நூல்போலவே தோன்றுகின்றது. ஒவ்வொரு தந்திரமும் பற்பல தலைப்புக்களைக் கொண்டிருப்பது திருக்குறள் நூலை நினைவு கூர்கின்றது.

தொல்காப்பியரில் தொடங்கி இதுவரையில் உள்ள அறிஞர் அனைவருக்கும் மாந்தர்க்கு ஆறு அறிவு என்றே கூறியுள்ளனர். திருமூலர் மட்டுமே பத்தறிவு என்று கூறியுள்ளார். ஊறு, சுவை, ஒளி, மணம், ஓசை எனும் ஐந்தறிவுடன் இவற்றைக் கொண்டு மனத்தால் உணரும் அறிவு – ஏழாவது அறிவு, கற்றும் கேட்டும் பெறுகின்ற அறிவு எட்டாவது அறிவு, உண்மை இயலை அனுபவித்து இறையறிவோடு கலந்து உணர்வது ஒன்பதாவது அறிவு, இந்த ஒன்பது அறிவையும் கொடுக்கின்ற கடவுளறிவு (சிவஞானம்) பத்தாவது அறிவு என்கிறார்.

இந்நூலிலே வெளிப்படும் கருத்துக்கள் காரிருளைப் போக்கும் கதிர்ச் சுடர்களைப் போன்றவைகளாகும். படிப்பவருக்கு புதுமையும் புரட்சியும் தருவனவாகும்.புறச் சமயக் கருத்துகளைப் பழிக்கக்கூடாது என்று அறிவுறுத்துவனவாகும். மெய்யறிவுத்தவம் செய்வதால் வியக்கத்தக்க வெற்றிகளைப் பெறுவதோடு இறவாத பெறுவாழ்வையும் பெறமுடியும் என்பதைத் தம் வாழ்வால் விளக்கிக் காட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமூலர் திருமந்திரத்தில் கல்வி செல்வத்தின் சிறப்பையும் பயனையும் தெளிவாகக் கூறுகின்றார்.

கல்வியாவது சிவானுபவத்தைத் தரும் கல்வி.

“குறிப்பறிந்து தேனுடல் உயிரது கூடிச்
செறிப்பறிந் தேன்மிகு தேவர் பிரானை
மறிப்பறி யாது வந்துள்ளம் புகுந்தான்
தறிப்பறி யாமிகுங் கல்வி கற்றானே” (தி.ம.290)

மானிடப் பிறவியாகிய எமது உடல் வந்த காரணத்தை அறிந்தேன். ஆன்மாவாகிய உயிர் அவ்வுடலோடு பொருந்தி செறிந்துள்ளதையும் அறிந்தேன். அதனால் தேவதேவனாகிய இறைவனும் எவ்விதமான தடையுமின்றி எமதுமன இயக்கத்தின் மூலமாகிய ஆன்மாவை தனக்கு இடமாக்கிக் கொண்டான். ஆதலால் எவ்வித மாற்றுக் கருத்துமில்லாது இறைவனின் அருளோடு மிகுகின்ற அனுபவ அறிவைப் பெற்றேன் என்கிறன்றார்.

“நிற்கின்ற போதே நிலையுடையான் கழல்
கற்கின்ற செய்மின் கழிந்தரும் பாவங்கள்
சொற்குன்றல் இன்றித் தொழுமின் தொழுதபின்
மற்றொன்றில்லாத மணி விளக்கே” (தி.ம 292)

எமது உடலில் உயிர் உள்ள போதே உடல் நிலையாமை உணர்ந்து உயிருக்கு உறுதி பயக்கும் நிலையான பொருளான இறைவனுடைய ஞானத்தை பெற முயலுங்கள். இதனால் உங்களுடைய பாவங்கள் நீங்கி விடும். சொல்லில் வழுவின்றி இறைவனை துதியுங்கள். அப்படித் துதித்தால் ஒப்பிட்டுக் கூற முடியாத சுய சோதியான சிவன் விளங்கித் தோன்றுவான்.

இறைவழிபாடு செய்வோர்க்கு தூய்மையான சோதி துணையாக வரும். நல்ல பிரணவம் அவர்களுக்குத் துணையாக விளங்கும் சுக்கிலம் கெடாது தூய்மையுற்று உடலுக்கு உறுதுணையாக ஒளியாகி நிற்கும். பிராணவக் கல்வியே பிறவியில் துணையாய் இருந்து வீடு பேற்றை அளிக்கும். எனவே இத்திருமந்திர நூல் நாம் கற்ற கலையை நாம் சார்ந்த சமுதாயத்திற்கு எடுத்து செல்வது நமது கடமையாகும் என்பதை நன்கு வலியுறுத்திக் கூறுகிறது.

**ச.துர்க்கா,**
**பொறியியல் பீடம் (2021),**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் இறை நம்பிக்கை



தமிழர்கள் பல சமயங்களைப் பின்பற்றி வாழ்ந்து வருகின்றனர்.இன்றும் சைவம், வைணவம், புத்தம், சமணம், இஸ்லாமியம், கிறிஸ்துவம் போன்ற பல சமயங்கள் தமிழர்களிடம் பரவி இருக்கின்றன. ஆனால் சமயங்களை வேண்டாம் என்பவரும் சமய நெறிகளைப் பின்பற்றாதவர்களும் கூட வாழ்ந்து வருகின்றனர். சமயம் என்பது மிகப் பழமையானது. சமயம் என்ற ஒன்று தமிழர்களிடம் எப்பொழுது தோன்றியது என்பதை அறுதியிட்டு கூற இயலாது. ஆனால் இறை நம்பிக்கை என்பது பண்டுதொட்டு தமிழர்களிடம் இருந்து வந்துள்ளது.

தமிழர்கள் எப்பொழுது தனித்தனிக் குடும்பங்களாக வாழத் தொடங்கினார்களோ அப்பொழுது அவர்களிடம் இறைவன் நம்பிக்கை ஏற்பட்டது என்று கூறலாம். மனிதர்களின் மனதில் தோன்றிய அச்ச உணர்வே தெய்வ நம்பிக்கையை உண்டாக்கியது எனலாம். எனினும் தெய்வ நம்பிக்கை தோன்றிய காலத்தைக் கணக்கிட முடியாது தொல்காப்பியர் காலத்திலேயே பல தெய்வ வழிபாடு இருந்துள்ளதைச் சான்றுகளின் வழிக் காணலாம்.

மாயோன் மேய காடடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெரம மணல் உலகமும்
முல்லை ,குறிஞ்சி ,மருதம், நெய்தல் எனச்
சொல்லிய மறையாற் சொல்லவும் படுமே"

என்கின்ற நூற்பாவின் மூலம் திருமால், முருகன், இந்திரன், வருணன் போன்ற தெய்வங்களை வழிபடுவதை அறியமுடிகிறது.

எனவே இறை வழிபாடு என்பது தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே இருந்திருக்கக் கூடும் என்பதும் இறைநம்பிக்கை என்பது இருந்த காரணத்தினாலேயே தொல்காப்பிய நூற்பாவில் இறைவன் பெயர்கள் இடம் பெறுவது கொண்டு இறைவழிபாட்டின் பழமை பற்றி அறியமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் கொற்றவை என்னும் பெண் தெய்வ வழிபாட்டினையும் முக்கால மக்கள் கொண்டு இருந்தனர் என்பதனை தொல்காப்பியம்,

"மரம் கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் அகத்திணைப் புறனே"

என்ற நூற்பா விளக்குகிறது. (கொற்றவை துர்க்கை அல்லது காளி). இவை மட்டுமல்லாது மக்கள் இயற்கைப் பொருள்களையும் இறைவனாகவே நினைத்து வழிபட்டார்கள்,அதனையும் தெய்வமாகக் கருதி போற்றினார்கள் என்பதனையும் நாம் தொல்காப்பியத்தின் வழியே அறிய முடிகின்றது.

இதனைத் தொல்காப்பியம்,

"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் மன்னிய மூன்றும்
கடவுள் வாழ்த்தோடு கண்ணிய"

என்பதனைக் கொண்டு இயற்கை இறைவழிபாட்டினை நாம் உணர முடிகிறது. எனவே பழங்காலத்தில் இயற்கையை இறைவனாகக் கருதி மக்கள் வழிபட்டார்கள் என்பதற்கு இது ஒரு சான்றாக அமைகின்றது. மேலும் பழந்தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்தார்கள் என்பதையும் நாம் பெறமுடிகின்றது.

இதிலிருந்து இறை நம்பிக்கை ஆனது தமிழர்களிடத்தில் பண்டுதொட்டு இருந்து வந்துள்ளது என்பதை அறிய முடிகின்றது. இப்போதுள்ள சமயங்கள் பல வித்தியாசங்களை தம்மிடையே கொண்டிருந்தாலும் அது வெளிப்படுத்தும் முதற்பொருள் இறை நம்பிக்கையை தவிர வேறொன்றும் இல்லை. ஏதோ வழிமுறையில் நம்மிடையே தோன்றிய இவ் இறை நம்பிக்கை நம் மனதை பண்படுத்தி நல்வழியை காட்டும் ஒரு சக்தியாக மாறியுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை ஆகும்.

**ஆ.பேபிஷாமினி,**
**பொறியியல் பீடம் (2021),**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் திருநாள் என்று அழைக்கப்படும் பொங்கல் திருநாள்



தமிழர்கள் எண்ணற்ற விழாக்களை கொண்டாடி மகிழ்கின்றனர். அவற்றில் மிகவும் முக்கியமான விழாவாக கொண்டாடப்படுவது தமிழர் திருநாள் என்று அழைக்கப்படும் பொங்கல் திருநாள் ஆகும்.

இப்பண்டிகை தமிழ் கலாச்சாரத்தை உலகிற்கு உணர்த்தும் திருவிழாவாகக் காணப்படுகின்றது. வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட தமிழர் தம் இறைவனான சூரியனுக்கு நன்றி செலுத்தும் விதமாக கொண்டாடுகின்றனர். இப்பொங்கல் பண்டிகையானது நான்கு நாட்கள் கொண்டாடப்படுகின்றது. பொங்கல் திருநாள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.பொங்கல் பண்டிகையின் முதல் நாள் போகி ஆகும். பழையன கழிதல் புதியன புகுதல் என்பது போகி தினத்தின் சாராம்சமாகும்.தமிழர் தம் வேளாண்மைச் சுழற்சியில் கடைசி நாள் இதுவாகும். இது மார்கழிக் கடைசி தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. தற்போதைய காலங்களில் வீட்டில் உள்ள பழைய பொருட்களை மாற்றும் தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது. பொங்கல் பண்டிகையின் பிரதான தினம் இதுவாகும்.

தைப் பொங்கலானது இரண்டாவது பொங்கல் தினமாகும். குறிப்பாக தை மாதத்தின் முதல் நாள் கொண்டாடப்படுகின்றது. விளைவித்த பயிர்களை அறுவடை செய்ய அத்தனை நாளும் உழவர் தமக்கு உதவிய சூரியனுக்கு பொங்கல் வைக்கும் தினமாகும். அன்றைய தினம் குளித்து புத்தாடை அணிந்து நண்பர்களுடனும் உறவினர்களுடனும் இணைந்து கொண்டாடி மகிழ்வர்.வேளாண்மைக்கு உறுதுணையாக இருக்கும் விலங்குகள் மற்றும் கால்நடைகளுக்கு நன்றி கூறும் விழா மாட்டுப்பொங்கல் ஆகும். இது மூன்றாம் நாள் விழாவாகும்.குறிப்பாக இந்நாளில் விவசாயத்திற்கு உறுதுணையாக இருக்கும் காளை மாட்டிற்கும், இல்லத்தை செழிப்புற செய்யும் பசு மாட்டிற்கும் பொங்கலிடும் நாளாகும்.அன்றைய தினம் மாடுகளின் இடங்கள் சுத்தம் செய்யப்பட்டு, மாடுகளை குளிப்பாட்டி, கொம்பு சீவி, வண்ணம் பூசி, உழவுக்கருவிகள் அனைத்தையும் வைத்து படையல் வைத்து பொங்கி மகிழ்வர்.

நான்காவது நாள் கொண்டாடப்படும் விழா கன்னிப்பொங்கல் என்று அழைப்பார்கள். இதில் உற்றார் உறவினரை சந்தித்தல், பெரியோர்களிடம் ஆசி பெறுதல், விளையாட்டுகள் போன்ற நிகழ்ச்சிகளுடன் மகிழ்ச்சியாக கொண்டாடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கல் தினத்தில் வாழ்த்து அட்டைகள் பரிமாறிக் கொள்ளும் பழக்கம் உள்ளது. அச்சுப் பதிக்கப்பட்ட வாழ்த்து அட்டைகளுக்கு பதிலாக தற்போது குறுஞ்செய்திகள் பரிமாறப்படுவது அதிகமாக உள்ளது.நவீன வளர்ச்சியின் காரணமாக தொலைத்தொடர்பு வளர்ந்து வருவதால் இந்த மாற்றம் நிகழ்ந்துள்ளது. எனினும் பொங்கல் பண்டிகையில் வாழ்த்துக் கூறும் சாராம்சம் மாறவில்லை.

பொங்கல் தினத்தில் தமிழ்ப் பெண்கள் பல வகைக் கோலங்களைப் போட்டு விழாவைச் சிறப்பிப்பார்கள். ரங்கோலிக் கோலம் உட்பட பல கோலங்கள் போடப்படும். நாகரீக வளர்ச்சியில் கலாசாரத்தின் தாக்கம் மற்றக் கலாசாரத்தின் மீது படிவது சாத்தியமான ஒன்றாகும். ஆனால் பொங்கல் பண்டிகை மற்றைய கலாசாரத்தைத் தம்முடன் இணைத்துக் கொண்டு மென்மேலும் சிறப்புப் பெறுகின்றது. இதற்குச் சான்றாகவே விதம் விதமான கோலங்களைத் தமிழ்ப் பெண்கள் போடுவதைத் தமிழ்க் கலாசாரம் ஒருபோதும் தடுப்பதில்லை.

இவ்வாறாக பொங்கல் பண்டிகையானது கோலாகலமாகக் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகின்றது. பொங்கல் பண்டிகை தமிழர்களின் நன்றி மறவாமை பண்பினை உலகிற்கு பறை சாற்றுவதாகவும் உள்ளது.

**வே.பவிந்திரன்,**
**பொறியியல் பீடம் (2021),**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



பழநி பரங்குன்றம் திருச்செந்தூர்
பழமுதிர் சோலையுடன் சுவாமி மலை
அழகிய திருத்தணிக்கை மருதமலை
ஆலயங்கள் யாவையும் காட்டுவித்தான்

தங்கரதம் ஒன்று இங்கு அசைந்து வரச்
செந்தில் வளர் கந்தனுமே கொலுவிருக்க
நங்கை மலர் தெய்வானை வள்ளியுடன்
நான் வணங்கும் திருக்கோலம் காணுங்களேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவமும் அறிவியலும்



சைவ சமயத்தின் மையத்தில் இக்கால அறிவியல் உண்மைகள் உள்ளன. சைவ சமயத்தின் ஒவ்வொரு தத்துவமும் விஞ்ஞானத்துடன் பிணைந்துள்ளது. இதனை நம் நாட்டார் மட்டுமல்லாமல் மேனாட்டாரும் ஒப்புக்கொண்டுள்ளனர். இதோ சத்குரு சிவாய சுப்ரமுனியசுவாமி கூறுவதைக் கேட்போம். பெயரை பார்த்ததும் இது நம்ம ஊர் சாமி என முடிவு கட்ட வேண்டாம் சாமி அச்சு, அசல் அமெரிக்கர், கலிபோர்னியாவில் உள்ள ஒக்லாந்தில் பிறந்தவர். இளமையிலேயே சைவத்தின் பால் ஈர்க்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் தீட்சை பெற்றுத் துறவி ஆனவர். இவர் என்ன சொல்கிறார்:

"வருங் காலத்துக்கும் வளம் கூட்டும் சமயம் சைவம். தொழில் நுட்ப யுகமாகிய இந்தக் கால கட்டத்துக்கு வேறெந்த மதத்தையும் விட மிகப் பொருந்தி வரக்கூடிய ஒரே மதம். இது, முழுக்க முழுக்க இக்கால அறிவியலோடு ஒத்துப் போகும் தன்மை உடையது."இன்னோர் அமெரிக்கர், சமய வல்லுநர், திபெத்திய புத்தமத ஆய்வாளர், யோகா வல்லுநர். இவருடைய கருத்து: "அறிவியல் அடிப்படையில், தர்க்க ரீதியில் பிரபஞ்சத்தை அலசி ஆயும் பண்பு சைவ சித்தாந்தத்துக்கு மட்டுமே உண்டு."

சைவ சித்தாந்தத்தில் தேர்ச்சி பெற்ற மலேசிய இளைஞர் சிவ.பரமசிவம் என்பவர் எழுதுகிறார்: "சைவ சமயமும் அறிவியலும் நட்புறவாகவே உள்ளன. ஒன்றுக்கொன்று ஆதரவாகவும் இருக்கின்றன. சைவ சித்தாந்தம் உரைக்கும் உண்மைகளை அறிவியல் ஆய்வாளர்களும் அறிவியல் கண்டுபிடிப்புகளும் உறுதிப்படுத்துகின்றன."ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். மேலே சோற்றுப் பருக்கைகள் மூன்று கொடுத்துள்ளேன். போதும் அல்லவா! அவர் சொன்னார் இவர் சொன்னார் என்று அடுக்குவதை விட நாமே நேரே சென்று காண்பது நல்லது தானே! எப்பொருள் யார், யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது தானே அறிவு.

சைவ சமயமும் அறிவியலும் இரு பெருங் கடல்கள். இவற்றுள் மூழ்கி முத்தெடுப்பது எளிதன்று. நம் ஆய்வைக் குறுகிய வட்டத்துக்குள் கொண்டு வந்தால் ஒழிய இது சாத்தியம் ஆகாது. எனவே நம் ஆய்வுப் பொருளாக அண்டம், பிண்டம் என்ற இரு பிரிவுகளை மட்டும் எடுத்துக்கொள்வோம். அண்டத்துள் பிண்டம் அடங்கும் பிண்டத்துள் அண்டம் அடங்கும்.இதனை, சட்டமுனிஞானம் என்னும் சித்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அண்டத்தி லுள்ளதே பிண்டம்
பிண்டத்தி லுள்ளதே அண்டம்
அண்டமும் பிண்டமும் ஒன்றே
அறிந்துதான் பார்க்கும் போதே" என்பார்.

சைவ சமய ஞானிகளும் பலர் உளர் அத்தனை பேர்களையும் இங்குக் கொண்டுவரும் வல்லமை வல்லமைக்கும் இல்லை அடியேனுக்கும் இல்லை. ஆகவே அவர்களுள் இருவரை மட்டும் தேர்ந்தெடுப்போம். யாரைத் தேர்ந்தெடுக்கலாம்? அண்டம், பிண்டம் பற்றி அதிகமாக யார் பேசி இருக்கிறார்களோ அவர்களை! அவர்கள் திருமூலர் என்னும் திருமூல நாயனார். (திருமூல சித்தர். என்றொருவர் 16–ஆம் நூற்றாண்டில் இருந்திருக்கிறார் என்பதைக் கவனத்தில் கொள்க) மற்றவர்: மாணிக்கவாசகர் முன்னவர் பிண்டம் பற்றிப் பேசுகிறார் பின்னவர் அண்டத்தைப் பற்றி அழகாகக் கூறுவார். இக்கருத்தை முக்கோணமாகக் கற்பனை செய்து பார்க்கலாம். சைவசமயம் – அறிவியல் இணைந்த படுக்கைக் கோடு இடப்பக்கச் சாய் கோடு: திருமூலர் காட்டும் பிண்டம் வலப்பக்கச் சாய் கோடு : மாணிக்கவாசகர் விளக்கும் அண்டம். இவ்விரு சாய் கோடுகளும் மேல் நோக்கிச் செல்லுகின்றன. அவை இணையும் போது சைவ சமயம், அறிவியல் மையம் என்ற உச்சி கிடைக்கும்.

இக்கால மருத்துவ இயல் கூறும் கருவியல் முதல் யோக சாத்திரங்கள், சைவ சித்தாந்தத் தத்துவங்கள், அறிவியல் கருத்துகள்... எனப் பலவும் இதில் பரந்து விரிந்து கிடக்கின்றன. காட்டாக ஒன்றைக் காட்டுகின்றேன் அட்சரேகைகளை முதல் முதலில் எகிப்திய வானநூல் அறிஞர் டாலமியின் வரைபடத்தில் காண்கிறோம். அவர் கி.பி. 150–இல் வாழ்ந்தவர். ஆனால் தீர்க்கரேகைகளையோ 18–ஆவது நூற்றாண்டில் தான் காண்கிறோம். இதில் வியப்பு என்னவென்றால் இதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இது குறித்துத் திருமூலர் அறிந்திருக்கிறார். அவர் இரண்டு திருமந்திரப்பாடல்களில் (2701,2708) மேரு, தில்லை (சிதம்பரம்), இலங்கை ஆகிய மூன்றும் ஒரே நேர்க் கோட்டில் (தீர்க்கரேகை) இருப்பதாகப் பாடுகிறார்! கற்பனைக் கதை இல்லை இது. அறிவியல் (புவியியல்) உண்மை. சிவன் இருக்கும் கைலாய மலை மேரு. இதில் இருந்து கீழ் நோக்கி நேரக் கோடு வரைந்தால் அது சிதம்பரம் (சிவத்தலம்) வழியாகச் செல்லும். இக்கோட்டின் வலப்பக்கம் மேரு (கைலாய) மலை இருக்கும் இடப்பக்கம் எக்காலத்தும் சிவ பூமியாக விளங்கும் இலங்கை இருக்கும்.

**செ.கஜநிலானி,**
**பொறியியல் பீடம் (2021),**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் நமசிவாய
# சிவனும் சிதம்பரமும்



இந்தப் பிரபஞ்சத்தின் தோற்றமானது வெறும் வெற்றிடத்தையே ஆதாரமாக கொண்டுள்ளது. ஒரு தொடக்கமே முடிவாகிறது. ஒன்றின் முடிவே இன்னொன்றின் தொடக்கமாகிறது. இந்த நிகழ்வு முடிவில்லாதது அறிவியலும் ஆன்மீகமும் ஒன்றிணையும் இந்தப் புள்ளியின் ஆதாரமாய் ஒரு தத்துவம் விளங்குகிறது. அதுதான் இன்றுவரை பல ஆராய்ச்சியாளர்கள் தேடிக்கொண்டிருக்கும் பல சித்தர்கள் புரிந்து கொண்ட சிவ தத்துவம். உண்மையில் பிரபஞ்ச தத்துவமும் சிவதத்துவமும் என்ன? அதற்கான ஒற்றுமை என்ன? இவற்றை ஒன்றிணைக்கும் புள்ளி எது? என்ற கேள்விகளுக்கெல்லாம் ஆதியாக ஒருவன் இருக்கிறான். அவன் தான் ஈசன். எதற்கான பிரதிபலிப்பாய் இருக்கிறான் என்ற கேள்விக்கு எது இல்லாததோ அது தான் சிவம் என்ற பதில் கிடைக்கிறது. பிறக்கும் ஒவ்வொன்றும் அது பிறக்கும் இடத்திலேயே முடிவடைகிறது. தன்னுள் தோன்றும் எதுவும் தன்னுள்ளேயே முடிவடைகிறது என்ற சிவ தத்துவத்தை ஒற்றை வரியில் விளக்குவது என்பது சித்தர்களுக்கே முடியாத காரியம். எவன் ஒருவன் தன் மெய்யை மறந்து தன்னை மறந்து தியான நிலையில் ஞான நிலையை அடைகிறானோ அவனே வாழ்வில் உன்னத நிலையை அடைகிறான் என்பது சிவனால் சொல்லப்படும் ஒரு தத்துவம். அறிஞர்களும் சித்தர்களும் அவரவர் நிலையில் இச்சிவதத்துவத்தை எடுத்துரைத்தாலும் அவர்கள் அனைவரும் இறுதியில் சொல்வது ஒன்றைத் தான். அன்பெனும் பிடிக்கு மட்டுமே சிவம் பிடிபடும். மற்றபடி சிவத்தை அடைவது பெரும்பாடு எனச் சொல்கிறார்கள். சித்தன் போக்கு சிவன் போக்கு என்பது நாம் அனைவரும் அறிந்த ஒரு முதுமொழி ஆகும். சிவனின் போக்கு என்றுமே சமநிலை என்னும் அன்பை மட்டுமே போதிக்கிறது. இதைத்தான் திருமூலர் தனது பதிகத்தில் அன்பே சிவம் என்கிறார்.

அதாவது,

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆறும் அறிகிலார்

என சிவமும் அன்பும் ஒன்று என எடுத்துரைக்கும் இப்பதிகத்தில் அடுத்த வரிகள் சிவனின் தத்துவத்தை எடுத்துரைப்பதாக அமைகின்றன.

அதாவது,

அன்பும் சிவமாவது ஆறும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே
எனக் கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனிவர்கள் தம்மை வருத்தி தவம் செய்வது எம் அனைவருக்கும் ஒன்றை மட்டுமே எடுத்துரைக்கின்றது. அதாவது நான் எந்தச் செயல்களையும் அர்ப்பணிப்போடு செய்யும் போது நம்மை எந்தத் தடைகளும் தடுக்காது, எமது கருமத்தில் வெற்றி கிடைக்கும் ஆனால் இறையை உணர வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும் என்பதை திருமூலர் பின்வரும் பாடலில் குறிப்பிடுகின்றார்.

அதாவது,

"என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனலில் பொரிய வறுப்பினும்
அன்போடு உருகி அகம் குழைவார்க்கு அன்றி
என்போல் மணியினை எய்த வொண்ணாதே"

அதாவது உயிர்கள் தமது உடலை கொடூரமாக வருத்திக்கொண்டு தவம் புரிந்தாலும் தமது உடலையே தீயிட்டு யாகம் புரிந்தாலும், தூய்மையான உண்மையான அன்பு அவர்களது உள்ளத்தில் இல்லை என்றால் அவர்கள் என்ன செய்தாலும் அவர்களால் இறைவனை அடைய முடியாது. இறைவனை அடையும் சிறந்த வழி தூய்மையான அன்பு ஒன்றே ஆகும். இந்த அன்பு எனும் சிவத்தைப் பின்பற்றிய அனைவருமே அன்று சித்தர்கள் ஆயினர். ஒன்றின் மீதான அதீத பற்றை பித்து என்பார்கள். அதேபோல் சிவன் மேல் மிகுதியான அன்புகொண்ட அனைவரும் பிறைசூடன் மேல் பித்துக்கொண்ட சித்தர்களாக வாழ்ந்தார்கள். இவர்கள் சித்தத்தில் சிவனை வைத்து சிவம் எனும் பரம்பொருளைக் கண்டவர்கள்.

"செகமெலாஞ் சிவமென்றே யறிந்தோன் சித்தன்,
சிந்தை தெளிந்திருப்பான் அவனே சித்தன்".

எனும் ஞானப் பாடல் சித்தர்கள் உலகையே சிவமாகப் பார்ப்பார்கள் என உரைக்கிறது. இறைவன் என்பவன் வெளியில் இல்லை உன்னில் இருக்கிறான் என்பதும், பரம்பொருளின் வடிவை மந்திரங்கள் மூலமாக அறிய முடியும் என்பதும் அவர்களது தாற்பரியக் கோட்பாடாக இருந்துள்ளது. பதினெண் சித்தர்கள் இந்த பாரத தேசத்தில் இருக்கிறார்கள். அவர்களில் முதன்மையானவனாக இந்த ஈசன் விளங்குகின்றான். சிவனைக் குறித்த ஒவ்வொரு வரலாறும் நமக்கு ஒவ்வொரு தத்துவத்தைக் கூறுகின்றது. சிவனின் உடுக்கையில் இருந்து உருவான ஓம் எனும் பிரணவ மந்திரமே படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந்தொழில்களுக்கும் ஆதாரமாக விளங்குகின்றது. ஓம் எனும் பிரணவ மந்திரத்தை நாம் உச்சரிக்கும் போது நம்மை சூழ உள்ளவற்றை ஆக்கபூர்வமாக மாற்றி எமக்கு மன அமைதியையும் நிம்மதியையும் தருகின்றது என்பது இன்றைய ஆராய்ச்சியின் உண்மை. இதை எமக்கு அன்றே உரைத்தான் எம் ஈசன். இவை அனைத்துக்கும் மேலாக சிவனின் தத்துவம் அறிவியலுக்கும் ஆன்மீகத்திற்கும் தாற்பரியமாக விளங்குகின்றது என்பதை நாம் அவரின் மந்திரத்தில் உணரலாம். நமசிவாய என்னும் பஞ்சாட்சரம் சொல்லும் உண்மை சிவதத்துவத்தின் ஆணிவேராகவே விளங்குகின்றது. பஞ்சபூதத்தின் ஆதாரமாக சிவனே இருக்கிறார். நமசிவாய எனும் பஞ்சாச்சரத்தின் உண்மையை உணர்ந்தால் அந்த வடிவம் நம் வடிவமாக நம்முள் நிற்கும் என்பது நால் வேதங்களும் சொல்லும் உண்மையாகும். நமசிவாய மந்திரம் நமக்கு நேர் சிந்தனைகளை உருவாக்குவதோடு மட்டுமல்லாது தீய எண்ணங்களில் இருந்தும் எம்மை விலக்கி வைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந் தொழில்களுக்கும் சிதம்பரம் நடராஜரே ஆதாரமாக விளங்குகின்றார். இதனாலேயே ஈசன் மும்மூர்த்திகளில் முதல்வனாகத் திகழ்கிறான். இந்த நடராஜர் சிலைக்கு ஆன்றோர்கள் இரண்டுவிதமான விளக்கத்தைக் கொடுக்கின்றனர். வலக்கையில் உள்ள உடுக்கு படைத்தலையும், இடக்கையில் உள்ள நெருப்பு அழித்தலையும், மற்றொரு வலக்கையின் உட்புறம் அருளலையும், இன்னொரு இடக்கையின் உட்புறம் மறைத்தலையும், ஆணவத்தை மிதித்த பாதமும், தூக்கிய பாதமும் காத்தலையும் பறை சாற்றுகின்றது. மற்றைய விளக்கம் வட்ட வடிவிலான சுவாலை முடிவில்லாத வாழ்க்கையை குறிப்பதாகவும், தூக்கி நிற்கும் வலது கால் நிலத்தையும் மேலே இருக்கும் இடது கால் நீரையும், எந்தவித பிடிப்புமே இல்லாத கைகள் காற்றையும், அகண்ட திருமுடி ஆகாயத்தையும், தலைக்கு மேலே இருக்கும் சுவாலை நெருப்பையும், திருமுடியில் இருக்கும் பெண் கங்கையையும் குறித்து நிற்கிறது. அதுமட்டும் இல்லாமல் அர்த்தனாரீஸ்வரர் உருவத்தையும் நாம் இந்த சிலையில் காண முடியும். மார்பை மறைத்த படி நடராஜரின் கை மேலே இருக்கும். இது பெண்ணைக் குறிப்பதாகக் காணப்படுகிறது. அவரின் இடது காதில் கடுக்கணும் வலது காதில் கம்மலும் காணப்படுகின்றது. அன்றைய காலத்தில் ஆண்கள் கடுக்கணும், பெண்கள் கம்மலும் அணிவார்கள். அதையே இது குறிப்பதாகக் கூறுகின்றார்கள். இச் சிலையில் நாம் பாம்பையும் காண முடியும். இது நிற்காமல் ஓடும் காலத்தைக் குறிப்பதாகும். நீண்டு பறக்கும் ஆடை மாயையை அழிக்கும் ஆடையாகக் காணப்படுகின்றது. நடராஜரின் காலுக்குக் கீழே உள்ள உருவம் தீயவற்றை நாம் அழிக்க முடியாது ஆனால் அடக்கமுடியும் என்பதைக் குறிக்கின்றதாம். ஏன் நடராஜர் ஆடல் வடிவத்தில் உள்ளார் என்றால், நிலையான தன்மை அற்ற அணுக்களைக் குறிக்க என ஆன்றோர்கள் கூறுகின்றனர். அத்தோடு முக்காலத்தையும் கடந்த ஞானத்தை நெற்றிக்கண் உணர்த்துகின்றது.

இப்படி சிறந்த நடராஜப்பெருமான் எழுந்தருளி இருக்கும் இடம் சிதம்பரம். இக் கோவிலின் தெற்குப் பகுதி பாண்டியர்களாலும், கிழக்குப் பகுதி சோழர்களாலும் கட்டப்பட்டது. இந்த சிதம்பரம் நடராஜர் கோவில் 3000 தொடக்கம் 5000 வருடங்கள் வரை பழமையானதாகும். உலகிலேயே சிவன் மூன்று உருவங்களில் காட்சி அளிக்கும் ஒரே கோயில் இந்த சிதம்பரம் நடராஜர் கோவிலாகும். இந்தியாவிலே பஞ்ச பூதங்களைக் குறிக்கும் தலங்களாக பின்வரும் கோவில்கள் அமைந்துள்ளன.

1) நிலம் – காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவில்
2) நீர் – திருவானைக்காவல் ஜம்புகேஸ்வரர் கோவில்
3) நெருப்பு– திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவில்
4) காற்று– திரு காளஹஸ்தி காளத்தீஸ்வர் கோவில்
5) ஆகாயம்– சிதம்பரம் நடராஜர் கோவில்.

இந்த ஐந்து கோவில்களும் ஒரே நேர் கோட்டில் அமைந்துள்ளன.

இதில் சிதம்பரம் நடராஜர் கோவில் பல்வேறு அற்புதங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. இச் சிதம்பரம் கோவில் மனித உடலமைப்பை ஒத்ததாகக் காணப்படுகின்றது. இக் கோயிலானது 9 வாயில்களைக் கொண்டுள்ளது. இவை மனித உடம்பில் உள்ள நவ துவாரங்களைக் குறிக்கின்றது. மனிதனுக்கு இதயம் இடப்புறம் அமைந்திருக்கிறது. அதேபோல அக்கோயிலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலவர் இருக்கும் கருவறை கோயிலின் நடுப்புள்ளியில் இல்லை. இடதுபுறமாகச் சற்று நகர்ந்து இருக்கிறது. ஒரு மனிதன் ஒரு நாளைக்கு சராசரியாக 21,600 முறை மூச்சுவிடுகிறான்.அதை உணர்த்தும் வகையாக கருவறையின் மீதுள்ள கூரை 21600 ஓடுகளால் வேயப்பட்டு இருக்கிறது. ஓடுகள் 72000 தங்க ஆணிகளால் பொருத்தப்பட்டுள்ளது. இந்த 72000 எண்ணிக்கை நம் உடம்பில் உள்ள நாடிகளின் எண்ணிக்கையாகும். இதயத்தின் துடிப்பே நடராஜரின் நடனமாக உருவகிக்கப்பட்டு இருக்கிறது. நமது உடலை 9 சக்திகள் இயக்குகின்றன. அதைக்குறிக்கும் வகையில் கருவறையின் மேல் 9 கலசங்கள் உள்ளன. நமசிவாய எனும் பஞ்சாட்சரத்தைக் குறிக்கும் விதமாக 5 படிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு மனித உடம்புடன் தொடர்புபடுத்தித்தான் இக் கோவில் முழுக்க முழுக்க அமைக்கப்பட்டுள்ளது. இந்த இடத்தில் திருமூலரின் இந்தப் பதிகத்தை நாம் நினைவுகொள்ளவேண்டும்.

உள்ளம் பெரும்கோயில், ஊன் உடம்பு ஆலயம்,
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்,
தெள்ளித் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன் ஐந்தும் காளா மணிவிளக்கு

அதாவது எமது உடலே ஆலயம் என்று சொல்லப்படுகின்றது. சிதம்பர நடராஜர் தரிசனமே முத்தி என சொல்லப்படுகின்றது. வைஷ்ணவர்களுக்கு கோயில் என்றாலே அது ஶ்ரீரங்கத்தைக் குறிக்கும். அதேபோல் சைவர்களுக்கு கோயில் என்றால் அது சிதம்பரம் ஒன்றே ஆகும். சிவன் கோயில்களின் தலைமைப் பீடமாக இந்த சிதம்பரம் கருதப்படுகின்றது.

இத்தலத்தின் மூலவர், திருமூலநாதர், (தூய தமிழில் பொன்னம்பலநாதர்) உற்சவர், நடராசர் (தமிழில் கனகசபைநாதர்) தாயார் உமையாம்பிகை. இத்தலத்தின் தலவிருட்சமாக தில்லை மரமும், தீர்த்தமாக சிவகங்கை, பரமானந்த கூபம், வியாக்கிரபாத தீர்த்தம், அனந்த தீர்த்தம், நாகச்சேரி, பிரம தீர்த்தம், சிவப்பிரியை, புலிமேடு, குய்ய தீர்த்தம், திருப்பாற்கடல் தீர்த்தங்களும் உள்ளன. இத்தலமானது பஞ்சபூதத் தலங்களில் ஒன்றான ஆகாயத் தலமாகும். இத்தலம் திருநீலகண்ட நாயனார் அவதாரத் தலம் எனவும் கூறப்படுகின்றது. இத் தலம் அப்பர், சுந்தரர், மணிவாசகர், திருஞான சம்பந்தர் ஆகிய சமயக்குரவர்களால் தேவாரம் பாடப்பட்ட தலம் ஆகும். மேலும் இத்தலத்தை சிதம்பரம் தில்லைநடராஜர் கோயில் எனவும், சிதம்பரம் கோயில் எனவும், பூலோக கைலாயம் எனவும் அழைக்கப்படுகின்றது. இந்தக் கோயிலின் சிதம்பரம் என்ற பெயர் "சித்தம்– இதயம்", "அம்பரம்–ஆகாசம்" சித்தம் +அம்பரம் = சிதம்பரம் எனப் பெயர் பெற்றது. இந்தக் கோயில்களைப்பற்றி நாம் அறியும் போது நிச்சயமாக சிதம்பர ரகசியம் எனும் விடயத்தை தெரிந்துகொள்ளாமல் இருக்க மாட்டோம். அதாவது இச்சபையில் சபாநாயகரின் வலது பக்கத்தில் உள்ளது ஒரு சிறிய வாயில், அங்குள்ள திரை அகற்றப்பட்டு தீபாராதனை காட்டபடும். அங்கு திருவுருவம் இல்லாது, தங்கத்தால் ஆன வில்வ தளமாலை ஒன்று தொங்க விடபட்டிருக்கும். இதன் ரகசியம் இங்கு இறைவன் ஆகாய உருவில் இருக்கின்றார் என்பதுதான். ஆகாயத்துக்கு ஆரம்பமும் முடிவும் கிடையாது, அதை உணரத்தான் முடியும் என்பதை உணர்த்துவதேயாகும். இதையே நாம் சிதம்பர ரகசியம் என்று சொல்கின்றோம். ஆகாசம் வடிவில் சிவன் இருக்கிறார் என்பதை குறிப்பால் உணர்த்தும் வகையில் சிதம்பர ரகசியம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு நடக்கும் வழிபாடு முறைகளை நாம் கவனித்தோம் ஆனால், உலகில் உள்ள அனைதது சிவகலைகளும் சிதம்பரம் நடராசர் கோயிலில் இருந்து காலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறப்பட்டு, இரவில் மீண்டும் கோயிலை வந்தடைகின்றன (இதில் திருவாரூர் தியாகராஜர் சுவாமியை) தவிர என்று நம்பப்படுகிறது. இதன் காரணமாக மற்ற சிவாலயங்களை விட தாமதமாக இக்கோவிலில் அர்த்த சாம பூசை நடைபெறுகிறது. இவ்வாறு அனைத்து சிவகலைகளும் சிதம்பரத்தில் ஒடுங்குவதால் பல்வேறு தலங்களுக்கு சென்று வழிபடுவதற்கு சிதம்பரத்தில் நடைபெறும் அர்த்தசாம பூசையில் கலந்து கொள்வது ஈடானதாகக் கருதப்படுகிறது.மற்றும் தினந்தோறும் ஆறு காலப் பூசைகள் நடைபெறுகின்றன. சித்திரை மாதம், திருவோண நட்சத்திரத்தில் கனகசபையில் மாலையில் அபிசேகம், ஆனி மாதம், உத்திர நட்சத்திரத்தில் இராச சபையில் அதிகாலையில் அபிசேகம், ஆவணி மாதம், பூர்வ பட்ச சதுர்த்தசியில் கனக சபையில் மாலையில் அபிசேகம், புராட்டாசி மாதம், பூர்வ பட்ச சதுர்த்தசியில் கனக சபையில் மாலையில் அபிசேகம், மார்கழி மாதம், திருவாதிரை நட்சத்திரத்தில் இராச சபையில் அதிகாலையில் அபிசேகம், மாசி மாதம், பூர்வ பட்ச சதுர்த்தசியில் கனகசபையில் மாலையில் அபிசேகம் என ஆண்டுக்கு ஆறு பூசைகள் நடைபெறுகின்றன. அது மட்டும் இல்லாமல் இந்த தலத்தைப் பற்றி நாற்பத்து மூன்று நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு,

தேவாரம் – 11 திருப்பதிகங்கள், திருவாசகம் –25 திருப்பதிகங்கள், திருக்கோவையார், திருமுறைக் கண்டபுராணம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், கோயில் நான்மணிமாலை, கோயில் திருப்பண்ணியர் விருத்தம், பெரியபுராணம், சிதம்பரம் மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட்கோவை, சிவகாமி அம்மை இரட்டை மணிமாலை, தில்லைக்கலம்பகம், தில்லையுலா, மூவருலா, தில்லையமகவந்தாரி, சிதம்பரவெண்பா, சிதம்பர சபாநாத புராணம், பாண்டிய நாயக முருகன் பிள்ளைத்தமிழ்,புலியூர் வெண்பா,நடேசர் திருவருட்பா, நடராச திருவருட்பா, நடராசர் சதகம், நடராசர் திருப்புகழ், சிவகாமியம்மை பிள்ளைத் தமிழ், சேக்கிழார் புராணம், சிவகாமியம்மைப் பதிகம், தில்லை கற்பக விநாயகர் வெண்பா அந்தாதி,தில்லை நவமணி மாலை, சிதம்பர விலாசம், பரமரகசியமாலை, திருவருட்பா, தில்லைத் திருவாயிரம், புலியூர் புராணம், சிதம்பரப் புராணம்,நடராஜர் காவடிச்சிந்து, நடராசர் பத்து, நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகள், சிதம்பரம் பட்டியல், முத்துத்தாண்டவர் கீர்த்தனைகள், சிதம்பரம் சிவகாமியம்மை பஞ்சரத்தினம், தில்லை பாதி நெல்லை பாதி.

அத்துடன் எமது பண்டைய முன்னோர்களது சிற்பக்கலைக்கும், கட்டடக் கலைக்கும் இவ்வாலயத்தில் உள்ள ஆயிரங்கால் மண்டபம் எனப்படும் ஆயிரம் தூண்கள் கொண்ட மண்டபம் பெயர் பெற்றது. இதை நிபுணர்கள் கட்டடக்கலையின் அற்புதம் என்று புகழ்கின்றனர். இதே போல் பற்பல பிரம்மிப்பூட்டும் விடயங்களை இச் சிதம்பரம் தன்னகத்தே கொண்டுள்ளது. ஆகவே இந்த அற்புதமான சிதம்பரத்திலே வீற்றிருக்கும் இந்த சிவனை நாமும் உணர்ந்து, இந்த ஈசன் நமக்குச்சொல்லும் சிவ தத்துவத்தை நாமும் புரிந்து மகிழ்ச்சியாக வாழ்வோமாக.

தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

**தி.திநுஜன்,**
**பொறியியல் பீடம் (2021),**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தைப்பொங்கல்
நிகழ்வில்
சில பதிவுகள்



தைப்பூச நிகழ்வுகளின் பதிவுகள்...





சூரஸம்ஹார நிகழ்வுகளின் பதிவுகள்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயக சஷ்டி விரதத்தின் மகிமை



இந்து மக்களினால் கடைப்பிடிக்கப்படும் விநாயக விரதங்களுள் முக்கியமான விரதமாகும். இது கார்த்திகை மாத தேய்பிறைப் பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறைச் சஷ்டித் திதி வரையுள்ள இருபத்தொரு நாட்கள் அனுஷ்டிக்கப்படும் விரதமாகும்.இவ்விரதமானது பிள்ளையார் பெருங்கதை விரதம், விநாயக சஷ்டி விரதம், பிள்ளையார் கதை விரதம், பிள்ளையார் நோன்பு எனப் பல பெயர்களால் வழங்கப்படும்.இது விநாயக விரதங்களில் மிகச் சிறப்பான விரதமாகும். இந்நாள் விநாயகப் பெருமான் கயமுகாசுரனைச் சம்காரம் செய்த நாளுமாகும். அதனால் விநாயகர் ஆலயங்களில் பிள்ளையார் கதை விரத முடிவில் அன்று கயமுகாசுர சம்காரம் (சூரன் போர்) நடைபெறும். எந்த விரதமாக இருந்தாலும் விரத ஆரம்ப நாளில் விநாயகர் பிடித்து வைத்தே விரதத்தினை ஆரம்பிக்க வேண்டும். களிமண் அல்லது மாட்டுச் சாணம் அல்லது சந்தனம் அல்லது மஞ்சள் ஆகியவற்றில் ஒன்றினால் பிள்ளையார் பிடித்து அதில் அறுகம்புல் குற்றி பூஜை அறையில் வைத்து விநாயகராக வழிபடல் வேண்டும். விநாயகருக்கு பூஜை செய்யச் சிறந்தது அறுகம்புல்.

இந்த இருபத்தொரு நாட்களும் மாலையில் விநாயகருக்குப் பூஜை செய்து ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு விதமாக இருபத்தொரு வகையான பணியாரங்களை நிவேதித்து வணங்க வேண்டும். முதல் இருபது நாட்களிலும் ஒருவேளை உண்டு, பிள்ளையார் கதை படித்து விரதம் இருத்தல் வேண்டும். இறுதிநாள் மட்டும் உணவை விடுத்து மறுநாட் காலையில் உபவாசம் இருந்து விரதத்தை முடித்துக் கொள்ளுதல் மரபு. விரதம் ஆரம்பமான நாளிலிருந்து இருபத்தொரு இழைகளைக் கொண்ட நூலில் நாள்தோறும் ஒவ்வொரு முடிச்சுகளாக இடப்பட்டு, இருபத்தோராவது திதியான இறுதி நாளன்று அந்நூலை கோயில்களில் குருக்களைக் கொண்டும் அல்லது வீடுகளில் தாமாகவேனும் ஆண்கள் தமது வலது கையிலும், பெண்கள் தமது இடதுகையிலும் அணிந்து கொள்வர்.

பிள்ளையார் கதை விரதத்திற்கு வரலாறு ஒன்று உண்டு. கைலாயத்தில் ஒருமுறை சிவனும், பார்வதியும் தாயம் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது அங்கு வந்த மகா விஷ்ணு, சிவபெருமானுக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்லும் நிலை ஏற்பட்டது. இதனால் பார்வதி தேவி கடும் கோபம் கொண்டார். மகா விஷ்ணுவை குருட்டு மலைப்பாம்பாக போகும்படி சாபம் இட்டார். விஷ்ணுவுக்கு ஆறுதல் கூறிய சிவபெருமான், கயமுகாசுரனின் வதம் நடைபெறும் வரை பொறுமையாக காத்து இருக்கும்படி கூறினார். அதன்படி விஷ்ணுவும் மலைப்பாம்பாக மாறி ஆலமர பொந்தினுள் இருந்து விநாயகரை வேண்டி தவம் இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நாட்களின் பின் கயமுகாசூரனை வதம் செய்து விநாயகர், அவனுக்கு முக்தி அளித்தார். அதன் பின்னர் விநாயகர் தன் இருப்பிடத்துக்கு திரும்பிக் கொண்டிருந்த போது, ஆலமரப் பொந்தில் மலைப்பாம்பாக இருந்த மகாவிஷ்ணுவை கண்டார்.விநாயகரின் பார்வை பட்டதுமே விஷ்ணு தன் சுய உருவைப் பெற்றார். இதனால் மகிழ்ச்சி அடைந்த விஷ்ணு, "விநாயகரே எனக்கு காட்சி அளித்து மகிழ்ச்சி கொடுத்த மார்கழி சஷ்டி தினத்தன்று, உம்மை யார் வழிபட்டாலும் அவர்கள் துன்பம், துயரங்களில் இருந்து விடுதலை பெற்று நினைத்ததை பெற அருள் புரிய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதன்படி விநாயகரும் விஷ்ணுவின் கோரிக்கையை ஏற்று யார் யார் 21 நாட்கள் விரதமிருந்து தன்னை வழிபடுகிறார்களோ அவர்களுக்கு வேண்டிய வரம் அளிப்பதாக அருள்புரிந்தார் என்பது புராணம்.

விநாயகர் சஷ்டி விரதம் இருப்பவர்கள் சாபம், தோஷங்கள் நீங்கப்பெற்று முக்தி பெறலாம் என்பது நம்பிக்கை. வாழ்வில் சகல சௌபாக்கியங்களும் கைவரப் பெற்று நலமோடு வாழ்வார்கள். இவ் விரத நாட்களில் வீடுகளிலும், விநாயகர் ஆலயங்களிலும், சைவ ஆலயங்களிலும் பிள்ளையார் கதை, விநாயக புராணம், விநாயக கவசம் என்பவற்றைப் பாராயணம் செய்து வழிபடல் வேண்டும்.

**சு.யதுர்ஷா,**
**பொறியியல் பீடம் (2021),**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**

வேலவன் கோல மயில்விளை யாடுங் குகன்அடியார்க்(கு)
ஏல உயிர்க்குயி ராயுள் புகுந்தளித் தோங்குமின்பம்
சால அருள்பவன் சங்கரன் அம்பிகை தந்தசுதன்
சீல இனுவை முருகன் திருவடி சேர்மின்களே.

மின்னிகர் நுண்ணிடை வேல்விழி வள்ளி விரும்புங்குகன்
தன்னிக ரில்தகர் ஊர்ந்தவு ணர்குலம் சாய்த்துவைவேல்
கொன்னிலைச் சூர்முதல் வேரறத் தொட்ட குமரன்நெடும்
பொன்னிலை மாட மலியினு வைப்பதிப் புங்கவனே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவம்



அன்பின் நிலையது சிவம்
ஆன்ம ஈடேற்றம் தருவது சிவம்
இன்பதுன்பங்கள் கடந்தது சிவம்
ஈரேழுலகமும் நிறைந்தது சிவம்
உலகின் உண்மைப்பொருளது சிவம்
ஊனம் நீக்கி நெஞ்சில் ஞானம் தருவது சிவம்
எங்கும் நிறைந்து எல்லாம் கடந்த இறையருள் சிவம்
ஏற்றங்கள் தந்து மாற்றங்கள் உய்ப்பதும் சிவம்
ஐம்பூதங்களாய் அமைவது சிவம்
ஓசை ஒலியெலாம் ஆனது சிவம்
ஓங்கார நமசிவாய பொருளாவதும் சிவம்
ஔவியம் அகற்றி மெய்ஞானம் தருவது சிவம்
அஃதின் குணங்குறிகள் தொழுது வாழ்வதே சிவம்

**கே.கார்த்தீபன்,**
**பொறியியல் பீடம் (2021),**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருஞானசம்பந்தருடைய தலைமைத்துவம்



சைவசமய வரலாற்றிலும் தேவார முதலிகளின் வரலாற்றிலும் முதலில் வைத்து எண்ணத்தக்கவர் திருஞானசம்பந்தர் ஆவார். இவருடைய காலத்திலே அவைதிக சமயங்கள் காலூன்றி இருந்தன. இத்தகைய சூழ்நிலையில் சைவசமய பக்தி இயக்கத்திற்கு தலைமை தாங்கி அதனைச் செவ்வனே வழி நடத்தி மீண்டும் சைவம் தழைத்தோங்க செய்த பெருமை திருஞானசம்பந்தருக்கு உரியதாகும்.

தலைமைத்துவம் என்பது பொதுவானதொரு நோக்கத்தை நோக்கிச் செயற்பட வைக்கும் பொருட்டு தனிநபர்கள் அல்லது குழு மீது செல்வாக்குச் செலுத்தி அவர்களை வழி நடாத்திச் செல்லும் ஆற்றலே ஆகும். அந்தவகையிலே பல்லவர் காலத்தில் சைவ பக்தி இயக்கத்தை தலைமைத்துவம் ஏற்று சிறப்புற நடாத்திய சம்பந்தருடைய தலைமைத்துவ பண்புகளை பின்வருமாறு நோக்கலாம்.

தலைவனுக்குரிய அடிப்படையான இயல்புகளில் ஒன்று எப்போதும் தம்மைச் சுற்றி தொண்டர் குழாத்துடன் இருப்பதாகும். எங்கு சென்றாலும் தொண்டர் குழாத்துடன் செல்வது சம்பந்தரின் பண்பாகும். இவர் செல்லும் இடங்கள் தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு வரவேற்றனர். சென்ற இடங்களிலே கொடிகள், தோரணங்கள், பந்தல்கள், பூமாலைகள், தீபங்கள் போன்றவற்றோடு மக்கள் இவரை ஆவலோடு எதிர் கொண்டனர். பரசமயகோளரி வந்தார், பாலறாவாயர் வந்தார் என பல்வேறு விருது பெயர்களை கூறி வரவேற்றனர்.

சம்பந்தர் போன்ற இளம் தலைவர்கள் கிடைத்தவுடன் சைவ பக்தி உலகம் அவரை தலைமேல் வைத்துக் கொண்டாடியது. சம்பந்தரின் தலைமையை அன்றைய சைவ பக்தி உலகம் உரியவாறு மதித்துப் போற்றியது. குங்கிலியக்கலையநாயனார், மங்கையற்கரசியார், குலச்சிறையார், முருக நாயனார் போன்ற பலரும் சம்பந்தருடன் இணைந்து செயற்பட்டமை அவருடைய தலைமைத்துவத்திற்கு சான்றாகும்.

தலைமைத்துவத்திற்கு உரிய மற்றுமொரு பண்பு தொண்டர்களைத் தம் வசப்படுத்துதல் ஆகும். தொண்டர்களைத் தம் வசப்படுத்துவதற்கு தலைவர்கள் சில அற்புதங்களையும் வீரதீரச் செயல்களையும் செய்து காட்ட வேண்டும். அந்தவகையில் சம்பந்தரும் சில அற்புதங்களை செய்து காட்டியுள்ளார். ஆண்பனைகளை பெண்பனைகள் ஆக்கியமை, முயலகன் என்னும் நோயை நீக்கியமை, இறைவனிடம் படிக்காசு பெற்று பஞ்சம் போக்கியமை, குளிர்ச்சுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கியமை, பாம்பு தீண்டி இறந்த பூம்பாவையை உயிர்ப்பித்தமை போன்ற பல அற்புதங்களோடு சமண சமயத்திற்கு எதிரான போராட்டங்களில் அனல்வாதம் புனல்வாதம் போன்ற நிகழ்வுகளில் தமது வலிமையை நிலைநிறுத்தி சாகச வீரனாக காட்டியுள்ளார்.

தலைமைத்துவத்தில் இருப்பவர்கள் வாய்ப்பு நிகழும் போது சமூகத்திலுள்ள அனைவரும் சமம் என்பதை உணரச் செய்ய வேண்டும். அந்தவகையில் அந்தணராக கவுணியர் கோத்திரத்தில் பிறந்த சம்பந்தர் தாழ்த்தப்பட்ட வகுப்பினராகிய திருநீல கண்டரையும் தம்முடன் இணைத்து கொள்கிறார். தான் செல்லும் இடங்களில் எல்லாம் அவரையும் அவரது மனைவி மதங்க சூளாமணியையும் அழைத்து செல்கின்றார். சம்பந்தர் பதிகங்களைப் பாடும் போது இருவரும் யாழினை இசைத்து பண் அமைத்தனர். அந்தணராகிய திருநீல தக்க நாயனார் இல்லத்தில் யாழ் பாணரையும் மனைவியையும் தங்க வைத்தது சம்பந்தரின் யாவரும் சமம் என்ற சமூக நோக்கினைத் தெளிவுபடுத்துகின்றது.

தலைமைத்துவத்தில் உள்ளவர்கள் சிறப்பான புலமைத்துவம் நிறைந்தவராக இருத்தல் வேண்டும். புலமைத்துவமும் தலைமைத்துவமும் நிரம்பியவர்களாக இருப்பவர்களே வரலாற்றில் நிலைத்து நிற்கின்றனர். அந்தவகையிலே தமிழில் புதுப்புது யாப்பு வகைகளை உருவாக்கித் தம்மை தமிழ் வல்ல ஞானசம்பந்தராக அடையாளப்படுத்திக் கொண்டார். தமிழ் யாப்பில் பல புதிய வகைகளைக் கண்டு தம் புலமைத் திறத்தை உறுதிப்படுத்திய சம்பந்தர் இசையிலும் தமது புலமையை உறுதி செய்துள்ளார். புதுப்புது பண்களில் பாடல்கள் பல பாடி தமிழிசைக்கு புத்துயிர் அளித்துள்ளார்.ஒரு கட்டத்தில் பெரும்பாணராகிய திருநீலகண்ட யாழ் பாணரே இசையமைக்க முடியாமல் திணறிய யாழ் முறிப் பண்ணை பாடி இசைத் துறையிலும் தமது ஆளுமையைக் காட்டி தலைமைத்துவத்தை தக்க வைத்துக் கொண்டார்.

இயக்கத்துக்கு தலைமை ஏற்போர் தாம் வாழும் நாட்டின் அனைத்து பிரதேசங்களையும் நன்கு அறிந்தவராகவும் அப்பிரதேசங்களைச் சார்ந்தோரை அரவணைத்துச் செல்பவராகவும் இருக்க வேண்டும். அந்தவகையிலே நாயன்மார்களில் மிகுதியான தலங்களுக்குச் சென்றவராகவும் அதிக பாடல்களைப் பாடியவராகவும் சம்பந்தர் அமைகின்றார்.

இவ்வாறான பண்புகளைத் தனது சிறு வயதிலேயே தக்க வைத்துக் கொண்டு சம்பந்தர் தனது தலைமைத்துவத்தை வளர்த்துக் கொண்டார்.

**சு.விதுர்சன்,**

**பொறியியல் பீடம் (2021),**

**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர்



கல் தோன்றி மண்தோன்றா காலத்திலே முன் தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி என்பார்கள். உலக மொழிகளில் இன்று பழமையாகக் கருதப்பெறும் மொழிகளாக இலத்தீன், கிரீன், சமஸ்கிருதம், தமிழ் போன்றன காணப்படுகின்றன. இவற்றுள் தமிழ் மட்டும் தான் உயிருள்ள வழக்கிலுள்ள மொழியாக உள்ளது என்று பிரித்தானியக் கலைக்களஞ்சியம் கூறுகின்றது. தமிழ் மொழியின் சிறப்பினை கால்டுபெல் "தமிழ் மொழி திராவிட மொழிகளின் தாய்." எனக் குறிப்பிடுவதன் மூலம் விளக்கியுள்ளார்.

இத்தகைய தமிழ் மொழியின் பொருளினை "இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்" எனக் கூறுவதன் மூலம் குறிப்பிடுகின்றனர். செம்மொழியாம் எம் தமிழ் மொழி பண்டு தொட்டு சிறப்பாக நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய் வளர்ந்து வந்துள்ளது என்பதை கூறிக்கொள்வது மிகையாகாது.

இத்தகைய பெருமையை கொண்ட தமிழ் மொழி ஏனைய மொழிகளின் ஆதிக்கத்தால் சற்று தளம்பல் உற்றாலும் கி.பி 600 க்கு மேல் கூம்பியிருந்த தாமரை போல் தமிழ் மறுபடியும் மலரத்தொடங்கியது. இதற்கு காரணம் அக்காலத்தில் பக்தி இலக்கியங்கள் நிலவியதாகும். அதை தொடர்ந்து தோற்றம் பெற்ற புலவர்களும் கவிஞர்களும் தமிழுக்கு ஆற்றிய சேவைகள் எண்ணில் அடங்கா.இவ்வாறு தமிழ் வளர்த்த புலவர்கள் பலர். அவர்களுள் சுப்பிரமணிய பாரதியார், திருவள்ளுவர், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, அறிஞர் அண்ணா, ஆறுமுகநாவலர் போன்றோர் குறிப்பிடத்தக்கனர்.

நாவலர் என்று கூறியவுடன் அது ஆறுமுகநாவலரையே மனக்கண் முன் கொண்டுவரும். அத்தகைய நாவலர் தமிழுக்கும் சமயத்துக்கும் அளப்பரிய சேவைகள் பல செய்துள்ளார்.

மேலைத்தேய கலாச்சாரம் நமது கலாச்சாரத்தில் ஊடுருவிய காலத்தில் நாவலர் பிறந்தார். ஒல்லாந்த, போர்த்துக்கேய, ஆங்கிலேய வல்லரசுகளின் கொடிகள் ஓங்கிப் பறந்த காலம். அவர்கள் தங்களுடைய சமயம், மொழி நாகரிகம், பழக்கவழக்கம் எல்லாவற்றையும் நம் மக்கள்மீது திணித்து வந்த காலகட்டத்தில் நாவலர் தோன்றி, நம் மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்க முயன்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துக்கேயர், டச்சுக்காரர் ஆகியவர்களுடைய கலாச்சாரம் பாரிய தாக்கத்தினை இங்கு ஏற்படுத்தவில்லை. ஆனால் ஆங்கிலேயரது வருகையுடன் மேலைத்தேய கலாச்சாரத்தை நம்மிடையே புகுத்த அரசும் வழி அமைத்துக் கொடுத்தது. ஆங்கில மொழியைக் கற்க பல வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. கிறிஸ்தவ மதத்தைத் தழுவ பல ஊக்குவிப்புக்களும் கொடுக்கப்பட்டன. மக்களிடையே எமது கலாச்சாரத்தைவிட மேலைத்தேய கலாச்சாரம் சிறந்தது என்ற மனமயக்கத்தையும் தோற்றுவித்தது. இக் கால கட்டத்தில்தான் வரலாற்றுப் புகழ்பெற்ற பழைய இராசதானியாகிய நல்லூரிலே நாவலர் பிறந்தார்.

இவரது மதிநுட்பத்தைக் கண்ட தமையனார் அப்பொழுது யாழ்ப்பாணத்தில் இருந்த பீற்றர் பெர்சிவல் என்ற கிறிஸ்தவப் பாதிரியாரிடம் ஆங்கிலம் கற்க அனுப்பினார். வெகு விரைவிலேயே ஆறுமுகநாவலர் ஆங்கிலத்தைக் கற்றுப் பரீட்சையில் சித்தியெய்தினார். இதைக் கண்டு வியந்த பாதிரியார் அதே பாடசாலையில் கீழ் வகுப்பிற்கு ஆங்கிலமும், மேல் வகுப்பிற்குத் தமிழும் கற்பிக்கும்படி கேட்டுக்கொண்டார். நாவலர் அவர்கள் வடமொழியிலுள்ள சிவாகமங்களைப் படிப்பதற்காக சமஸ்கிருதத்தையும் கற்றுத் தேர்ச்சியடைந்தார்.

சைவப் பிள்ளைகளை ஒன்று திரட்டி திண்ணைப்பள்ளியை ஆரம்பித்தார். 1847ஆம் ஆண்டு மார்கழி மாதம் 18ஆம் திகதி வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் சைவப் பிரசங்கத்தை ஆரம்பித்தார். மிஷனரிகள் கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதற்கு நூல்களைப் பதிப்பித்து மக்களுக்குக் கல்வி வசதிகளை அளித்து வந்தனர். நாவலர் அவர்களும் 1848ஆம் ஆண்டு ஆவணி மாதம் வண்ணார்பண்ணையில் சைவப் பிரகாச வித்தியாசாலையை நிறுவினார்.

அச்சுக்கூட வசதிகள் இல்லாத காரணத்தால் 1849ஆம் ஆண்டு ஆடி மாதம் அச்சியந்திரம் வாங்கும் பொருட்டு சென்னைக்குச் சென்றார் நாவலர். நாவலரின் பணிகளைக் கேள்விப்பட்ட திருவாவடுதுறை ஆதீனம் இவருக்கு "நாவலர்" என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தது. சென்னையில் ஓர் அச்சகத்தை நிறுவி நூல்களை வெளியிட்டார். யாழ்ப்பாணத்திலும் ஓர் அச்சுக்கூடத்தை நிறுவி நாவலர் அவர்களே பல நூல்களை எழுதிப் பதிப்பித்தார். ஐம்பத்தேழு ஆண்டுகள் வாழ்ந்த நாவலர் 59 நூல்களை எழுதியும் பதிப்பித்தும் வெளியிட்டுள்ளார். "இலங்கைப் பூமிசாத்திரம்", "பாலபாடம்", "சைவ வினாவிடை நான்கு பாகங்கள், "இலக்கணக்கொத்து", "சைவசமய சாரம்", "பெரியபுராண வசனம்", "திருவிளையாடற்புராண வசனம்", "கந்தபுராண வசனம்", "தனிப்பாமாலை", "நீதி நூல்கள்", "ஆலய தரிசனவிதி" ஆகிய நூல்களை அவர் எழுதிப் பதிப்பித்தமை சிறப்பானதாகும். நாவலர் பதிப்பு என்றாலே அதற்குத் தனியொரு மதிப்பு உண்டாகும்படி பிழையறப் பதிப்பித்தார். யாழ்ப்பாண மக்களுக்கு மட்டுமன்றி இந்திய மக்களுக்கும் வழிகாட்டியாக நாவலர் விளங்கினார். "பெரிய புராணம்", "திருவிளையாடற் புராணம்" ஆகிய நூல்களை வசனநடையில் எழுதி "வசனநடை கைவந்த வல்லாளர் என்ற சிறப்புப் பெயரையும் பெற்றார். தொடர்ந்து 32 ஆண்டுகள் சமயப் பிரசங்கம் செய்து சைவத்தின் பெருமையினை உலகுணரச் செய்தார்.

"கடவுள் வாழ்த்து", "சிவபக்தி", "யாக்கை நிலையாமை", "கல்வியின் சிறப்பு", "மகளிர் ஒழுக்கம்", "பசு காத்தல்", "கொல்லாமை", "பேதமை" முதலான தலைப்புக்களில் இவர் பிரசங்கம் செய்து சமயத்தின் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டு புரிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழிற் சிறந்த வசனநடையின் மூலகர்த்தா நாவலரே நாவலர் தமது கண்டன வாதங்கள், பிரசுரங்கள், பிரசங்கங்கள் மூலமாக அக்கால மக்களை விழிப்படையச் செய்தார். நாவலர் மேற்கொண்ட "கஞ்சித் தொட்டித் தர்மம்" நாட்டு மக்களிடம் அவர் கொண்ட ஈடுபாட்டை விளக்குகின்றது. நாவலரின் பெருமையை நன்கறிந்த இலங்கையரசு அரச தேசிய வீரர் வரிசையில் நாவலரையும் சேர்த்து அவர் பெயரில் முத்திரையும் வெளியிட்டு அவரைக் கௌரவித்துள்ளது.

நாவலர் கடைசியாக 1879ஆம் ஆண்டு ஆடி மாதத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை தினத்தில் பிரசங்கம் செய்தார். அன்று அவர் எடுத்துக்கொண்ட பொருள் "பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை" என்ற தேவாரமாகும். அன்றைய பிரசங்கத்தைக் கேட்டுக் கண்ணீர் விடாதவர் எவருமிலர். மொழிப்புலமையும், சொல்வன்மையும், நற்சிந்தனையும், தெய்வ பக்தியும் நிறைந்த நாவலர் அவர்கள் 1879ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 21ஆம் திகதி சிவபதமடைந்தார்.

இவர் மறைந்த செய்தியறிந்த சி.வை. தாமோதரனார். "நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே எல்லவரும் ஏத்துபுராண் ஆகமங்களெங்கே பிரசங்கமெங்கே ஆத்தனறிவெங்கே அறை!"

என்று நாவலர் அவர்களின் புகழைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

இவ்வாறு சைவத்தையும் தமிழையும் தம் இரு கண்களாய் போற்றி வளர்த்த பெரியோர்கள் இன்றும் என்றும் அவர்கள் தொண்டுகளினால் மக்கள் மனங்களில் நீங்காது இடம்பெற்று இருப்பார்கள்.

**க.ஜர்சிகன்,**
**பொறியியல் பீடம் (2021),**
**பேராதனைப் பல்கலைக்கழகம்,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபெருமானின் 64 வடிவங்கள்



சிவபெருமான் சைவசமயத்தினரது முழுமுதற்கடவுள் ஆவார். மகாவிஷ்ணுவை போல் சிவபெருமான் பல அவதாரங்களை எடுக்காத போதிலும் பக்தர்களுக்கு அருள்மழை பொழிவதற்காக அவர் பல வடிங்களை எடுத்துள்ளார். இவை 64 ஆகும். அஷ்டாஷ்ட விக்கிரக லீலை எனும் கேசி முனிவரின் நூலில் சிவபெருமானின் அறுபத்து நான்கு வடிவங்களும், அவ்வடிவங்களின் மூலம் அடியார்களுக்கு அவர் அருளியமையும் குறிப்பிடப்பட்டுள்ளன.

சதாசிவ வடிவத்தின் ஈசானம், தத்புருடம், அகோரம், வாமதேவம், சத்யோசாதம் போன்ற ஐந்து முகங்களிலிருந்து, முகத்திற்கு ஐந்தாக இருபத்தைந்து வடிவங்கள் தோன்றின. இவை மகேசுவர மூர்த்தங்கள் என்று அழைக்கப்பட்டன. இந்த மகேசுவர மூர்த்தங்களுடன் வேறு சில வடிவங்களும் இணைந்து அறுபத்து நான்கு வடிவங்களாக குறிப்பிடப்பட்டுள்ளன.

அவை,

1. இலிங்க மூர்த்தி :– அருவுருவ நிலை
2. இலிங்கோத்பவ மூர்த்தி :– இலிங்கமாக தோன்றிய வடிவம்.
3. முகலிங்க மூர்த்தி :– இலிங்கத்தில் சிவமுகம் உள்ள வடிவம்
4. சதாசிவ மூர்த்தி :– ஐந்து முகத்துடன் உள்ள வடிவம்
5. மகா சதாசிவ மூர்த்தி :– இருபத்தைந்து முகத்துடன் உள்ள வடிவம்
6. உமாமகேஸ்வர மூர்த்தி :– உமையுடன் பொருந்திய வடிவம்
7. சுகாசன மூர்த்தி :– நல்லிருக்கை நாதர்
8. உமேச மூர்த்தி :– உமையுடன் நின்றருளும் வடிவம்
9. சோமஸ்கந்த மூர்த்தி :– உமை மற்றும் கந்தன் உடனாகிய வடிவம்
10. சந்திரசேகர மூர்த்தி :– பிறை சூடியுள்ள வடிவம்
11. இடபாரூட மூர்த்தி :– விடையேறி– காளையின் மீது அமர்ந்திருக்கும் வடிவம்
12. இடபாந்திக மூர்த்தி :– அறவெள் விடைக்கு அருளிய வடிவம்
13. புஜங்கலளித மூர்த்தி :– பாம்புகளை காத்து அருளிய வடிவம்
14. புஜங்கத்ராச மூர்த்தி :– பாம்புகளை அடக்கிய வடிவம்
15. சந்த்யான்ருத்த மூர்த்தி :– மாலைநேர நடன வடிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. சதாநிருத்த மூர்த்தி :– எஞ்ஞான்றும் நடனமாடும் வடிவம்
17. சண்டதாண்டவ மூர்த்தி :– காளி காண ஆடிய நடன வடிவம்
18. கங்காதர மூர்த்தி :– கங்கையணிந்த வடிவம்
19. கங்காவிசர்ஜன மூர்த்தி :– முடியிலிருந்து கங்கையை விடுவிக்கும் வடிவம்
20. திரிபுராந்தக மூர்த்தி :– முப்புரமெரி செய்த வடிவம்– முப்புரமெரித்த வடிவம்
21. கல்யாணசுந்தர மூர்த்தி :– மணவழகர் வடிவம்
22. அர்த்தநாரீஸ்வர மூர்த்தி :– உமைபங்கன்– உமையை இடப்புறமாக கொண்ட வடிவம்
23. கஜயுக்த மூர்த்தி :– காயாசுரனை கொன்ற வடிவம்
24. ஜ்வாரபக்ன மூர்த்தி :– சுரம் நீக்கும் வடிவம்
25. சார்த்தூலஹர மூர்த்தி :– புலியினை அழித்த வடிவம்
26. பாசுபத மூர்த்தி :– அருச்சுனனுக்கு பாசுபதக்கணையை அழித்த வடிவம்
27. கங்காள மூர்த்தி :– வாமனைக் கொன்று முதுகெலும்பினைக் கொண்ட வடிவம்
28. கேசவார்த்த மூர்த்தி :– மாலொரு பாகர் வடிவம்
29. பிச்சாடன மூர்த்தி :– பலிகொள் செல்வர் வடிவம்
30. சரப மூர்த்தி :– சரப வடிவம்
31. சண்டேச அனுக்கிரக மூர்த்தி :– சண்டேஸ்வரருக்கு அருளிய வடிவம்
32. தட்சிணா மூர்த்தி :– தென்முகக் கடவுள்
33. யோக தட்சிணா மூர்த்தி :– தவநிலை தென்முகக் கடவுள்
34. வீணா தட்சிணா மூர்த்தி :– வீணையேந்திய தென்முகக் கடவுள்
35. காலந்தக மூர்த்தி :– காலனைக் கொன்ற வடிவம்
36. காமதகன மூர்த்தி :– காமனை எரித்த வடிவம்
37. இலகுளேஸ்வர மூர்த்தி :– புவனங்கள் தோறும் எழுந்தருளும் வடிவம்
38. பைரவ மூர்த்தி :– ருத்திர வடிவம்
39. ஆபத்தோத்தரண மூர்த்தி :– முனிவர்களின் இடர் களைந்த வடிவம்
40. வடுக மூர்த்தி :– முண்டாசுரனை கொன்ற வடிவம்
41. சேத்திரபால மூர்த்தி :– ஊழிக்காலத்தில் உலகைக் காத்த வடிவம்
42. வீரபத்ர மூர்த்தி :– நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றிய வடிவம்
43. அகோர மூர்த்தி :– சத்தந்துவை கொன்ற வடிவம்
44. தட்சயஞ்யஷத மூர்த்தி :– தக்கன் வேள்வியை தகர்த்த வடிவம்
45. கிராத மூர்த்தி :– வேட்டுருவர்
46. குரு மூர்த்தி :– மாணிக்கவாசகருக்கு குருவாகத் தோன்றிய வடிவம்
47. அசுவாருட மூர்த்தி :– குதிரையேறு செல்வர்
48. கஜாந்திக மூர்த்தி :– ஐராவதத்திற்கு அருளிய வடிவம்
49. சலந்தரவத மூர்த்தி :– சலந்தரனை கொன்ற வடிவம்
50. ஏகபாதத்ரி மூர்த்தி :– ஒற்றை திருவடியுடைய மும்மூர்த்தி வடிவம்
51. திரிபாதத்ரி மூர்த்தி :– மூன்று திருவடியுடைய மும்மூர்த்தி வடிவம்
52. ஏகபாத மூர்த்தி :– ஒற்றை திருவடியுடைய வடிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53. கௌரிவராப்ரத மூர்த்தி :– உமைக்கு பொன்னிறம் அளித்த வடிவம்

54. சக்கரதான மூர்த்தி :– திருமாலுக்கு சக்கரம் அளித்த வடிவம்

55. கௌரிலீலாசமன்வித மூர்த்தி :– உமையுடன் கேளிக்கைகள் புரிந்த வடிவம்

56. விசாபகரண மூர்த்தி :– நீலகண்டர்

57. கருடன் அருகிருந்த மூர்த்தி :– கருடனுக்கு அருளிய வடிவம்

58. பிரம்ம சிரச்சேத மூர்த்தி :– பிரம்மாவின் தலையை கொய்த வடிவம்

59. கூர்ம சம்ஹார மூர்த்தி :– கூர்ம வடிவ திருமாலை அடக்கிய வடிவம்

60. மச்ச சம்ஹார மூர்த்தி :– மச்ச வடிவ திருதாலை அடக்கிய வடிவம்

61. வராக சம்ஹார மூர்த்தி :– வராக வடிவ திருமாலை அடக்கிய வடிவம்

62. பிரார்த்தனா மூர்த்தி :– உமையின் ஊடலைத் தணித்த வடிவம்

63. இரத்த பிட்சா பிரதான மூர்த்தி :– தேவர்களின் செருக்கினை அடக்கிய வடிவம்

64. சிஷ்ய பாவ மூர்த்தி :– முருகனிடம் பிரணவப் பொருளைக் கேட்க மாணவனாக மாறிய வடிவம்

**ஜெ.பார்கவி,**

**பொறியியல் பீடம் (2021),**

**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



குருபரன் மால்மரு கன்கய மாமுக னைக்கடிந்த
ஒருமருப் பானை முகற்கிளை யோன்உம்பர் நாடழித்த
வெருவரு சூர்தடிந் திந்திரற் கன்றவ் வுலகளித்த
திருமுரு கன்இனு வைப்பதி சேர்சிவ சண்முகனே.

முகமல ராறும்முந் நான்குயர் தோளும்நன் முண்டகத்தின்
அகவிதழ் நேரு மருவிழி பன்னிரண் டுங்கனகம்
தகதக வென்றொளி பாலிக்கு மாறு தனிமுடியும்
புகலினு வைக்கந்த வேள்பத மும்என்றன் புந்தியவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளிப் பண்டிகை



உலகிலுள்ள இந்துக்கள் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை தீபாவளி என்ற பண்டிகை விமர்சிக்கப்படுகிறது. "தீபம்" என்றால் "விளக்கு,""ஆவளி" என்றால் "வரிசை" என்று அர்த்தம். இதனால் விளக்குகளை வரிசையாக ஏற்றி ஒளியினால் கடவுளை வழிபடும் இந்த புண்ணிய நாளை தீபாவளி என்று அழைக்கிறோம். ஒரே விளக்கு ஏனைய விளக்குகளை ஒளி வீசச் செய்யும். அந்த முதல் ஒளியே பரமாத்மா, அதனால் ஒளி பெறும் மற்ற விளக்குகள் ஜீவாத்மாக்கள் ஜீவராசிகள் எல்லாவற்றிற்கும் பரம்பொருளே ஆதார ஒளியாகும். இதை உணர்த்தும் வகையில் தான் ஒளிவிளக்கு திருநாளாக தீபாவளி வருடா வருடம் கொண்டாடப்படுகின்றது.

கிருஷ்ணர் நரகாசுரன் என்ற அசுரனை அவனது கொடுமைகள், இம்சைகள் தாங்காது கொன்று அழிக்கின்றான். அந்த நேரத்தில் நரகாசுரன் ஒரு வரம் கேட்கின்றான். பல கொடுமைகள் புரிந்த தீயவன் நான் சாகும் இந்த நாளை மக்கள் எப்போதும் மகிழ்ச்சியாக கொண்டாட வேண்டும் என்று வரமாக கேட்டான். தீயவன் ஒருவனின் அழிவில் மகிழ்வுற்ற மக்கள் அன்று கொண்டாடிய கொண்டாட்டமே இன்றும் தீபாவளியாக கொண்டாடப்படுவதாகக் கருதப்படுகின்றது.

பல பண்டிகைகள் வருடம் முழுவதும் வந்தாலும் தீபாவளி என்றாலே தனிச்சிறப்பு உண்டு. தீபாவளி அன்று ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோரும் எண்ணெய் வைத்து நீராடி, புதிய ஆடை அணிந்து, வீட்டில் தீபம் ஏற்றிக் கொண்டாடுவது அவசியம் என்று புராணமே கூறுவது தான் தீபாவளியின் பெருமை.

பிரிந்திருக்கின்ற பல குடும்பங்கள் தீபாவளித் திருநாளில் ஒன்று சேருவார்கள். வீட்டிலே ஏற்றும் தீப விளக்குகள் இரவு முழுவதும் அணையாது எரிய விடுவர். இந்த தீபத்தினை மாணிக்க தீபம் என்று கூறுவார்கள். இதன் மூலம் நமக்கு ஸ்ரீலக்ஷ்மியின் அனுக்கிரகம் கிடைக்கும் என்பது நம்பிக்கை. அவ்வகையில் இது வெறும் பண்டிகையாக மட்டுமல்லாது வாழ்வைச் செம்மைப்படுத்தும் ஓர் நிகழ்வாக இருக்கிறது.

**ஹ.மதுஜா,**
**பொறியியல் பீடம் (2021),**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இந்து பாரம்பரியம்



உலகின் மிகவும் தொன்மையான இந்துமதம் விஞ்ஞானத்தை மிஞ்சும் அளவுக்கு பல சிறப்புகளை கொண்டது. இதனால் வேற்று மதத்தினரை பிரதானமாக கொண்ட நாடுகளில் கூட இந்துப் பண்டிகைகள் கொண்டாடப்படுவதனை காண்கின்றோம். குறிப்பாக அமெரிக்கா, லண்டன், கனடா போன்ற மேற்கத்தேய நாடுகளில் தொடர்ந்து இந்துப் பண்டிகைகளை நாட்டின் தலைவர்கள் உள்ளிட்டவர்கள் கொண்டாடுவதனை பார்க்கின்றோம்.அந்தவகையில் தற்போது ஒக்டோபர் மாதத்தை அமெரிக்காவில் இந்து மாதமாக கொண்டாட உள்ளனர்.அமெரிக்காவைச் சேர்ந்த டெக்சாஸ், ஓஹியோ உள்ளிட்ட பல மாகாணங்கள் ஒக்டோபர் மாதத்தை இந்து பாரம்பரிய மாதமாக அறிவித்துள்ளன.

ஒக்டோபரில் நவராத்திரி, தசரா உட்பட பல பண்டிகைகளை இந்துக்கள் கொண்டாடுகின்றனர். மகாளய அமாவாசையும், சில சமயம் தீபாவளி பண்டிகையும் ஒக்டோபரில் தான் வருவது உண்டு.இத்தகைய சிறப்பு வாய்ந்த ஒக்டோபரை, இந்து பாரம்பரிய மாதமாக அறிவிக்கக் கோரி அமெரிக்காவைச் சேர்ந்த பல இந்து அமைப்புகள் மாகாண அரசுகளுக்கு கோரிக்கை விடுத்திருந்தன. இதை ஏற்று டெக்சாஸ், புளோரிடா, நியூ ஜெர்சி, ஓஹியோ, மாசாசூசெட்ஸ் மாகாண அரசுகள் ஒக்டோபரை இந்துக்களின் பாரம்பரிய மாதமாக அறிவித்து அரசாணை பிறப்பித்துள்ளன. இது குறித்து அமெரிக்க விஷ்வ இந்து பரிஷத் தலைவர் அஜய் ஷா கூறியதாவது,

"இந்து பாரம்பரிய கலாசாரத்திற்கு பல ஆயிரம் ஆண்டுகள் பழமையான தொன்மையும் சிறப்பும் உள்ளது. ஆனால் வெகு சிலரே ஹிந்து சனாதன தர்மத்தை அறிந்திருப்பது ஆச்சரியமாக உள்ளது. பாரம்பரியமிக்க இந்து தர்மம் மற்றும் கொள்கைகளை உலகறியச் செய்ய வேண்டிய தருணம் வந்து விட்டது. இதையொட்டி எங்கள் அமைப்பு இதர இந்து அமைப்புகளுடன் சேர்ந்து அமெரிக்காவின் 20க்கும் மேற்பட்ட மாகாண அரசுகளுக்கு ஒக்டோபரை இந்து பாரம்பரிய மாதமாக கொண்டாட வேண்டும் எனக் கோரி கடிதம் அனுப்பியது.இதன்படி பல மாகாணங்கள் இந்து பாரம்பரிய மாதமாக ஒக்டோபரை அறிவித்துள்ளன. அந்த மாதம் முழுதும் கலை நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், பாட்டு, பேச்சுப் போட்டி உள்ளிட்ட பல நிகழ்ச்சிகள் நடத்தப்படும். இந்து கலாசார பாரம்பரியத்தின் சிறப்புகளை அடுத்த தலைமுறையினர் அறிந்து கொள்ள இந்த நிகழ்ச்சிகள் உதவும்.மேலும், அமெரிக்கா முழுதும் இந்து மாதமாக ஒக்டோபரை கொண்டாட அரசாணை பிறப்பிக்கும்படி ஜனாதிபதி ஜோ பைடனுக்கும் கடிதம் அனுப்பியுள்ளோம்" என தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதியான சிவனை முழுமுதற் கடவுளாக கொண்ட இந்துசமயம் பல அற்புதங்களை தன்னகத்தே கொண்டது. அதில் கூறப்பட்டுள்ள பல விடயங்கள் விஞ்ஞானமே வியக்கும் அளவுக்கு உள்ளன. இந்நிலையில் இந்து பாரம்பரிய மாதமாக ஒக்டோபர் மாதத்தை அறிவித்து அமெரிக்கா கொண்டாட உள்ளது. இந்துக்களான அனைவருக்கும் பெருமையே.இந்து சமயம் இந்தியாவில் தோன்றிய காலத்தால் மிகவும் தொன்மையான உலகின் முக்கிய சமயங்களில் ஒன்றெனக் கருதப்படுகிறது. ஏறக்குறைய 950 மில்லியன் இந்துக்களைக் கொண்டு உலகின் மூன்றாவது பெரிய சமயமாக இருக்கின்றது.

பெரும்பாலான இந்துக்கள் இந்தியாவிலும், நேபாளத்திலும் வசிக்கின்றார்கள். இலங்கை, இந்தோனேசியா, மலேசியா, மொரிசியஸ், சிங்கப்பூர், சுரினாம், பிஜி தீவுகள், அமெரிக்கா, கனடா மற்றும் பிற பல நாடுகளிலும் இந்துக்கள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் வசிக்கின்றார்கள்.

பிற சமயங்கள் போலன்றி இந்து சமயத்தைத் தோற்றுவித்தவர் என்று யாருமில்லை. இதனை நெறிப்படுத்த அல்லது கட்டுப்படுத்த என ஒரு மைய அமைப்பு இதற்கு இல்லை. பல்வேறு வகையில் பரவலான நம்பிக்கைகள், சடங்குகள், சமய நூல்கள் என்பவற்றை உள்வாங்கிய சமயமே இந்து சமயம்.சுமார் 5000ஆண்டுகளுக்கு முன் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களில் இந்து சமய கடவுளில் ஒருவரான சிவனின் உருவ அமைப்பு கொண்ட சிலைகள், ஓவியங்களின் ஆதாரங்கள் கண்டறியப்பட்டுள்ளது.சிந்து வெளிநாகரிகம் இந்து சமயத்தின் தொன்மையை குறிப்பதாக உள்ளது. முக்கியமாக நம்பிக்கை, அன்பு, உறுதி என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட எல்லாவிதமான சமயச் செயற்பாடுகளும் இறுதியாக ஒரே தன்னுணர்வு நிலைக்கே இட்டுச் செல்கின்றன.அதனால்தான் இந்து சமயச் சிந்தனைகள் பல்வேறுபட்ட நம்பிக்கைகள் தொடர்பில் சகிப்புத் தன்மையைக் கடைப்பிடிப்பதை ஊக்குவிக்கின்றன.

எங்கும் எதிலும் நீங்கமற நிறைந்து இருக்கும் இறைவனை அருவம், உருவம், அரு உருவமாக நமக்கு பிடித்த வடிவிலும், வடிவம் இல்லா அருவமாகவும் இந்துக்கள் வழிப்படுகின்றனர்.கடவுளை அடைய துறவறம் தேவையில்லை. இல்லறம் புகுந்தாலும் இறைவனை அடையலாம் என்றே இந்து சமயத்தில் கூறப்படுகின்றது. அத்தோடு நித்தம் பண்டிகை போல ஒவ்வொரு மாதமும் இறைவனின் பண்டிகை, விரதம் என்று ஏதாவது ஒரு விஷேடம் இந்துக்களுக்கு உண்டு.

விரதம் இல்லாத மாதமே இருக்க முடியாது. அந்தவகையில் ஒக்டோபர் மாதமும் பல சிறப்புக்களை கொண்டது. இந்நிலையில் அமெரிக்காவில் இந்த மாதம் இந்து பாரம்பரிய மாதமாக கொண்டாடப்படுவது மகிழ்ச்சியே!

**ந.அனோஜன்,**
**பொறியியல் பீடம் (2022),**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வை வளம்படுத்தும் விரதங்கள்



எல்லாம் வல்ல இறைவனை மறவாது நினைத்து அவரை மறவாது வணங்கியும் இருத்தலுமே எமது வாழ்வின் கடமையாகும். இறைவனின் அன்பைப் பெறுவதற்கு சிறந்த சாதனமாக விளங்குபவை விரதங்கள் ஆகும். விரதம் என்பதற்கு ஐந்தாம் குரவராகிய ஆறுமுகநாவலர் பின்வருமாறு வரைவிலக்கணம் கூறுகிறார். அதாவது "மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் இறைவனை மெய்யன்போடு விதிப்படி வழிபடுதலே விரதம் ஆகும்"

விரதங்களை வாரம், பட்சம், நட்சத்திரம், வருடம் என்ற அடிப்படையில் வகைப்படுத்த முடியும். அதாவது

1. வார விரதம் :– வெள்ளிக்கிழமைவிரதம், செவ்வாய்க்கிழமைவிரதம்
2. பட்ச விரதம் :– சதுர்த்தி, பிரதோசம்
3. நட்சத்திர விரதம் :– கார்த்திகை, உத்தரம், பூரம்
4. வருட விரதம் :– மகா சிவராத்திரி, நவராத்திரி

என்றவாறு அமைகின்றது.

இதைவிட இவ்விரதங்களை ஒவ்வொரு கடவுளர்களுக்குமுரிய சிறப்பான விரதங்கள் என்றும் வகைப்படுத்த முடியும். அதாவது

1. சிவனுக்குரிய விரதம் :– மகா சிவராத்திரி, திருவாதிரை, கேதார கௌரி விரதம்
2. விநாயகருக்குரிய விரதம் :– சதுர்த்தி, விநாயக சஷ்டி
3. சக்திக்குரிய விரதம் :– நவராத்திரி, வரலட்சுமி விரதம், ஆடிப்பூரம்
4. முருகனுக்குரிய விரதம் :– கந்த சஷ்டி, திருக்கார்த்திகை

இவ்வாறு விரதங்களை நாம் அனுஷ்டிக்கின்றோம்.

விரதங்களை அனுஷ்டிப்பவர்கள் கைக்கொள்ள வேண்டிய பொதுவான நியதிகள் பல உள்ளன. விரத நாளன்று அதிகாலையில் நீராடி சுத்தமான ஆடை அணிந்து தூய மனத்துடன் ஆலய தரிசனம் செய்தல் வேண்டும். அன்று முழுவதும் திருமுறை ஓதுதல், புராணம் படித்தலும் கேட்டலும், சமயப்பிரசங்கங்கள் கேட்டல் முதலான சிவகாரியங்களில் ஈடுபட வேண்டும். விரதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுஷ்டிக்கும் நாட்களில் பகலில் நித்திரை கொள்ளல், தாம்பூலம் தரித்தல், கோபம் கொள்ளல், நிந்தித்தல், புகைத்தல், பொய் பேசுதல் முதலான தீய செயல்களில் ஈடுபடுதலை தவிர்த்தல் வேண்டும்.

விரதங்கள் அனுஷ்டிப்பதால் பல நற்பண்புகள் வளர்க்கப்படுகின்றன. மனம் ஒருநிலைப் படுத்தப் படுகின்றது, பாவங்கள் குறைந்து மனம் அமைதி பெறுகின்றது. இதனால் தூய சிந்தனை, பணிவு, மனவலிமை, கடவுள் பக்தி முதலான விழுமியப்பண்புகள் வளர்க்கப்படுகின்றன. அத்தோடு உடலும் உள்ளமும் தூய்மைப்படுத்தப்படுகின்றது. அத்தோடு விரதங்கள் வாழ்க்கையை வளம்படுத்துவதோடு பாவங்கள் குறைந்து முத்திக்கு வழி காட்டுபவனவாக அமைகின்றன. எனவே எல்லோரும் விரதங்களை அனுஷ்டித்து வாழ்வை வளம்படுத்துவோம்.

**ஜெ.ஆர்த்திகன்,**
**பொறியியல் பீடம் (2022),**
**பேராதனைப் பல்கலைக்கழகம்,**

துணையா எனையே தொடரும் மயிலே
புணையா வருமே புகழ்குக் குடமே
அயில்வேல் வருமே அடியேன் துணையா
பயில்செந் தமிழாய்ப் பலுகி வருமே
சொலும்ஓம் மெனுமச் சுடரும் எழுத்தே
ஒலியா உதித்திவ் வுலகம் அனைத்தும்
படைத்துப் புரந்து துடைக்கும் பொருளா
உடைய ததையே உணர்ந்தோர் விழைந்தே
முருகா முதல்வா முழுமைப்
பொருளே குருவே எனவுணர் வாரே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம் தாய்மொழி தமிழ்



எமது தாய் மொழி தமிழ். தமிழ் என்பதன் பொருள் இனிமை. உலகில் காலத்தால் மூத்த மொழிகள் பல உள்ளன.அவற்றுள் தமிழ், சமஸ்கிருதம்,இலத்தீன் முதலியன சிலவாகும்.

சமஸ்கிருதமும்,இலத்தீனும் இன்று பேச்சு வழக்கில் இல்லை.ஆனால் தமிழ் மொழி பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் இருந்து வருகின்றது. தமிழ் மொழி தான் பிறந்து பல்லாயிரம் ஆண்டுகள் ஆகியும் இளமையும் எழிலும் குன்றாமல் இருந்து வருகின்றது.

தமிழ் மொழி ஆரம்பத்தில் இந்திய துணை கண்டத்தின் தென் பகுதியில் வாழ்ந்த மக்களிடையே வழங்கி வந்தது. தமிழ் மொழியை பேசிய இனத்தோர் தமிழர் எனப்பட்டனர். தமிழ் மொழி வழங்கிய தேசம் தமிழகம், தமிழ் நாடு, திராவிடம் என பல பெயர்களால் அழைக்கப்பட்டது.

தமிழ் நாட்டை பண்டைய நாளில் சேர சோழ பாண்டியர் எனும் மூவேந்தர் ஆட்சி புரிந்தனர். இவர்கள் தமிழ் மொழியை வளர்ப்பதில் அரும்பாடு பட்டனர். தமிழ் மொழியை கற்று உணர்ந்த புலவர்களை பொன்னும் பொருளும் தந்து வாழ்த்தினர்.

தமிழ் நாட்டில் அன்று பிறந்து வளர்ந்த தமிழ் இன்று மலேசியா, சிங்கபூர், இலங்கை, தென்னாபிரிக்கா போன்ற பல நாடுகளில் வழங்கி வருகின்றது. தமிழ் கூறும் நல்லுலகம் மிகவும் விரிவடைந்து விட்டது. தமிழ் மொழி இயல், இசை, நாடகம் எனும் முப்பெரும் பிரிவுகளை கொண்டது. இயல் தமிழ் இலக்கணத்துடன் கூடியது. இசை தமிழ் இசையுடன் இணைந்தது. நாடக தமிழ் கதை, கூத்து என்பன கலந்து வருவது.

பண்டைத்தமிழ் மன்னர்கள் மூன்று சங்கங்களை அமைப்பித்தனர். அவை முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்பனவாகும். இதன் மூலம் பல தமிழ் நூல்களை இயற்றினார்கள். இலங்கை நாட்டவரான ஈழத்துப்பூதன் தேவனார் கடைச்சங்க புலவருள் ஒருவர் ஆவர். அவர் நக்கீரர், கபிலர், பரணர் போன்று அரிய பாடல்களை எழுதிஉள்ளார். தமிழ் நூல் பரப்பு மிகவும் பரந்து பட்டது. "திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம், பெரியபுராணம், தேவாரம், திருவாசகம், திவ்யபிரபந்தம்" என்பன அவற்றுள் சிலவாகும். பாரதியார் "யாமறிந்த புலவரிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பனைப்போல் வள்ளுவர்போல் இளங்கோவடிகளைப்போல் எங்காயினும் கண்டதில்லை" என அறுதியிட்டு கூறியுள்ளார்.

மிகப் பிற்காலத்திலே நாவலர் பெருமான், பாரதியார் போன்ற சான்றோர் பலர் தோன்றி தமிழ் மொழிக்கு பெரும் தொண்டாற்றினர். "நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே?" என்று சொல்லும் அளவிற்கு நாவலரின் தொண்டு அமைந்திருந்தது. பாரதியார் புதுமைப் புரட்சிக்கு வழிவகுத்தார்.

இன்று பல்கலைக்கழகங்களும், ஆதீனங்களும், தமிழ் மன்றங்களும் தமிழ் மொழியை பேணுவதில் ஈடுபட்டு வருகின்றன. எளிமை, இனிமை, தொன்மை படைத்த தமிழ் மொழியை சான்றோர் தமிழ் தாய் என்றும் தமிழ் தெய்வம் என்றும் போற்றுவர். எங்கள் தமிழ் தாய் தமிழ் பேசும் பல கோடி மக்களின் இதயங்களில் இன்றும் வாழ்ந்து வருகின்றாள் என்று கூறினால் அது மிகையாகாது.

**அ.கோகுலன்,**
**பொறியியல் பீடம் (2022),**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**

சிந்தனையற்ற தனிமை வேண்டும் மனம் மரத்திட வேண்டும்.
தன்னிலை மறந்திருக்க வேண்டும் மயக்கம் அறுத்திட வேண்டும்.
உள்ளொளி பெருக வேண்டும் உண்மை நிலை அறிய வேண்டும்.
உன்னுடன் கலக்க வேண்டும் சிவமாகவே மாறிட வேண்டும்...

வாழ்க்கையில் சிவத்தை தவிர உனக்கு நிரந்தரம் என்று ஒன்றும்
இல்லை மற்றவை அனைத்தும் நீ யாக உருவாகி கொண்ட மாயய்
இன்பம் தரும் என்று ஏமாறாதே.. சிவாய நம ஓம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைலாய நந்தி



கைகூப்பி நின்றேன் கைபிடிப்பாய் என்
கைலாயநந்தி – சிவன்
கால்பிடித்தே நான் கரை வரக்கேட்பேன்
காப்பாய்நீ நந்தி

ஆலயமுகப்பில் ஆனந்தமாய் நீ
அமர்ந்திருப்பாய் நந்தி – சிவன்
அடிபணிந்திட நான் அழுதிருக்கும் நிலை
எடுத்துரைப்பாய் நந்தி

ஆழியிலலையும் ஓர்துளி நானென
அறிந்திடச்செய் நந்தி – இவன்
அமைதியெனும் புது ஆலயம்கண்டிட
அருகினில்வா நந்தி

உழல்வது நானிலை ஊழ்வினையென்றே
உணர்த்திடவா நந்தி – நான்
உமையொரு பாகனின் ஒருதுளிபாகமென்
றுறைந்திடச்செய் நந்தி

சூழ்வினையாவையும் சுகமெனப்பூசிச்
சுமப்பவன்நான் நந்தி – நிதம்
சுழு முனைநாடித் தவமேபுரிய
துணையருள்வாய் நந்தி

நானிலமதிலே நாற்புரம்மதிலே
நடுவினில்நான் நந்தி – இனி
நான்தொழசிவனின் நிழல்தனைக்காட்டு
நல்லவனே நந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாசியின்சுவாசம் நாயகனுக்கும்
நகையாமோ நந்தி – அதில்
நானோரிழையாய் நாதனின் தோள்தொட
நன்மைசெய்வாய் நந்தி

வேந்தன் பட்டியில் வடிந்திடும்நெய்யில்
வசித்திருக்கும் நந்தி – சிவன்
விரும்பிய நந்தனின் வேண்டுதல்கேட்டு
விலக்கியதிரு நந்தி

அக்னிரூபன் ருத்ரன் தூயவன்
ஆனவனே நந்தி – உனக்
கருகம் புல்லணி விதேனெனக்கு
அனுமதிதா நந்தி

அழகியநந்தி அடியேந்தமிழை
அணிந்துகொண்டாய் நந்தி – தினம்
அண்ணாமலையை ஐந்தெழுத்தோதிட
அருளியபேர் நந்தி

வரந்தந்தாய் நீ வந்தனை செய்தேன்
வல்லவனே நந்தி – நான்
வளமாய்ச் சிவனை வழிபடவே நீ
வழிவிட்டாய் நந்தி

**தெ.திவிசன்,**
**பொறியியல் பீடம் (2022),**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழும் சைவமும்



சமயம் என்பது மானிட சமூகத்தை நல்வழியில் வாழ வழிகாட்டும் தன்மையு டையதாகும். உலகமெல்லாம் ஒரே சமயம் என்ற நிலை இல்லாமல் இந்து சமயம், கிறிஸ்தவ சமயம், இஸ்லாம் சமயம், பௌத்த சமயம், சமண சமயம் என்று பலவாறாக உள்ளன. எல்லா சமயத்திற்கும் அடிப்படையானது இறை நம்பிக்கை. "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்." என்ற திருமூலரின் கருத்தின் மூலம் அன்பே சிவம் என்கின்ற தாரக மந்திரமே சைவசமயத்தின் ஆணிவேர். இந்த சமயக்கொள்கைகள், கோட்பாடுகள்,சிந்தனைகள் போன்றவற்றைப் பரப்பும் மனிதனிடம் இதற்காக மொழி என்கின்ற கருவி தேவைப்படுகின்றது.

மொழிகளுக்கெல்லாம் தாய்மொழியான தமிழ் மொழியானது தொன்மையையும் சிறப்பையும் தன்னகத்தே கொண்ட இலக்கியவளம் பொருந்திய செம்மொழியாகும். உலகில் வாழும் உயிரினங்களில் மனிதன் மட்டுமே மொழியினைப் பயன்படுத்துகின்றான்.மொழியானது உணர்வுகளையும், கருத்துக்களையும் பகிர்ந்துகொள்வதற்கு அவசியமாகும். அவ்வகையில் உலகின் முதல் மொழி என்று தமிழ்மொழி போற்றப்படுகின்றது. தமிழ் மொழியினை பாரதியார் "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று கூறி தமிழ் மொழியினை சிறப்பித்துள்ளார். மொழிகளிலே தமிழ் மொழியே தொன்மையானதாகும். இந்தியாவின் மிகவும் தொன்மையான கல்வெட்டுக்களைப் பெற்ற மொழியாக தமிழ் மொழியில் வட்டெழுத்து முறையே அதிகம் பயன்படுத்தப்படுவதால் இம் முறை வட்டெழுத்து எனப்படுகிறது.

சைவம் என்பது சிவனை முழுமுதற் கடவுளாக வணங்கும் சமயமாகும். "சைவம் சிவனுடன் சம்மந்தமானது" என திருமூலர் திருமந்திரத்தில் குறிப்பிடுகின்றார். சைவ சமயத்தை சைவம் எனச் சுருக்கமாக அழைக்கின்றனர். பழந்தமிழர்களின் ஐந்நிலத் தெய்வமான சேயோன் (சிவந்தவன்) சிவனாக மாறியதையும் சேயோன் வழிபாடே சிவன் வழிபாடாக மாறியதையும் இம் மதத்தினை சிவமதம் என்றும் தமிழர் சமயம் எனும் நூலில் பாவணார் குறிப்பிடுகின்றார். இச்சமயம் உலகில் தோன்றிய முதல் சமயமென கூறப்படுகின்றது. மொகஞ்சதாரோ – ஹரப்பா அகழ்வாராய்ச்சிகளில் இருந்து ஆரியர் வருகைதர முன்பே ஒரு நாகரிகம் இந்தியத் துணைக்கண்டத்தில் இருந்ததென்பதற்கும் அது திராவிட நாகரிகம் என்பதற்கும் சான்றுகள் கிடைத்ததன் அடிப்படையில் ஜியு போல் அவர்கள் ஆரியர் வருகைக்கு முன்பே தென்னிந்தியாவில் நிலவிய வரலாற்றுக்கு முற்பட்ட சமயமே சைவம் என்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையில் சைவசமயத்திற்கும் தமிழுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை சங்ககாலம், சங்கமருவியகாலம், பல்லவர்காலம், சோழர் காலம், நாயக்கர்காலம், ஐரோப்பியர் காலத்தில் இருந்து வந்த தமிழ் நூல்களில் இருந்து அறிந்துகொள்ள முடிகிறது. சைவத்தின் கொள்கைகளையும் சிந்தனைகளையும் பரப்புவதில் தமிழ்மொழி பாரிய செல்வாக்கு செலுத்தியுள்ளது. எடுத்துக்காட்டாக எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ் கணக்கு நூல்களில் சிவனைப்பற்றிய செய்திகள் இருப்பதைக்காணலாம். "பிறைநுதல் பொழலிந்த சென்னி நீலமணி மிடற்று ஒருவன்" புறநானூற்றிலும், " பிறவா யாக்கை பெரியோன் கோவிலம்" என சிலப்பதிகாரத்திலும் கூறப்பட்டுள்ளது. மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிக காலப்பகுதியில் தமிழ்மொழி தொடர்பான எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டது போல் சிந்துவெளி நாகரிகத்திலும் சிவலிங்கம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமையும் முருகனைத் தமிழ்கடவுள் என கூறுவதையும் வைத்து தமிழருக்கும் சைவத்துகுமிடையிலான தொடர்பைக் காட்டுகின்றது.

சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பிய நூல்களிலும், திருக்குறள், மற்றும், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகரது பதிகங்களிலும் தமிழ் மொழியின் தொன்மையும் சைவத்தின் மேன்மையும் எடுத்தியம்பப்பட்டுள்ளதை காணமுடிகின்றது. எடுத்துக்காட்டாக இறைவன் தமிழை ஒத்தவன் எனவும், தோடுடைய செவியன் எனவும் உலகெலாமுணர்ந்து ஓதுதற்குரியவன் எனவும் நம்பியாண்டார் நம்பி, சம்பந்தர், சேக்கிழார் என்போர் கூறியுள்ளனர். எனவே தமிழ் மொழி சைவத்தின் வளர்ச்சிக்கு மகத்தான பங்காற்றுகின்றது.

எனவே செம்மொழியான தமிழ் மொழியானது "கல் தோன்றி மண்தோன்றா காலத்தே வானோடு முன்தோன்றிய மூத்தகுடி" என புறப்பொருள் வெண்பா மாலை கூறுகின்றது. சைவசமயத்தின் கருத்துக்களை தமிழ் மொழியில் சான்றோர் பரப்பியமையால் சிவபக்கதி யோடு இணைந்து தமிழ்மொழியும் வளர்ச்சி பெற்றது. இந்துசமயத்தின் உயிர் நாடியாக சைவசமயம் இருப்பது போல சைவசமயத்தின் உயிர்நாடியாக தமிழ்மொழி விளங்குகின்றது. எனவே சைவமும் தமிழும் பின்னிப் பிணைந்த தொடர்பு கொண்டவை.

**ப.அன்ரனி சபேசன்,**
**பொறியியல் பீடம் (2022),**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாண்டவலாஸ்யா !!!



உமையவளின் பாதம் வருடிய மணவாளா
உம் பாதம் நாம் வருடினோம்
அடைக்கலம் அடைய வைத்தாய் – பின்
அணையிட்டு ஏன் மறுத்தாயோ???

கண்ணிரண்டு திறந்த பாவியாக
நான் இப்பூவுலகில் ஆடித்திரிய
இது உனதில் என அறிவித்த
அறியபெரும் உணர்ச்சிப் பெரியோன்

தூக்கிய திருவடிகளைத் தொழுது
ஏந்திய துடிக்கையினை ஏதிலார் பணிய
கொழுந்தெழுந்த பனிச்சடையினை
ஆதரிக்கும் பேற்றினை வழங்காய்?

குறிஞ்சிக் குமர வடிவேலனின் பரப்புச்
சரித்திரம் குன்றின் உச்சியில் நின்று
அண்டமெங்கும் சுடரொளி வீசக்
காரணகாரணியோனே! எந்தையே!!

நற்குரவர் நால்வர் தொழுதெழும்படியாக
வினைய வினைகளையெல்லாம் களைந்து
விடமாக உண்ட அப்பெருந்தகையோன்
நீயே! தாண்டவலாஸ்யா!!.......

ந.ரிசாயினி,
பொறியியல் பீடம் (2022),
பேராதனைப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வளர்ப்போம்



எம் மொழியும் இல்லை எம் மொழிக்கு நிகர்
எந்நெறிக்கும் எம் மொழியே ஏற்றியது சுடர்
புலவோர் பலரை நல்கிய மொழி
புகழ்ந்து பின் செல்வோம் அவர் தம் வழி

அகம் புறம் என திணை இரண்டு –அதில்
அடங்கும் கவியோ பல மடங்கு
மூவெழுத் தரவமே இன்ப அமுது
களிப்படைவோம் சொந்தம் கொண்டாடும் பொழுது

உயிரும் மெய்யும் தமிழுக்குடைமை – அதில்
காப்பியம் தந்தது கவியின் திறமை
இப்புவி தனில் தமிழராய் ஜனித்ததில்
இம்மையும் மறுமையும் அடைவோம் பெருமை

கோ வாகை சூடும் வீரத்தமிழ்
கோதை ஏக்கம் கூறும் முல்லைத்தமிழ்
முச்சங்கம் வளர்த்த மூத்த தமிழ்
காலத்தால் அழியாமல் காப்போம் வானளந்த புகழ்.

பு.மகிஷனா
பொறியியல் பீடம் (2022),
பேராதனைப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்பண்புகள்



நாம் ஒவ்வொருவரும் நம் அன்றாட வாழ்வில் பல்வேறு விதமான மனிதர்களை சந்திக்கிறோம்.உரையாடுகிறோம். நாம் இவர்களுக்கிடையே எவ்வாறான இடைமுகத்தை ஏற்படுத்துகிறோம்? இவ்வினா நம்மை சற்றே சிந்திக்க வைக்கிறதல்லவா. ஆம், தற்காலத்தில் மனிதர்கள் ஒருவருக்கொருவர் தொடர்புகொள்ளும் விதம் சற்று கவலைக்கிடமாகவே உள்ளது.

இன்றைய நவீன உலகில் வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் வாழ்க்கையில் பெரும்பாலா னவர்களிடையே போட்டி, பொறாமை என்பனவே அதிகளவில் உள்ளது. அந்தவகையில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய சில நற்பண்புகளை சைவ விழுமியங்களுடன் நோக்குவோம்.

**(அ) உளத்தூய்மை**

மனம் தூய்மையாய் இருத்தல் உளத்தூய்மையாகும். புறத்தூய்மை நீரால் அமையும், அகத்தூய்மை அன்பால் அமையும். சிந்தனை ,சொல், செயல் என்பன தூய்மையானதாக அமைய அன்பு வேண்டும். இதனால் பொய், களவு, குருநிந்தனை போன்ற பாதகச்செயல்கள் இல்லாது ஒழியும். உள்ளம் தூய்மையாய் இருக்கும் போது அங்கே பொறாமை இருக்காது.

"மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன
ஆகுல நீரபிற" என்பது – வள்ளுவர் வாக்கு

மனதிலே அழுக்கில்லாதிருத்தல் எல்லா அறங்களிலும் மேலானது. மனிதனுடைய உள்ளத்திலே அன்பு இருந்தால் பேரவா, கோபம், அதன் காரணமாக கொடுமையான சொற்கள் என்பன இடம்பெறாது. புலமையான அறிவு மட்டும் உயர்நிலை விழுமியமாகாது. ஒருவர் வாழும் பொருட்டு சம்பாதிக்க உதவலாம். அன்பு மனத்தூய்மையை மேம்படுத்தும். தூய்மை தெய்வீகத்தை மலரச் செய்யும். எனவே மனிதன் உளத்தூய்மையுடன் இருக்கும் போதே அவன் வாழ்வில் அமைதியையும் சகிப்புத்தன்மையையும் ஆனந்தத்தையும் பெறுகின்றான்.

**(ஆ) சகிப்புத்தன்மை**

மனத்தூய்மை உள்ள இடத்திலேயே சகிப்புத்தன்மை ஏற்படும். அந்நிலையில் சமாதானம் பிறக்கும்.இந்நிலையில் பிறருக்கு உதவி செய்தல் நிகழும். ஒருவர் மற்றவருடன் பழகும் போதும், அண்டை அயலவருடன் பழகும் போதும் சகிப்புத்தன்மை இல்லாது விட்டால் உறவு கொள்ள முடியாது. மற்றவர் கூறும் கருத்துக்களில் வேறுபாடு இருக்கலாம். ஆனால் அவற்றை செவிமடுத்தல் சிறந்த பண்பாகும். மனிதனை உயர்ந்த பண்புள்ளவனாக்கும் பொறுமையும், அதனால் உண்டாகும் சகிப்புத்தன்மையும் வாழ்வில் வெற்றியைத்தருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல தம்மை இகழ்வாரைப் பொறுத்தல் தலை"

என்கிறது பொய்யாமொழி.மற்றவர்கள் எமக்கு தீங்கு செய்யும் போது அவர்களைப் பகைக்காது அவர்களுடன் அன்பாக உரையாடுவது சிறந்த அறச்செயலாகும். மனம் மாசில்லா இடத்திலேயே சகிக்கும் தன்மை ஏற்படும். சகிப்புத்தன்மை இழந்தவன் வாழ்வில் அமைதி இழந்தவனாவான். எனவே எல்லோருடனும் நிதானமாகவும் சகிப்புத்தன்மையுடனும் நடந்து கொள்வதன் மூலம் சிறந்த உறவை பேணுவோமாக.

**(இ) சமாதானம்**

நாம் மற்றவருடன் மனப்பூர்வமாக நல்லிணக்கத்துடன் இருத்தல் சமாதானமாகும். நாம் நமது பெற்றோருடனும், சகோதரர்களுடனும், பெரியவர்களுடனும், அயலவர்களுடனும், சமூகத்தில் வாழும் அனைவருடனும் அன்புடன் வாழ்வதன் மூலம் அனைவரும் நலமாக வாழலாம். உள்ளத்தில் அன்புள்ள போதே மனிதன் அமைதி அடைய முடியும். அமைதி உள்ள போதே சமாதானம் நிலைபெறும். அன்பில்லா வாழ்க்கை அமைதியற்றது ஏனெனில் அன்பில்லாத போது மனம் அமைதி இழந்துவிடுகிறது. அதனால் சமாதானம் தொலைந்து விடுகின்றது.

உலகியல் அறிவு வாழ்க்கைக்கு அவசியம் என்பது சந்தேகத்திற்கு இடமற்றது. அறிவைத் தேடிக்கொள்ளும் அதேவேளை சரியான வாழ்க்கை பற்றிய அடிப்படை உண்மை பற்றியும் ஒழுகலாறு பற்றியும் தெரிந்திருத்தல் அவசியம். நாம் மற்றவர்களை உண்மையாக விஸ்வாசிப்பதன் மூலமே உண்மையான சமாதானத்தை வளர்த்துக்கொள்ள முடியும்.

**(ஈ) உதவிசெய்தல்**

எவ்வித எதிர்பார்ப்புமின்றி செய்யும் சேவையே உதவியாகும். மனித வாழ்வு இயற்கையுடன் இணைந்துள்ளது. இயற்கையின் பேருபகாரத்தால் மனிதன் தான் வாழ்ந்து கொண்டிருப்பதை அறிந்து தானும் மற்றவர்களுக்கு உதவி செய்ய முன் வர வேண்டும். எதிர்பார்ப்பு எதுவுமற்ற உதவியின் மூலம் இறையருள் கிட்டும் பிள்ளைகள் வீட்டில் பெற்றோருக்கும் முதியோருக்கும் உறவினர்களுக்கும் உதவி புரிய வேண்டும். அயலாருக்கு உதவுதல் நல்ல பண்பாகும். சமூகத்தில் யாருக்கு உதவி தேவையோ அவர்களுக்கு மனப்பூர்வமாக உதவி செய்ய வேண்டும்.

மனம் நொந்து இருப்பவர்களுக்கு ஆறுதல் கூற வேண்டும். பராமரிக்க யாருமே இல்லாதவரை பராமரித்தல் வேண்டும். நோயாளர், அங்கவீனர், வயோதிபர் அனைவருக்கும் நம்மாலான உதவிகளைச் செய்வது சிறந்த பண்பாகும். சைவர்கள் எல்லா உயிரிலும் சிவன் உறைபவன் என்ற நம்பிக்கை உள்ளவர்கள். எனவே எந்த உயிரின் துன்பத்தை போக்கவும் உதவி செய்வது சைவசமயத்தவரின் கடமையாகும்.

**ர.ஸதுர்சிமா,**
**பொறியியல் பீடம் (2022),**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நொந்துதடு மாறுவோர்க்கு நொடியில் விடை விளக்கிடுவீர்!

எங்களுக்கு முதற்கடவுள் எங்கும் நிறைந்ததெய்வம்
திங்கள்சடை வைத்தசிவன் தினம்கூறும் சைவமேதான்
தங்கள்தனி அக்கடவுள் தகைமைதம் கிண்டிணனாம்
உங்கள்நிலை உகந்ததல்ல எடுத்துரைப்பார் வைணவத்தார்

இருசமயங்கள் இணைந்து இந்துமக்களாய் உயர்ந்தோம்
ஒருசமயமாக்கி விட்டு ஒன்றிவிட்ட நிலையிதுதான்
திருதிரு என விழித்துத் திண்டாடித் திகைப்பவர்க்கு
உரு இதுதான் என்றுசுட்டி உயர் கடவுள் காட்டவேண்டும்

சிவனுக்கு உமை,கங்கா சிந்துநடை முத்துமாரி
இவனுக்கு இவர்களோடு இச்சைதீர்க்க மோகினியாம்
அவனுக்கு இலக்குமியாம் அவதரித்தாற் பலபெண்கள்
எவனுக்கு ஒருத்திதாரம் எடுத்ததமிழ் நெறி எங்கே?

ஆய்ந்தறிந்த விஞ்ஞானம் ஆகாயச் சந்திரன் தான்
தேய்ந்துதான் வளருதற்கு தேடிக் கண்ட உண்மையுண்டு
பாய்ந்தாடும் விநாயகரை பார்த்து அவன் சிரித்ததாலா
ஓய்ந்திருந்து கற்கும்பிள்ளை ஓய்வின்றிக் குழம்பலாமா?

திருமணச் சடங்கின்போது திறன் கற்புத் திண்மைக்கையர்
திருமண மக்கள் பகலும் திசையருந்ததியைக் காண்பர்
திருமணத் தினத்தின் பின்தான் திண்மையாய் வேண்டும் கற்பு
திருமணத் தினத்தின் முன்பு திசைமாறல் ஏற்கும் ஒன்றோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்ததன் கணவன் இன்பத் தகைமைகள் அறிவாள்தாரம்
வந்தவன் தொடுகை இன்ப வகைமாற்றம் உடன் அறிவாள்
அந்தரம் அதிற்சுகித்தோர் அடைந்திட்ட சாபநீக்கம்
சுந்தரம் கண்டாற் சுகிக்கச் சுற்றுதலை ஊக்குதற்கோ?
இந்து சமயத்திலுள்ள இனிய கதை தத்துவங்கள்
சிந்துகின்றனவற்றையெல்லாம் சிரமேற்கொண்டொழுகும்போது
முந்துமறிவுக்குச் சில முரண் நிலைகள் தெரிவதனால்
நொந்துதடு மாறுவோர்க்கு நொடியில் விடை விளக்கிடுவீர்?

**பா.மனோஜ்,**
**பொறியியல் பீடம் (2022),**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**

என் வாழ்க்கை பயணத்தில் இந்த உலகில் வாழும் மனிதர்களோடு போராடி போராடி நான் தோற்றுப்போவதை விட என்னை படைத்த இறைவனோடு போராடி என்றாவது ஒரு நாள் வென்றுவிடுவேன் என்ற நம்பிக்கையோடு காத்திருப்பனே. சிவாய நம





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபெருமானின் மகிமைகள்



நின் புகழ் பாட
கீர்த்தனை ஏகதுண்டோ
நின் பிறை வணங்க
தலமேதும் புகவேணுமோ
நின் நடன வியர்வை
துளியில் துளிர விழைவேனோ
நின் கழல் பதிய
மனம் மண்ணாகுமோ
பிறையனே அருள் தாராயோ!!

சிவம் என்றால் அன்பு, இன்பம், மங்களம் என்று பொருள். அன்பாக அருட் பெருஞ் சோதியாக, இன்பமாக மங்களமாக மறைபொருளாக எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரமன் சிவன். அவரை கடல் கொஞ்சும் குமரி முதல் கைலைப்பனிமலை வரை ஆலயங்கள் பலவற்றில் அமர்த்தி வழிபட்ட பெருமை மிக்கது நமது புண்ணிய பூமி.

இவர் பிறப்பும் இறப்பும் இல்லாதவர்.இவரே மும்மூர்த்திகளையும், தேவர்களையும், அசுரர்களையும், உலகினையும், உலக உயிர்களையும் தோற்றுவிப்பதாகவும், பிரளயக் காலத்தில் அனைவற்றையும் அழித்துத் தன்னுள் ஒடுக்கிச் சிவன் மட்டும் நிலையாக இருப்பதாகச் சைவ சமய இலக்கியங்கள் தெரிவிக்கின்றன.

சிவ வழிபாட்டின் சிறப்புக்களை வேதங்கள் விளக்குகின்றன. இதிகாசங்கள் எடுத்து உரைக்கின்றன. உபநிடதங்கள் உணர்த்துகின்றன. புராணங்கள் பகருகின்றன. வேதங்களிலும், உபநிடதங்களிலும் சிவபெருமான், ருத்திரன் என்ற பெயரில் குறிப்பிடப்படுகிறார். ருத்திரன் என்றால் துன்பங்களைத் துடைப்பவன் என்று பொருள்.

வியாசர் அருளிய சிவபுராணம் ஆதிசங்கரரின் சிவாநந்தலகிரி,அப்பைய தீட்சதரின் சிவார்க்கமணி, தீபிகா ஆகியவை ஒப்பற்ற சிவபக்தி நறுமலர்கள். சிவபெருமானை லிங்கவடிவில் வழிபடுதல் தொடர்பாகப் பல புராண வழக்குகள் உள்ளன.திருமாலுக்குக்கும், பிரமனுக்கும் தம் சக்தியை உணர்த்தப் பேரொளிப் பிளம்பாக, அண்ணாமலையாகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமான் நின்ற வரலாறு அனைவரும் அறிந்ததே.ஜோதிசொரூபமே லிங்கம். சிவ வழிபாட்டின் மகிமையை முதல் முதலாக உணர்த்திய தனி நூல் சுவேதா சுவேதர உபநிஷமாகும். ருத்திரனின் பேராற்றல்களை வருணிக்கும் அந்நூல் சிவ வழிபாட்டுக்கு ஒரு திறவு கோல் எனலாம். கொடுப்பதற்கு சிவன் இருக்கையில் தடுப்பதற்கு எவன் இருக்கிறான் என்று கூறினால் மிகையல்ல. காப்பதில் என் சிவன் போல் கடவுள் இங்கு யார்?? ஒன்றே பதி ஒருவனே கடவுள் என்று சிவநெறி கூறுகிறது.

சிவனுக்குரிய விரதங்களில் மகா சிவராத்திரி சிறப்பு வாய்ந்தது. சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் பிறவா யாக்கை பெரியோன் என்று சிவனை வர்ணித்துள்ளார். சிலையாக கண்டோர்க்கு சிலை தான் கலையாக கண்டோர்க்கு கலை தான், இறை என்றோர்க்கு இறை தருவான் சிறை கொண்டு மனதில் சிவன் ஆள்வான். ஆதாரமே நீயாகும் போது அங்கு யாரை தேடுவேன். ஜீவனே சிவனாம்,அவனை சிக்கெனப்பிடித்தால் நம் சிக்கல்கள் பறந்தோடும்.

தூக்கி வைப்பதும் அவனே...
தூக்கி சுமப்பதும் அவனே...
நம்பிக்கையுடன் ஓடு நிழலாய்
அவன் வருவான்
உனை காத்திடுவான்
நெஞ்சில் அவனே ...
என்றும் சிவனே....

**நி.சதுர்ஜிகா,**
**பொறியியல் பீடம் (2022),**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணவாளக் கோல நிகழ்வுகளின் பதிவுகள்...









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தித்திக்கும் தமிழ்மொழி



"தமிழுக்கு அமுதென்று பெயர் – அந்தத் தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்றார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். கிடைத்ததற்கரிய பொருளான அமுதம் தமிழுக்கு ஒப்பானது என்கிறார். எங்கள் உயிரினும் மேலான தமிழ்மொழியானது செந்தமிழ், பைந்தமிழ், நற்றமிழ், தீந்தமிழ் எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. இத்தகைய தமிழ்மொழி எங்கள் தாய்மொழி என்பதில் நாங்கள் அளவிட முடியாத பெருமை கொள்ளலாம். ஆனால் இன்றைய காலகட்டத்தில் "தாம் தமிழர்" என்று சொல்கிறார்களா? இல்லை. தமிழ்மொழியைத் தான் சரியாக பேசுகின்றார்களா என்றால், அதுவும் இல்லை.

உலகம் போற்றும் உத்தம நூலாம் திருக்குறள். அந்த வான்மறையைப் பொய்யா மொழிப் புலவன் வள்ளுவன் தந்தான். ஆத்திசூடி, கொன்றைவேந்தன் என்னும் அரும்பெரும் பொக்கிஷங்களை ஔவைப் பிராட்டியார் எமக்களித்தார் "கேட்டாலும் இன்பம் கிடைக்கும் கேண்மின்" என்று சிறப்பிக்கப்படும் நளவெண்பாவை புகழுக்குரிய புகழேந்திப் புலவர் ஆக்கினார். கற்பையும் காதலையும் கவி ஊற எடுத்துரைத்த பெருங்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரத்தை இளங்கோவடிகள் உருவாக்கினார். பாமரரும் படித்துணர பாடல்களைத் தந்து தமிழ்மண்ணை புகழ் பரப்பித் துயர்துடைத்த பாவேந்தன் பாரதிதாசன் போன்றோர் தித்திக்கும் தமிழ் மொழியின் சிறப்பிற்கு அணிசேர்க்கின்றார்கள்.

ஆனால் நாங்களோ? வார்த்தைக்கு வார்த்தை அந்நிய மொழியை பேசுகின்றோம். அழகும் சிறப்பும் பொருந்திய தமிழ்ச்சொற்கள் இருந்தும் அதை மறந்தது போல நடித்து தமிழை ஏளனப்படுத்துகின்றோம் தாய்ப்பாலுடன் அந்நிய மொழியையும் கலந்து குடித்து அந்நியரின் நாகரீகத்தை பேணுகின்றோம். தாய்மொழியில் படிப்பதை விட்டுவிட்டு சர்வதேச மொழியில் படிப்பது தற்கால வழக்கமாகிவிட்டது. மானிடத்தில் முதற்குரலாய் "அம்மா" என்னும் சொல்லை தன்னுள் கொண்டது தமிழ்மொழி. அதுவும் மாறி "மம்மி" என்கின்ற நிலையில் உள்ளோம்.

பல்மொழி தேர்ச்சி பெற்ற பாரதி,

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்"

என ஆணித்தரமாக கூறியுள்ளார். அந்த தீர்க்கதரிசியின் வார்த்தையை மறுக்க இயலாது. திருவாசகம் என்னும் தேனைத் தந்த மாணிக்கவாசகரின் திருவாசகத்திற்கு உருகாதோர் வேறொரு வாசகத்திற்கு உருகார் என்பதெல்லாம் பொய்யா? உணர்வுக்கு தமிழ் என்று உலகமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்துக்கொண்ட பின்னும் தமிழ் மொழியை தமிழாயக் கொண்டவர்கள் ஒத்துக்கொள்ள மறுக்கிறார்கள்.

"சங்கம் வளர்த்த தமிழ், தமிழ் புலவர் காத்த தமிழ் கங்கை கொண்ட எங்கள் தமிழ் – வெல்லும் ஒரு காலம் நல்ல பதில் சொல்லும்."

என்று துணிவுடன் பாடினார் கவியரசர் கண்ணதாசன். ஆனால் இன்றைய நிலையில் இதற்கு மாறாக உள்ளது. தித்திக்கும் தீந்தமிழில் பாடினால் அன்பில்லாத கல்நெஞ்சங்களும் கனியாய் மாறும் என்கிறார். "தமிழ் படித்து என்ன பயன்?" என்று தமிழர்களே கேட்கும் ஈன நிலை வந்து விட்டது.

"தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா"

என்ற பெருமையும் தன்னம்பிக்கையும் கொண்டு முன்னைய காலத்தில் தமிழர்கள் இருந்தனர். இத்தகைய சிறப்புப் பொருந்திய தமிழை, அகதிகளாக வேறு நாடுகளுக்குச் சென்ற தமிழர்கள் வளர்கின்றார்களா? தமிழ்ப்பண்பாடு, கலாசாரம், மொழிச்சிறப்பு என்பனவற்றை காக்குறார்களா? என்பதை எண்ணும் போதெல்லாம் தமிழன்னை கண்ணீர் வடிக்கிறாள். இதனை மாற்றியமைத்து தமிழன்னையை எழில்கோலத்திற்கு கொண்டுவர அனைவரும் ஒன்று இணைவோம்.

"தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

**வி.தாரணி,**
**பொறியியல் பீடம் (2022),**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**

தமிழ் மொழி தொன்மை, முன்மை, எளிமை, ஒண்மை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, செம்மை, மும்மை, இனிமை, தனிமை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை என பலவகை சிறப்புகளை ஒருங்கேயுடையது என்கிறார் – ஞா.தேவநேயப் பாவாணர்

யாமறிந்த மொழிகளிலே
தமிழ் மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மெழுகிட்ட உள்ளீடு பல



தேனருவி திரையெழுப்பி ஒழுகும் மலரின் அற்புத மலர்ச்சியை வர்ணிக்க வார்த்தைகள் தேடப்பட்டன.வார்த்தைப் பிரயோகம் மொழியைப் பறைசாற்றுவதாக அமைந்தது.அம் மொழித் தேடலில் வார்த்தைக்கு உயிர் கொடுத்து அதனை உணரச்செய்தது எனும் வரிசையில் பந்திக்கு முந்தும் மனித நதியைப் போல முந்தி ஓடிக்கொண்டிருந்த அமுத சுரபியே எம் இன்பத் தமிழ் ஆகும். சமுதாயப்படலத்தை நாம் நோக்கும் போது ஒவ்வொன்றிலும் தமிழ்த்தாய் தடம் பதித்து படியேறுவதை நாம் பார்க்கலாம்.

முற்காலத்தை நாம் உற்று நோக்கினால் அவற்றில் தெரிவது எம் தாயின் நிழல்களேயாகும். மூவேந்தர்களான சேர,சோழ,பாண்டியனது காலங்களை எடுத்து முன் வைத்தால் அவர்களின் ஆட்சியில் ஆட்சி செய்த அரசி என்றால் அது நம் தமிழ் தாயே ஆவாள். அதைவிட மிகப் பழமையான சான்றுகளை கைகூட்டி வந்தால் அவற்றில் நம்பியாண்டார் நம்பி மற்றும் சமய குரவர்கள் போன்றோர் சைவசமய உயர்ச்சிக்குப் பயன்படுத்திய சொற்பிரயோகம் தமிழுக்கே உரியது. ஏன்? இவற்றையெல்லாம் விட ஔவைபாட்டி எழுதிய ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி போன்ற நூல்களும் இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரம் எழுதப்பட்டு இருப்பதும் தமிழிலேயாகும். இவற்றின் முக்கிய அத்தியாயம் என்று குறிப்பிடும் போது அது பரதநாட்டியமாகும். தமிழரான சைவசமயிகளுக்கு உரித்தேயான நடனம் பரதநாட்டியமாகும். பரதம் இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றிய ஆடற்கலையாகும்.இதன் இற்றைய நிலைக்கு பெரும் பங்காற்றியது தமிழ் மொழியாகும். பண்டைய தமிழர்கள் போற்றி வளர்த்த கலைகள் யாவற்றிலும் தமிழ் முக்கியத்துவம் பெற்றிருப்பதைக் காணமுடியும்.இது ஆதிகால மனிதனில் சைகையாக ஆரம்பித்து பின்னர் , மொழியாக மாற்றம் பெற்றுள்ளது.இவ்வாறாக பல உள்ளீடுகள் தமிழ்த்தாயால் சூழப்பட்ட தீவாகக் காணப்படுகிறது.


**ந.ரிசாயினி,**

**பொறியியல் பீடம் (2022),**

**பேராதனைப் பல்கலைக்கழகம்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மதம் சொல்லும் அறம்



உலகில் முதன்முதலில் மனிதன் உருவெடுத்து வாழ்ந்தான். பிறகு தனக்கென்று தங்குமிடம் அமைத்தான். அதற்கும் பிறகு பகுதியை உருவாக்கி மக்களாய் வாழ்ந்து பல் தொழிலை செய்தனர்.பிற்பாடு பல் பகுதிகளாய் வாழ்ந்து வழிகாட்ட தலைவன் வந்தான். பின்னர் "சைவம், வைணவம்" என இரு சமயங்கள் உருவாகின. இவ்விரண்டையும் இழுத்தது இந்து மதம். கிறிஸ்தவர் உருவாக்கிய மதம் கிறிஸ்தவ மதம். கௌதம புத்தர் உருவாக்கிய மதம் புத்த மதம் என்று உருவாக்கியவர்களின் பெயரை வைத்து மற்ற மதங்கள் உருவாயின. ஆனால் இந்து மதத்தை உருவாக்கியவர் பெயரும் அது எந்த காலமும் நாம் அறியா. அது மிகவும் பழமை வாய்ந்தது அதனால் தான் பகுத்தறிவாளர்கள் இம்மதத்தை விமர்சனம் செய்கிறார்கள் பின்பு கடைசி காலத்தில் இதை உணர்கிறார்கள் சிலர். இந்து மதம் பெண்களுக்கு மிக முக்கியத்துவம் வகிக்கிறது. அதை இம்மதத்தின் சம்பிரதாயங்களில் காணலாம். அவர்கள் பூப்பெய்தால், கர்ப்பம் அடைந்தால் விழா கொண்டாடுவது. பிறந்த வீட்டுப் பெண் எது கேட்டாலும் செய்ய வேண்டும். பெண்கள் கண்ணீர் வாளுக்கு சமம், பெண் பாவம் சும்மா விடாது என்பதன் மூலம் பெண்களுக்கு துன்பம் செய்யக்கூடாது என்று சொல்கிறது.

இம்மதம் இயற்கையையும் மதிக்கிறது. நம்பிக்கையில்லை எனில் "விருட்ச சாஸ்திரம்" படியுங்கள். இன்ன மரம் நட்டால் இன்ன பயன் கிடைக்கும் என்று மரம் நடவைப்பதையும் இயற்கையின் மதிப்பையும் கூறுகிறது. வில்வ மரம் நட்டால் சிவனுக்கு பூசை செய்வதுக்கு சமம், துளசி நட்டால் பெருமாளுக்கு பூசை செய்வதுக்கு சமம்,வேப்ப மரம் நட்டால் தீய சக்திகள் அண்டாது போன்றவை. விலங்குகளை இறைக்கு வாகனமாக்கி அதன் முக்கியத்துவத்தையும் காட்டுகிறது இந்து மதம். சித்த மருத்துவம் மூலம் நோய்களை அடியோடு அழித்தது. இன்றைய விஞ்ஞானத்துக்கு விதையிட்டும் வழி காட்டியும் விளங்குகிறது இந்து மதம். இன்றைய கிரகணம், கார்காலம், கூதிர்காலம்,வேனிற்காலம் போன்றவற்றை அன்றே பஞ்சாங்கத்தில் கூறியும் வரும் காலத்திற்கும் கூறியது. நீர் ஆவியாகி மேகமாய் வந்து மழை பொழிகிறது என்பதை "ஆழி மழைக் கண்ணா" என்ற பாவில் தன் பக்தியுடன் மெய்ஞானத்தை உவமையாய் காட்டுகிறாள் கோதை நாச்சியார் "ஆண்டாள்". முதற்சங்கு அமுதூட்டும், மெய்குழலார் ஆசை நடுச்சங்கம் நல்விலங்கு பூட்டும் – கடைச்சங்கம் ஆம்போ தததூதும், அம்மட்டோ? இம்மட்டோ? நாம்பூமி வாழ்ந்த நலம்!. என்பதன் மூலம் வாழ்க்கையின் தத்துவத்தை கூறுகிறார் பட்டினத்தார்.அரசர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்ட அரண்மனை அழிந்தது ஆனால் கோவில்கள் மற்றும் அதை எப்படி செய்தார்கள் என்று சொல்ல முடியா சிற்பங்கள் அழியாமல் பல்லாண்டு தாண்டி நிற்கிறது. இதன் மூலம் இந்து மதம் கலைகளில் நூறு விழுக்காடு தேர்ச்சி பெற்றதை காணலாம். இந்து மத மக்களுக்கு "புண்ணியம்","பாவம்" அதாவது நன்மை செய்தால் புண்ணியம் தீமை செய்தால் பாவம் என்று கூறி மக்களை அவ்வழிக்கு செல்ல விடாமல் நல்வழிக்கு செலுத்தியது.

அடுத்தடுத்த ஜென்மங்களில் பணம் வராது நாம் செய்த புண்ணிய பாவமே வரும் என்று எம்மதமும் சொல்லித்தராத தத்துவத்தை சொல்லிற்று. அத்தமும் வாழ்வும் அகத்து மட்டே! விழியம் பொழுக மெத்திய மாதரும் வீதிமட்டே விம்மி விம்மி இரு கைத்தலை மேல்வைத்து அழும் மைந்தரும் சுடு காடு மட்டே! "பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே!"

இதில் நம்மின் விதி புண்ணிய பாவம் தான் என்று சொல்லப்படுகிறது. இறைவன் இருக்கிறான் நம்மை ஆளுவது நவக்கிரகங்கள் தான் என்று சொல்லி ஆலயவழிபாட்டையும் செய்ய வைக்கிறது. நம் வாழ்வில் பல தருணங்களில் இந்து மதம் வருகிறது. இதன்மூலம் இறைவன் இருக்கிறார் என்றும் இந்து மதம் நம்மை வாழ்வின் நல் வழியிலேயே செலுத்தும் என்று தெரியவருகிறது.

**தெ.திவிசன்,**
**பொறியியல் பீடம் (2022),**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**

மகா சிவராத்திரி இந்துக்களால் கொண்டாடப்படும் சிவனுக்குரிய விரதமாகும். இவ்விரதம் ஆண்டுதோறும் மாசி மாதத்தில் வரும் கிருஷ்ணபட்ச (தேய்பிறை) சதுர்த்தசி திதியில் இரவில் கொண்டாடப்படும். இதன் நோன்பு முறைகளைக் கூறும் நூல் மகா சிவராத்திரி கற்பம் என்னும் சிறிய நூல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழியின் சிறப்பு



உலகில் எத்தனை மொழிகள் இருந்தாலும் தனித்தன்மை கொண்ட பல சிறப்புக்களை தன்னகத்தே கொண்ட மொழி தான் தமிழ்மொழி. குமரி கண்டத்தில் தோற்றம் பெற்றதாக நம்பப்படும் தமிழ் மொழி தான் மொழிகளில் மூத்த மொழியாகும். இந்த பூமியில் வாழ்கின்ற உயிரினங்களில் மொழியை பயன்படுத்தும் ஒரே ஒரு உயிரினம் மனிதன் ஆவான்.

ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய உணர்வுகளையும் கருத்துக்களையும் பகிர்ந்து கொள்ள மொழி அவசியமாகும். இடையர் மற்றும் வேடர் யுகத்தில் வாழ்ந்த ஆதி மனிதன் ஒலியெழுப்புவதன் மூலமும் அதன் பின்னர் வாழ்ந்த மனிதன் சைகை மூலமும் தனது கருத்துக்களை பரிமாறினான். பின்பு அந்த சைகை மொழிக்கு ஒலி வடிவம் கொடுத்ததன் மூலம் உருவான மொழியானது படிப்படியாக வளர்ச்சியடைந்து, இன்றைய நவீன யுகத்தில் ஏறத்தாழ 7000ற்கு மேற்பட்ட மொழிகள் உலகெங்கிலும் பரவலாகப் பேசப்பட்டு வருகின்றமையை காண முடிகிறது.

அவற்றுள் பபிலோனிய மொழி, கிரேக்க மொழி மற்றும் தமிழ் மொழி ஆகியன தொன்மை வாய்ந்தவையாக கருதப்படுகின்றன. இவற்றுள் தமிழ்மொழியானது மிகவும் தொன்மையானது இதைப்பற்றி இக்கட்டுரையில் பார்க்கலாம். முதலில் தமிழின் தொன்மையை எடுத்து நோக்குவோமானால், உலகில் வாழ்கின்ற கோடிக்கணக்கான தமிழர்களின் தாய்மொழியாக விளங்குகின்ற தமிழானது குமரிக்கண்டத்தில் தோற்றம் பெற்றதாக நம்பப்படுகின்றது.

பிற்காலத்தில் குமரிக்கண்டமானது நீரில் மூழ்கி அழிவடைந்து போனாலும், அதன் எஞ்சியிருந்த நிலப்பரப்புக்களில் வாழ்ந்த தமிழர்கள் கடல் கடந்து அண்மை நாடுகளுக்கு சென்று அங்கும் தமிழின் புகழைப் பரப்பினார்கள்.

தமிழர்களின் தாய் மொழியாக விளங்குகின்ற தமிழ் மொழியின் சிறப்புக்களை ஆதிகாலம் தொட்டு இன்றுவரை இலக்கியங்கள் ஊடாக பல அறிஞர்களும், புலவர்களும் எடுத்தியம்புகின்றனர். மொழிகளில் மூத்த மொழியான தமிழ் மொழியின் சிறப்புக்களை போற்றிப் பாடியுள்ள புலவர்களுள் பாரதியார், பாவேந்தர், மற்றும் திருவள்ளுவர் ஆகியோர் முக்கியமான வர்களாவார்.

மக்களின் எழுச்சி கவிஞனாக போற்றப்படுகின்ற பாரதியார் "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்றும், "சொல்லில் உயர்வு தமிழ் சொல்லே அதை தொழுது படித்திடடி பாப்பா" என்றும் குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிமையான மொழி இவ்வுலகில் இல்லை. அத்தகைய பெருமைவாய்ந்த தமிழை போற்றித் தொழுது கற்கும்படி அறிவுறுத்துகின்றார். அத்துடன் "தமிழுக்கும் அமுதென்று பேர் அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று பாவேந்தர் பாரதிதாசன் தமிழானது தமிழ் பேசும் மக்களின் உயிர் மூச்சு போன்றது என தமிழை பெருமைப்படுத்துகின்றார்.

பெரும் புகழ் கொண்ட காவியமான இராமயணத்தில் தமிழ் மொழியை "மதுரமான மொழி" என கவிச்சக்கரவர்த்தி கம்பர் அவர்கள் குறிப்பிடுகின்றார். தமிழ் மொழியானது மொத்தமாக 247 எழுத்துக்களை கொண்டுள்ளது. அந்த எழுத்துக்கள் உயிர் எழுத்துக்கள், வல்லினம், இடையினம், மெல்லினம் என பல வகையாக பிரிக்கப்பட்டுள்ளன.

படிப்பதற்கும், பேசுவதற்கும் எளிமையானதும் இனிமையானதுமான மொழியும் இதுவே. இவ்வாறு தமிழின் பெருமை கூறக்கூற வற்றாத நதி போல தோன்றிக் கொண்டே இருக்கும்.. அத்தகைய சிறப்பும் தொன்மையும் கொண்டது தமிழ்.

தமிழர்களிற்கு உயிராகவும், உயிர் மூச்சாகவும் விளங்கும் தமிழானது இன்று தமிழ் பேசுவது அவமானம் என கருதும் அளவிற்கு அழிவடைந்து வருகின்றது. பிற மொழிகள் மீதான மோகமும், கலாசார மாற்றங்களும் தமிழை இரண்டாம் மொழியாக கருதுவதற்கு உறுதுணையாக அமைகின்றன.

தமிழர்களின் பாரம்பரியமான கலாசாரமானது தமிழ்மொழியை அடிப்படையாக வைத்தே கட்டமைக்கப்பட்டுள்ளது. ஆகவே தமிழ் மொழியின் அழிவானது தழிழ்கலாச்சாரத்தின் இருப்பையே கேள்விக் குறியாக்கிவிடும். எனவே தமிழ்மொழியை பாதுகாப்பது அவசியமாகும். இன்றைய நவீன உலகில் ஆங்கில மொழியே அத்தியாவசியமாகக் காணப்படுகின்றது. ஆங்கில வழிக்கல்வி, ஆங்கில மொழியிலான வேலைவாய்ப்புக்கள், அந்நிய வாழ்க்கை முறையின் மீதான அதீத ஈர்ப்பு போன்றன ஆங்கில மொழிக்கான தேவையை உருவாக்குகின்றன. இதனால் தமிழின் தேவையானது குறைவடைகின்றது என்பதனை உணர முடிகிறது.

இந்நிலை மாற வேண்டுமாயின் தாய்மொழிக் கல்வியானது ஊக்குவிக்கப்படுவதோடு, தமிழ்மொழியை சிறுவயது முதலே குழந்தைகளிற்கு பேசக் கற்றுத்தர வேண்டும். உலகின் மிகத் தொன்மையான மொழியாகிய தமிழை பாதுகாக்க வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

உயரிய மொழியாகிய தமிழைக் காக்க முடிந்தவரை பிறமொழி சொற்களை கலக்காது தூய தமிழில் பேசுவதோடு, தமிழின் அரிய நூல்களை பேணிப்பாதுகாக்க வேண்டும்.

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு" என்று பாவேந்தர் பாரதிதாசன் குறிப்பிட்டது போன்று தமிழை நமது வளமாக போற்றி அதன் தனித்தன்மையை காப்போமாக.

**த.தனுலக்ஷன்,**
**பொறியியல் பீடம் (2022),**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவலிங்கம்



இந்து மதம் சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், கணாபத்தியம், சுமார்த்தம் ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாகும். இவற்றில் சைவசமயமானது சிவபெருமானை முழுமுதல் கடவுளாக கருதி வழிபடும் சமயமாகும். சிவபெருமானை சைவ மக்கள் அருவம், உருவம், அருவுருவம் ஆகிய மூன்று நிலைகளில் வழிபடுகின்றனர். உருவம் என்பது வடிவமுடைய நிலை, அருவம் என்பது வடிவமற்ற நிலை, அருவுருவம் என்பது உருவமுடைய உருவமற்ற ஆகிய இரண்டிற்கும் இடைப்பட்ட நிலையாகும். இவற்றில் இலிங்கம் என்பது சிவபெருமானின் அருவுருவ நிலையின் வடிவமாகும்.

லிங்கம் என்பது லிம்+கம் என பிரிக்கப்படுகிறது. இங்கு "லிம்" என்பது உயிர்களின் தோற்றத்தையும் "கம்" என்பது உயிர்களின் ஒடுக்கத்தையும் குறிப்பதால் லிங்கம் என்பது உயிர்கள் தோன்றவும் ஒடுங்கவும் உரிய இடம் சிவமாகும் என்பதை குறிக்கின்றது.

சைவ சமயத்தில் லிங்கத்தின் தோற்றத்திற்கு ஒரு புராணக்கதை உண்டு. ஒரு முறை திருமால், பிரம்மா ஆகிய இருவருக்குள்ளும் யார் பெரியவர் என்ற போட்டி எழுந்தது. அப்போது அவர்கள் சிவபெருமானிடம் சென்று இதைக் கேட்க சிவபெருமான் தன் அடி, முடியினை யார் முதலில் காண்கிறார்களோ அவரே பெரியவர் என்று கூறினார். அதனை இருவரும் ஒப்புக்கொள்ள சிவபெருமான் நீண்ட ஒளிப்பிளம்பாக காட்சியளித்தார். அப்போது பிரம்ம தேவர் அன்னப்பறவையாக வடிவெடுத்து சிவபெருமானின் முடியைத் தேடி வானத்திற்கு பறந்தார். அதேவேளை மகாவிஷ்ணு வராக அவதாரம் எடுத்து அடியைக் காண பூமியினைத் தோண்டிச் சென்றார். இருவரும் அடி, முடியினைக் காணாது தோற்று தமது தவறினை உணர்ந்து கொண்டனர். சிவபெருமானின் இந்த ஒளிப்பிளம்பு வடிவே இலிங்கோற்பவ வடிவம் என்று கூறப்படுகிறது.

இலிங்கமானது தண்டு(லிங்கம்), ஆவுடை ஆகிய இரண்டு பிரிவுகளைக் கொண்டது. இதில் ஆவுடை அக்னி குண்டத்தையும் லிங்கம் அதில் எரியும் நெருப்பினையும் குறிக்கின்றது என்ற ஓர் கருத்து உண்டு. இன்னோர் கருத்துப்படி லிங்கம் வானத்தையும் ஆவுடை பூமியையும் முறையே குறிப்பதால் இலிங்க வடிவானது சிவபெருமான் விண்ணுக்கும் மண்ணுக்கும் எழுந்தருளியதைக் குறிக்கின்றது என்றும் கூறப்படுகிறது. மேலும் இலிங்கத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டுப்பகுதியானது ருத்ர பாகம், விஷ்ணு பாகம், பிரம்ம பாகம் என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இங்கு அடிப்பகுதி பிரம்ம பாகம் எனவும் நடுப்பகுதி விஷ்ணு பாகம் எனவும் மேல் பகுதி ருத்ர பாகம் எனவும் கருதப்படுகிறது. இதில் பிரம்ம பாகமானது பூமியினுள் முழுவதுமாகப் புதைக்கப்பட்டிருக்கும். விஷ்ணு பாகமானது ஆவுடையாருடன் பொருந்தியிருக்கும். மேற்பகுதியான ருத்ர பாகத்திற்கு மட்டுமே பூஜை வழிபாடுகள் நடைபெறும். ருத்ர பாகத்திற்கு நீர் படும் படி தாராபாத்திரம் அமைக்கப்பட்டிருக்கும். அத்துடன் வெப்பம் குறைவான காலங்களில் இலிங்கத்திற்கு நாகாபரணம் சூட்டப்படும்.

இலிங்கத்தில் ஐந்து வகைகள் உண்டு. அவற்றை சிவபெருமான் தனது சதாசிவ மூர்த்தி வடிவில் நின்று தனது ஐந்து முகங்களிலிருந்தும் ஐந்து இலிங்கங்களைத் தோற்றுவித்தார். அவை சிவ சதாக்கியம், அமூர்த்தி சதாக்கியம், மூர்த்தி சதாக்கியம், கர்த்திரு சதாக்கியம், கன்ம சதாக்கியம் என்ற ஐந்துமாகும். இவை ஐந்தும் பஞ்ச லிங்கங்கள் என்றும் அறியப்படுகின்றன. இவற்றில் கன்ம சதாக்கியமான லிங்கம், பீடம் இரண்டும் சேர்த்து வழிபட்டோரால் பல பெயர்களில் அழைக்கப்பட்டது. தானாக தோன்றியது சுயம்பு லிங்கம், தேவி சக்தியால் வழிபடப்பட்டது தேவி லிங்கம், மும்மூர்த்திகள் மற்றும் தேவேந்திரனால் வழிபடப்பட்டது தைவிக லிங்கம், முனிவர்களால் வழிபடப்பட்டது ஆரிட லிங்கம், கணபதி, முருகன் ஆகியோரால் வழிபடப்பட்டது காண லிங்கம், இராட்சதர்கள் பூஜை செய்தது இராட்சத லிங்கம், அசுரர்கள் பூஜித்தது அசுர லிங்கம். மானிடர்கள் பூஜித்தது மானுட லிங்கம் போன்ற பல காரணப்பெயர்களைக் கொண்டுள்ளது. மேலும் பரார்த்த லிங்கம், அக்னி லிங்கம், வாயு லிங்கம், ஆகாச லிங்கம், தேயி லிங்கம், அப்பு லிங்கம், ஆன்மார்த்த லிங்கம், சூக்கும லிங்கம் ஆகிய எண்ணற்ற லிங்கங்கள் உள்ளன.

சிவலிங்கத்தினை வழிபடுவதற்கு மிகவும் உகந்தது வில்வமிலை ஆகும். வில்வமிலையைக் கொண்டு லிங்கத்தினை பூஜித்தால் அசுவ மேத யாகம் செய்த பலன் கிடைக்கும் என்பது ஐதீகம். சிவலிங்கத்தினை வழிபடும் போது பல்வேறுபட்ட நோய்கள் நீங்குதல், செல்வ கடாட்சம் பெறல், இறந்த பின்னர் இறைவனுள் ஐக்கியமாதல் போன்ற பல்வேறு பலன்களைப் பெறலாம். ஆயினும் இன்றைய நவீன யுகத்தில் வேலைப்பளு காரணமாக நாம் இறைவனை படிப்படியாக மறந்து வருகின்றோம். இறைவழிபாடு, தியானம் போன்ற மனதை ஒரு நிலைப்படுத்தி அமைதி அடையச் செய்யும் சில ஆன்மீகச் செயற்பாடுகளில் நாம் ஈடுபடுவதில்லை. தொடர் வேலைகளால் உண்டாகும் மன அழுத்தம், சினம், பதற்றம் என்பவற்றை குறைப்பதற்கு இலிங்க வழிபாடு மிகச் சிறந்த உபாயமாகும். எனவே நாம் இலிங்க வழிபாட்டின் மூலம் பல்வேறு பலன்களைப் பெற்று நம் வாழ்வை சிறப்பானதாக்குவோம்.

**பு.மகிஷனா**

**பொறியியல் பீடம் (2022),**

**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Temple worship



The proper place for people to worship God with unity of mind is the temple. A temple means a place where souls come together. The temple is called by names like Kovil, Devasthanam. Temple worship is one of the important aspects of Hinduism. Because there are various ways to reach God and one of them is temple worship. Temples are necessary to perform worship based on actions. Temples are also a place where God's grace is available all over the world. That is why people say that you should not live in a town without a temple.

Every Hindu should know about the method of going to the temple, the things to be carried for the temple worship, the order to be followed during the temple worship, the charity that can be done in the temple, the things that should not be done in the temple. Every one of us should take a bath and wear dry clothes while going to the temple. It is good to take some potions such as coconut, flower, betel nut, milk, ghee, honey etc.

While going to the temple, one should wash the feet, worship the gopuram and enter with divine thought. After crossing the gopuram, one should first worship the Altar and worship the Thirunanthi God who is facing the Mula and then the Mula Murthy. While worshiping lord Ganesha one should bow thrice on the head and bow three times with Doppakaranam.

For the altar men should perform Atanga Namaskar and Panchanga Namaskar for women. While performing Namaskar the legs should be stretched in the direction of west and south. After doing Namaskar and getting up, put both hands on the heart and remember the lord in your mind and slowly go around the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

temple to the right side and after obeisance. After worshiping sandeswaror, one should come back and offer obeisance to the source, meditating on the lord from the north and reciting the rituals.

There are many charities that can be done in the temple, such as gathering, washing, lighting the worship equipment, planting flower gardens, tying flower garlands, ringing bell, guarding vehicles during festivals, holding umbrellas, flags, aalavatam, throwing hammers etc. Indulging in such charity is also a form of the temple worship. Things that should not be done in the temple are not going without etiquette, not entering without washing the feet, spitting in the temple environment, eating betel nut, etc.

Temple worship and temple charity give satisfaction to Hindus. They cultivate love, improve life and ultimately pave the way for the soul to reach God. During the worship of the temple the five traps are reduced, and the mind becomes equanimous. And the temple is filled with divine light, so our mind gets peace. So, it is better to do temple worship daily which improves our life. It is necessary for the disabled to visit the temple on special days. Arumukha Navala's statement that "we got this body for the sake of worshiping God and for happiness "also captures the importance of temple worship. So, we Hindus should also understand the importance of temple worship and engage in temple worship.

**K.Yathushan,**
***Engineering Faculty (2022),***
***University of Peradeniya.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மொழியாம் தமிழ்மொழி



திராவிட மொழிக் குடும்பத்தின் மூல மொழி தமிழ். திராவிடக் குடும்பத்தின் முதன்மையான மொழி, மூத்த மொழி, திராவிட மொழிகளின் தாய் மொழி – நம் மொழியாம் தமிழ். இந்த மொழிக் கூட்டத்தில் மொத்தம் 26 மொழிகள். அத்தனைக்கும் மூல மொழியாக நம் தாய் மொழியான தமிழ் இருப்பது பெருமைக்குரிய ஒன்று. இவை தவிர 35 சிறு மொழிக் கூட்டத்திற்கும் தமிழே மூல மொழியாக இருப்பது வியப்புக்குரியது. இன்று தனிச் சிறப்புடன் கூடிய ஒரு மொழியாக திகழும் மலையாளம், 9வது நூற்றாண்டு வரை தமிழின் ஒரு "டயலக்ட்" ஆகத் தான் இருந்து வந்தது – அதாவது மதுரைத் தமிழ், கொங்குத் தமிழ், நெல்லைத் தமிழ் போல தமிழிலிலிருந்து நேரடியாக பிரிந்த ஒரு மொழிதான் மலையாளம். தமிழை மூன்று காலங்களாக ஆய்வாளர்கள் பிரிக்கின்றனர். கி.மு. 300க்கும்,700க்கும் இடைப்பட்ட காலம் பழந்தமிழ்க் காலம் என்றும், 700க்கும்,1600க்கும் இடைப்பட்ட காலத்தை இடைக்காலத் தமிழ் என்றும், 1600 முதல் இன்று வரையிலான காலத்தை நவீன தமிழ் காலம் என்றும் ஆய்வாளர்கள் வகைப்படுத்துகின்றனர். தமிழ் என்ற பெயர் எப்போது முதல் பயன்படுத்தப்பட்டது என்பதற்கு தெளிவான ஆதாரம் இல்லை. இருப்பினும் கி.மு. முதலாம் நூற்றாண்டில் தமிழ் என்ற பெயர் பயன்படுத்தப்பட்டிருப்பதாக செய்திகள் உள்ளன.

உலகச் செம்மொழிகளில் ஒன்றாக தமிழ் திகழ்கிறது. செம்மொழி என்பது ஒரு அடையாளம் அல்ல, மாறாக அது ஒரு மொழியின் செம்மையை, சீரை, சிறப்பை, செழுமையை வெளிச்சம் போட்டுக்காட்ட உதவுகிறது. மிகப் பாரம்பரியமான, பழமையான இலக்கியத்தைக் கொண்ட மொழியாக இருக்க வேண்டும். சுயம் இருக்க வேண்டும். வேறொரு பாரம்பரியத்தின் நிழல் அந்த மொழியின் மீது படிந்திருக்கக் கூடாது. அப்படிப்பட்ட மொழியே செம்மொழி என கூறுகிறார் மொழியியல் வல்லுநர் ஜார்ஜ் ஹார்ட். இன்று உலகளவில் ஆயிரக்கணக்கான மொழிக் கூட்டங்கள் இருந்தாலும் பேச்சளவிலும், எழுத்தளவிலும் உயிர்ப்புடன் இருப்பது சில நூறு மொழிகள் தான். அதிலும் பழமை வாய்ந்ததாக, பாரம்பரியம் வாய்ந்ததாக, சிறப்பு வாய்ந்ததாக, தங்களுக்கென்று சுயத்தைக் கொண்ட மொழிகள் வெகு சிலதான். அதில் ஒன்று நம் செம்மொழி தமிழ். இலக்கணத்திலும், இலக்கியத்திலும் சிறந்த மொழிகளுக்கே இந்த சிறப்பு கிடைக்கிறது. சுமேரிய மொழி, ஆதி எகிப்திய மொழி, ஆதி பாபிலோனிய மொழி, ஹீப்ரூ, சீன மொழி, கிரேக்கம், சமஸ்கிருதம், தமிழ், லத்தீன், மண்டாயிக், சிரியாக், ஆர்மீனியன், பெர்சியன் ஆகியவற்றை செம்மொழிகளாக உலகம் கண்டிருக்கிறது. ஆனால் இந்த சிறிய மொழிக் கூட்டத்தில் இன்று உலக அளவில் வலுவான வரலாற்றுடன், மிக வீரியமான உயிர்ப்புடன் கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே மொழியாக தமிழ் மட்டுமே திகழ்கிறது என்பது நிஜம். அது தமிழுக்குக் கிடைத்துள்ள மிகப் பெரிய பெருமை என்பதில் சந்தேகம் இல்லை.தமிழ் தந்த தொல்காப்பியத்திற்கு ஈடு இணையே இல்லை என்பது பல்வேறு செம்மொழிகளை ஆய்வு செய்தவர்கள் அளித்துள்ள தீர்ப்பு. செந்தமிழ் (செம்மொழியாகிய தமிழ்) எனுஞ்சொல் தமிழில் கிடைத்துள்ள மூலமுதல் நூலான, மூவாயிரம் ஆண்டுப் பழைய தொல்காப்பியத்திலேயே இடம் பெற்றுள்ளது.

தமிழ் எனும் சொல்லுக்குக் கிபி 10ஆம் நூற்றாண்டில் எழுந்த பிங்கல நிகண்டு, "இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்" என்று பொருள் கூறுகிறது. செந்தமிழ் என்பதற்குக் "கலப்பற்ற தூயதமிழ்" என்று பொருள் தருகிறது தமிழ்ப் பேரகராதி. செந்தமிழ் எனுஞ் சொல் உணர்வு நிலையில் இலக்கண வரம்பை வற்புறுத்துகிறது. செயல் நிலையில் செம்மொழி ஆக்கத்தை வற்புறுத்துகிறது.மதிப்பீட்டு நிலையில், இலக்கணத்தை வற்புறுத்தாவிடில் கிளைமொழிகள் தோன்றிப் புதுமொழிகளாக மாறும் என எச்சரிக்கிறது என்று மொழியியல் அறிஞர் செ.வை.சண்முகம் விளக்குகிறார்.செம்மொழி எனுஞ் சொல்லை, அகநானூற்றின் 349 ஆம் பாடல் "நடுநிலை தவறாத மொழி" எனும் பொருளில் ஆண்டுள்ளது. தமிழ் எம்மொழிக்கும் தாழ்ந்து வளையாது தலைநிமிர்ந்து நின்று தன் தனித்தன்மையைக் காத்து, தன்னை அனைத்து அழிக்க வந்த வடமொழியையும் வலுவிழக்கச் செய்து வாழ்ந்து வளர்ந்துவரும் மொழியாகும். ஆங்கிலம் லத்தீன் மொழிக்குக் கடன்பட்டிருப்பது போலவே தமிழ்மொழியும் சமஸ்கிருதத் திற்குக் கடன்பட்டிருப்பதாகக் கருதுவது அறவே பொருந்தாது. பொருள் விளக்கத்தைச் சாகவிடாமல் சொற்களைக் கைவிடுவது ஆங்கிலத்திற்கு இயலாது. ஆனால், சமஸ்கிருதச் சொற்களுக்கு ஈடான சொற்செல்வங்களைத் தமிழ் அளவின்றிப் பெற்றுள்ளது. இது, முனைவர் ராபர்ட் கால்டுவெல் அவர்களின் ஆய்வு முடிவு. தென்னாட்டின்கண் சிறந்தொளிராநின்ற அமிழ்தினுமினிய தமிழ்மொழி, எவ்வாற்றான் ஆராய்ந்த வழியும், உயர்தனிச் செம்மொழியே ஆம் என்பது உறுதி. இவ்வளவு உயர்வும் சிறப்பும் வாய்ந்த அருமைத் தமிழ்மொழியை உள்நாட்டுப் புன்மொழிகளோடு ஒருங்கெண்ணுதல் தவிர்த்து, வடநாட்டு உயர்தனிச் செம்மொழி சமஸ்கிருதம் எனக் கொண்டாற்போலத் தென்னாட்டு உயர்தனிச் செம்மொழி தமிழெனக் கொண்டு புகுதலே ஏற்புடையதாம். இது, 1887இல், சென்னைக் கிறித்துவக் கல்லூரியின் அப்போதைய தமிழ்த் துறைப் பேராசிரியரும் வடமொழி வல்லுநருமாகிய வீ.கோ.சூரிய நாராயண சாத்திரி என்ற பரிதிமாற் கலைஞர் முடிவு.பிறமொழியின் துணையின்றித் தனித்து இயங்கும் பேராற்றல் கொண்ட தமிழின் சிறப்பு வியப்பை அளிப்பதாகும். தமிழ், செய்யுள் வடிவிலும் உரைநடையிலும், கிரேக்க மொழிச் செய்யுள்களைக் காட்டிலும் தெளிவுடையதாகவும் திட்பமுடையதாகவும் கருத்தாழம் உடையதாகவும் விளங்குகிறது.

தமிழ்மொழி நூல்மரபிலும் பேச்சு வழக்கிலும் இலத்தின் மொழியைக் காட்டிலும் மிகுந்த சொல்வளம் கொண்டது. இது, முனைவர் வின்சுலோ அவர்களின் முடிவு. தமிழ்மொழியைச் செவ்வியல் மொழியாக உருவாக்குவதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளையும் பழந்தமிழர்கள் மேற்கொண்டு வந்துள்ளனர். அவர்களின் இம்முயற்சி, கிரேக்கர்களுடன் தமிழர்கள் தொடர்பு கொள்வதற்கு முன்னரே ஏற்பட்டுள்ளது. இது, கில்பர்ட்டு சிலேடர் என்ற மொழியறிஞரின் முடிவு. ஆப்பிரிக்கக் கண்டத்திலுள்ள செனகல் நாட்டின் தாக்கர் பல்கலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகம் முதன்முதலில் தமிழ்மொழியைச் செவ்வியல் மொழி என்று முடிவு இயற்றி ஏற்றுக் கொண்டது. தமிழ்நாட்டில் அண்ணாமலை பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம், திருநெல்வேலியிலுள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆகியன தமிழைச் செம்மொழி என்று தீர்மானம் இயற்றியுள்ளன. தொல்காப்பியம் மட்டுமல்லாமல் தமிழுக்கு மணி மகுடமாக விளங்குபவை சங்க கால இலக்கியங்கள். அவற்றில் பல நம்மிடையே இன்று இல்லை. காலம் அவற்றை அழித்து விட்டது. நமது கைக்குக் கிடைத்துள்ள சில நூல்கள் ஒரு பானை சோறுக்கு ஒரு சோறு பதம் என்பது போல தமிழின் தனிச் சிறப்பை வெளிக்காட்ட உதவுகிறது. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, அக நானூறு, புற நானூறு, நற்றினை, ஐங்குறுநூறு, பரிபாடல் ஆகியவை அவற்றில் சில. இக்கால கட்டத்தில் தமிழ் இலக்கியம் மிக செழுமையான நிலையில் இருந்தது. சங்க கால இலக்கியம், தமிழின் பொற்காலம் என்பதில் சந்தேகம் இல்லை.

அதேபோல தமிழின் தலை சிறந்த அடையாளங்களில் ஒன்று திருக்குறள். தமிழ் என்ற வார்த்தை ஒரு இடத்தில் கூட வராமல், உலகின் எந்த மூலையில் இருப்பவருக்கும் பொருந்தும் வகையிலான இந்த அரும் படைப்பு, தமிழுக்கு மட்டும் சொந்தமானதல்ல, உலகுக்கே பொதுவானது. அதனால்தான் குறளை உலகப் பொது மறையாக போற்றுகிறது இலக்கிய உலகம். கி.பி. 3வது நூற்றாண்டில் சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற இரட்டைகாப்பியங்களைக் கண்டது தமிழ். தமிழின் ராமாயணம், மகாபாரதம் என இதைச் சொல்லலாம்.

அதேபோல கம்ப ராமாயணமும். தமிழின் அபாரமான படைப்புகளில் இதுவும் ஒன்று. வால்மீகியின் ராயாணத்தை அடிப்படையாகக் கொண்டே இந்த படைப்பை கம்பர் படைத்திருந்தாலும், அதன் சாயல் கொஞ்சம் கூட இல்லாமல் தனது சுய படைப்பு போல இதை அமைத்திருப்பது மிக மிக வியப்புக்குரியது. அது கம்பரின் திறமையா அல்லது தமிழின் செழுமையா என்பதே ஒரு பட்டிமன்றத் தலைப்புக்குரியது. அதனால்தான் இன்றளவும் கம்பராமாயாணம் விவாதப் பொருளாக பட்டி தொட்டியெங்கும் வலம் வந்து கொண்டிருக்கிறது. தாமதம் என்றாலும் இன்றாவது ஆனதே என்ற மகிழ்ச்சியில் உள்ளனர் உலகத் தமிழர்கள்.

உலகத்தின் தலையாய மொழிகளில் ஒன்றாக திகழும் நம் தாய் மொழிக்கு மாநாடு நடத்துவது மேலும் ஒரு மகுடம் சூட்டுவதற்குச் சமம். எத்தனையோ பெருமைகளை தலையில் சுமந்து நிற்கும் தமிழுக்கு, தமிழக அரசு சூட்டும் இந்த மணிமகுடம் மேலும் ஒரு பெருமையாக அமையட்டும். ஓலைச் சுவடிகளில் உருண்டு புரண்ட தமிழ் இன்று கம்ப்யூட்டர் திரைகளில் ஜாலம் காட்டும் காலத்திலும் நளினம் குறையாமல், நவீனம் மறுக்காமல், பாரம்பரியத்திற்குப் பங்கம் வராமல் தொடர்ந்து பரவசம் காட்டி வருவது தமிழுக்குள்ள மகா சிறப்பு.தமிழால் வாழும் நாம் நம் செம்மொழிக்கு எடுக்கப்படும் விழாவை வாழ்த்துவோம், அக மகிழ்வோம்.

**ர.திலக்ஷன்**

**பொறியியல் பீடம் (2022),**

**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே சுதந்திரம்...?



"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்" என்று வீர முழக்கம் விட்டுச் சென்றார் பாரதியார். ஆணும் பெண்ணும் சரிநிகர் என கொள்ளுவோம் என்று பெண்களுக்காய் போரிட்ட அவர், கண்டிட்ட புதுமைப் பெண்களை இன்று காண்கிறோம். முதலில் பெண் விடுதலைக்காக போராடிய நாம் இப்போது பெண் சுதந்திரம் என்று போராடிக் கொண்டிருக்கின்றோம். சுதந்திரம் என்றால் என்ன? என்பதை நாம் எல்லோரும் உணர்ந்து இருக்க வேண்டும். நாம் நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்ய நினைப்பது ஒன்றும் சுதந்திரம் அல்ல. என் கருத்துப்படி நாம் நினைத்ததை செய்யும் போது அது வேறொருவரை காயப்படுத்தாதிருக்க வேண்டும். பிடித்திருக்கின்றது என்பதற்காக யாரேனும் பட்டாம் பூச்சியை துன்புறுத்தினால் அது எவ்வகையில் சுதந்திரமாகும்?

**சிந்திப்போம்...**

ஆணுக்குப் பெண் சமம், சமத்துவம் என்று பேசிக் கொண்டிருக்கின்றோமே! முதலில் சமத்துவம் என்றால் என்ன என ஓர் தெளிவு வேண்டும். சில இடங்களில் ஆண் பெண் சமத்துவத்திற்கு வரைவிலக்கணம் கூறுகின்றார்கள். எவ்வாறெனின், "ஆண் பெண்ணுக்கு காவலாக இருக்க வேண்டும். அதேவேளை பெண் பெண்ணாக இருக்க வேண்டும்." எனில் அச்சம், மடம், நாணம், பயர்ப்பு என்று நாற்குணங்களும் கொண்ட பெண்களாக இருக்க வேண்டுமாம். இன்றைய காலத்தில் இந்த நான்கு குணங்களையும் கொண்ட பெண்கள் எவ்வாறு வாழ முடியும்? பார்க்கின்ற பார்வை, பேசுகின்ற வார்த்தைகளும் பெண்களை ஆதிக்கம் செய்வதாக இருக்கும் போது பெண்கள் தமக்காக குரல் கொடுப்பதில் ஒன்றும் தப்பில்லை. ஆனால் சத்தமிடுவதற்கு முன் எதற்காக சத்தமிடுகின்றோம் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும் அல்லவா? நமக்கான தேவைகளை கேட்கும் போது அவற்றை தட்டிப் பறித்துக் கொண்டிருக்கின்றோம் என்பதில் கொஞ்சம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

சுதந்திரம் என்ற பெயரில் பெண்கள் இரவு தெருவில் நடமாடுவது என்றும் தப்பில்லையே, ஆனால் தேவையில்லாத நேரத்தில் அந்த நடமாட்டம் தேவையற்ற ஒன்றே. இலக்கிய பெண்களைப்போல இப்போதும் பெண்கள் வாழ முடியாது. சீதையாக, கண்ணகியாக, மாதவியாக, மண்டோதரியாக இப்போது அவர்கள் இருப்பது கடினமே... ஆனால் அவர்களிடமிருந்து நல்ல குணங்களை கொஞ்சம் எடுத்துக் கொண்டு வாழ்வதால் பெண் விடுதலை ஒன்றும் குறைந்து போய்விடப் போவதில்லை. மீண்டும் ஒரு முறை பாரதி பிறப்பெடுப்பின் சில வேளைகளில் ஆண் விடுதலை தேடி குரல் கொடுத்திருப்பானோ என்னமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றும் இன்றும் பெண்கள் என்று பேசப்போகும் போது இந்து மதத்தில் பெண்களைப் பற்றி பேசுவது முக்கியமானது. இந்து மதத்தில் பெண்கள், பெண்களாக மதிக்கப்பட்டார்கள். ஆயினும் சிலருக்கு அதன் மீதான குற்றச்சாட்டுகள் உள்ளது. இந்து மதம் பெண்களை பெண்களாக மதிக்கவில்லை என்பது முற்றிலும் பொய். எந்த மதமும் மூடநம்பிக்கையை உங்களிடம் விதைத்து செல்லவில்லை. மூடநம்பிக்கைகளை நீங்களாக ஏற்படுத்திக் கொண்டீர்கள். நாகரிகம் மாறிக் கொண்டிருக்கும்போது, எங்களது தேவைகள் கூடிக் கொண்டிருக்கும் போது, கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் எமக்கேற்றவாறு மாற்றி அமைத்துக் கொண்டோம். அவ்வாறு அமைத்துக் கொள்ளும் போது, சில கட்டளைகள் நம்பிக்கைகள் சமுதாயத்தை சீர்படுத்துவதற்கு பதிலாக அதை பாதகமான நிலைக்குக் கொண்டு சென்றது.

ஒருவேளை கணவன் இறந்து விட்டான் என்பதற்காக உடன்கட்டை ஏறி இருந்தால் இன்று பல விடுதலை தலைவிகள் உருவாகி இருக்க மாட்டார்கள். ஆனால் இது மதத்தினால் திணிக்கப்படவில்லை என்பதுதான் நிதர்சனம். ஆயினும் சீதையைப் போல் ஒருவனுக்கு ஒருத்தி என வாழ்ந்து விடவும் முடியாது. அவ்வேளை கண்ணகியை போல் பொறுமைசாலியாகவும் இருக்க முடியாது. தன் கணவன் தவறு செய்கின்றான் என்ற போது, "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்" என்று வாழ்வதை இன்றைய கால பெண்கள் விரும்புவதில்லை. காரணம் அவர்களால் சொந்தமாக தங்களது காலில் நிற்க முடியும். தங்களுக்காக தங்களால் போராட முடியும். ஆகவே தங்கள் விடுதலைக்காக அவர்கள் குரல் கொடுக்கிறார்கள். இது ஒன்றும் தவறில்லை, ஆனால் எச்சந்தர்ப்பத்திலும் அது அடுத்தவர் தவறாக இருக்கும், என்பதிலும் நிச்சயம் இல்லை. பெண்களைப் போல் ஆண்கள் அவசர முடிவெடுப்பதில்லை, ஆழ்ந்து ஆராய்பவர்கள். அது இலக்கியம் மட்டுமல்ல, இன்றைய விஞ்ஞானமும் கண்ட விளக்கம். "ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு" என்பது பழமொழி ஆயினும் இது இருபாலருக்கும் பொருந்துகின்ற பொது மொழி.

இப்போது கலாச்சாரம் கொஞ்சம் மாறித்தான் போய் விட்டது. ஆனாலும் அது சந்தர்ப்பத்துக்கு ஏற்றால் போல் தன்னை மாற்றி அமைத்துக் கொள்கின்றது. நாங்கள் அணியும் ஆடை முதற் கொண்டு எங்களது செயற்பாடு வரை எல்லாவற்றையும் தீர்மானிப்பது சந்தர்ப்பமே. உதாரணமாக மலையேறும் மாதர்க்கு புடவை அணிவது கொஞ்சம் கடினமாக தான் இருக்கும் ஆனால் கோவில் செல்லும் போது ஜீன்ஸ் பேண்ட் அணிந்து செல்வது அநாகரிகம். அன்றும் இன்றும் பெண்கள் தங்கள் கால்களை பதிக்காத இடம் எங்கும் இல்லை. புவி தாண்டி வேறு கிரகங்களிலும் தங்கள் கால்களை பதித்து விட்டார்கள். அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு? என்றதை பொய்யாக்கி விட்டார்கள். ஆண்களுக்கு நிகராக, சில கணங்கள் ஆண்களுக்கு மேலாக பெண்கள் எல்லா இடத்திலும் ஆதிக்கம் செலுத்துகின்றார்கள். மகிழ்ச்சிக்குரிய விடயம். ஆனாலும் அந்த ஆதிக்கம் எல்லை மீறாது இருக்கும் வரை, பாரதியைப் போல் ஒரு புலவன் பின்னர் ஆண் விடுதலைக்கு என்று குரல் கொடுக்காத வரை, இந்த மாற்றம் மாதர் குலத்தை உயர்த்தி நிற்கும். அன்றைய காலத்துப் பெண்களைப் போல் இன்று வாழ முடியாதே எனினும் பெண்கள் பெண்களாக இன்றைய காலத்திற்கு ஏற்றவாறு வாழ்ந்தால் இந்த உலகத்தில் அனைத்தும் நல்லதாகவே அமையும் என்பது என் கணிப்பு.

**வ.அபிலாசா,**

**இணைந்த சுகாதார விஞ்ஞான கற்கைகள் பீடம்,**

**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியலில் இந்து தர்மம்



மனிதர்களை பொறுத்தவரை தருமம் என்றால் சரியான செயல்களை செய்வது சரியான பாதையில் நடப்பது ஆகும். உலகிலுள்ள மனிதர்கள் நீதி நெறியில் வாழ்வது மட்டுமல்லாமல், வான் வெளியில் உலகம் உழல்வதும், அண்டம் ஓர் ஒழுங்கில் இயங்குவதும் தர்மம் எனப்படும். இறைவனின் விதிகளால் தான் என்கிறது இந்து சமயம். இவ் இந்து தர்மம் மிகவும் தொன்மை நிறைந்ததாகவும் சிக்கலானதுமாக காணப்படுகிறது.

இந்து தர்மமானது சனாதன தர்மம் அல்லது நித்திய வழி என்றும் அழைக்கப்படுகிறது. இந்து மதத்திலுள்ள தர்மமானது அன்பு, நற்பண்புகள், கடமைகள், சடங்குகள், விருந்தோம்பல் மற்றும் சரியான வாழ்க்கை முறைகளை கொண்டுள்ளது. மேலும் உண்மை, அமைதி ,அஹிம்சை என்பவற்றிற்கு அதிக முக்கியம் வழங்கப்படுகிறது. இவற்றின் மூலம் உலகெங்கிலும் உள்ள இந்துக்களுக்கு நல்லொழுக்கம் மற்றும், உண்மையான வாழ்க்கையின் தத்துவத்தையும் நிலைநிறுத்துகிறது. இந்து தர்மத்தில் தர்மம், பிரபஞ்சம் முழுவதையும் பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தையும் கடவுளாகவே பார்க்கிறது. ஒவ்வொரு நபரும் உள்ளார்ந்த தெய்வீகமானவர்கள் மற்றும் நம் அனைவருக்கும் உள்ள வாழ்க்கையின் தெய்வீகத்தை உணர்ந்து கொள்வதே நோக்கம் எனவும் அறியப்படுகிறது.

இந்து தர்மத்தின் ஒரு முக்கிய கொள்கை விருந்தோம்பல் ஆகும். விருந்தினரை இறைவனுக்கு இணையாகக் காணும் பண்பு நம்முடையது. முற்காலத்தில் பிச்சை பெற்று உண்பவரை தவு வாழ்வு வாழ்பவருக்கு திணைவைக்கப்பட்டது. அத்துடன் நிறபேதம் அடிமை, அடிமை சமுகம் போன்ற கொள்கைகளை தவிர்ப்பதாக காணப்பட்டது. இந்து மரபு சார்ந்த ஆன்மீகம் என்பது சமத்துவத்தையும் மனிதத்தையும் சார்ந்து இயங்கியது ஆகும். ஒவ்வொரு மனிதனும் தனக்குள் இருக்கும் ஆன்மாவை உணர்ந்து இந்த வாழ்க்கை எதற்காக படைக்கப்பட்டது. வாழ்க்கையின் தோற்றம், மரணத்திற்கு பின்னான வாழ்க்கை போன்ற கேள்விகளுக்கு விடையளிப்பதாகவும் உள்ளது. மேலும் இந்துக்களின் வழிபாட்டு முறைகள், வாழ்வியல் நெறிகளை மட்டுமல்லாது தெய்வங்களின் உருவங்களும் ஒவ்வொரு தத்துவத்தையும் ஆழ்ந்த ஞானத்தையும் ஒழுக்கத்தையும் ஏற்படுத்தவே உருவாக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் தன் தர்மத்தை மறந்து போனால் அதனால் ஏற்படும் பாதிப்பானது பாரதூரமானது. ஆனால் இயற்கையின் எந்த உயிரியும் தர்மத்தை மீறி செயறப்பட்டதில்லை. மனிதர்களை தவிர, ஆறறிவுடைய மனிதர்களாகிய நாம் பல சந்தர்ப்பங்களில் இதை மீறி செயற்படுகிறோம். நம்முடைய செயல்களின் பலனாக உலக வாழ்க்கை சமநிலை இழக்கப்படுகிறது. இயற்கையின் சமநிலையும் மாறுபடுகிறது.

இது போன்ற பன்முகத்தன்மை கொண்ட ஒரு வாழ்வியல் தத்துவமே இந்து தர்மம் ஆகும். இதற்கு சரியாக வாழ்க்கை முறை என்றும் பொருள். அந்தவகையில் இந்து தர்மத்தில் குறிப்பிடப்படும் அனைத்து விடயங்களும் மனித வாழ்விற்கு முக்கியமானவையே ஆகும். இவை அனைவர் மனதிலும் விதைக்கபட வேண்டிய ஒன்றாகும்.

**மு.நிக்சனா,**
**விவசாய விஞ்ஞான பீடம்,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



வேதத்தின் உட்பொருளைக் கொண்டு எளிமையாக மக்களுக்குக் கூறுவதற்காக உபநிடதங்கள் உருவாயின. அதனினும் எளிமையாகக் கதைவடிவில் வேதம் மற்றும் உபநிடதங்களை விளக்குவதற்காகப் புராணங்கள் தோற்றுவிக்கப்பெற்றன. இவற்றில் பதினெட்டு புராணங்கள் மகாபுராணங்கள் என்றும், சில உபபுராணங்கள் என்றும் அழைக்கப்பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய உலகில் மனிதனைப் புனிதனாக்கும் இந்து சமயம்



உலகப்பெரும் சமயங்களில் இந்து சமயம் ஒருவரால் ஒரு காலத்தில் , ஒரு இடத்தில் தோற்றுவிக்கப்படாத சிறப்பினை உடையது. தொன்று தொட்டுவரும் வாழ்க்கை நெறி என்ற பெயரில் இந்து சமயத்திற்கு **"சனாதன தர்மம்"** என்ற பெயரும் வழங்கப்பட்டு வருகின்றது. வரலாற்றுக்கு முற்பட்ட ஆதிகாலத்தில் இயற்கை சக்திகளைக் கண்டு பயந்த மனிதன் அவற்றைத் தெய்வமாக வழிபட ஆரம்பித்தனர். இன்றைய காலத்திலும் பஞ்ச பூதங்களுக்குத் தெய்வீக அந்தஸ்து கொடுத்து வழிபடும் சமயமாகவே இந்து சமயம் காணப்படுகின்றது. இயற்கையோடு இணைந்த இந்து சமயத்தில் மரவழிபாடு, மிருக வழிபாடு, பறவை வழிபாடு, பித்ருக்கள் வழிபாடு, என்பன தொன்று தொட்டு இன்று வரை நிலவி வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது. நதிகளுக்கு தெய்வீக அந்தஸ்து கொடுத்து வழிபடும் மரபு இன்றுவரை நிலவிவருகின்றது. கங்கை, யமுனை, சரஸ்வதி, காவேரி, நர்மதா என்பன புனித நதிகளாக இந்துக்களால் இன்றும் போற்றப்படுகின்றன.

இயற்கைச் சக்திகளுக்கு உயர்ந்த மதிப்பைக் கொடுத்து இந்துக்கள் மலை உச்சிகளிலும், ஆற்றங்கரைகளிலும் இறைவன் வீற்றிருந்து அருள்புரியும் கோயில்களைக் கட்டி வழிபட்டார்கள். இந்து சமயமானது பண்பாடு, சடங்குகள், கிரியைகள், கலைகள், தத்துவம் ஆகிய அனைத்துடனும் இணைந்தே கானப்படுகின்றது. மாதா, பிதா, குரு போன்றவர்களை தெய்வமாக மதிக்கும் பண்பாடு இந்துக்களிடம் இன்றும் நிலவிவருகின்றது. இந்துக்களுடைய சமூக வாழ்வில் குடும்ப அமைப்பு முதன்மை பெறுகின்றது. சடங்குகள், கிரியைகள் என்பன இன்றுவரையும் இந்து சமயத்தில் பிரிக்க முடியாத அம்சமாக இணைந்துள்ளன. தாயின் கருவிலே சிசுவாக வளரும் காலத்திலே செய்யப்படும் வளைகாப்பு பூட்டும் சடங்கு முதல் இறப்பின் பின் செய்யப்படும் இறுதிச் சடங்குகள் வரை பல சடங்குகள் ஒவ்வொருடைய தனிமனித வாழ்விலும் இடம்பெறுகின்றன.

கட்டிடக்கலை, சிற்பக்கலை, விக்கிரகக்கலை, ஓவியக்கலை , இசைக்கலை , நடனக்கலை ஆகிய சகல கலைகளுக்கும் இந்துசமயம் சிறப்பிடம் வழங்கியுள்ளது. கலைக் கருவூலங் களாகவே இந்துக்கோயில்கள் அனைத்தும் இன்றுவரை திகழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்து சமயத்தில் திருக்கோயில்கள் சமயப்பணி , சமுதாயப்பணி ஆற்றும் நிலையங்களாக மட்டுமின்றி மக்கள் அனைவரும் கலைச் செல்வங்களைக் கண்டுகளிக்கும் பொது இடங்களாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகழ்கின்றன. இன்றைய காலத்தில் கோயில்களின் அமைப்புக்களும் , வழிபாடுகளும் பல்வேறு மாற்றங்களையும் கண்டுள்ளன. ஆயினும் ஆலய வழிபாடுகள், கிரியைகள் இன்றளவும் காணப்படுகின்றன. சைவ ஆலயங்களில் நடைபெறும் கிரியைகள் நித்தியகிரியைகள், நைமித்திய கிரியைகள், காமிய கிரியைகள் என மூன்று வகைப்படும். ஆன்மாவைப் பீடித்திருக்கும் மலங்களை நீங்கி ஆன்மா இறைவனை அடையச்செய்விக்க ஆலய வழிபாடும், சிவனடியார் வழிபாடும் துணைசெய்யும் என இந்து சமயிகள் இன்றளவும் நம்புகின்றனர்.

இந்து சமயமானது இன்றைய நவீன உலகிலும், மனித மனங்களை பண்படுத்துகின்ற இறை உணர்வையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தும் உயிர்நாடியாக பக்தியை முதன்மைப்படுத்துகின்றது. இறைவனைப் பற்றிக்கொள்ள வேண்டும் என்று மனித மனம் முயல்கின்ற முயற்சியே பக்தி ஆகும். பக்தி செய்வது என்பது மனித நேயத்துடன் உடலாலும், வாக்காலும், மனத்தாலும் இறைதொண்டு மேற்கொள்வதும் பாடிப்பரவுதலும் ஆகும்.

**"ஆடுவதும் பாடுவதும் ஆனந்தமாக நின்னைத் தேடுவதும் நின்னடியார் செய்கை பராபரமே"**

எனத் தாயுமான சுவாமிகள் இந்த பக்திநெறியினைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். மனிதனைப் புனிதமாக்கும் ஆன்மீகப் பாதையில் பக்தி நெறியின் சிறப்பினை இந்துசமயம் முன்னிறுத்துகின்றது. சைவ சித்தாந்தம் குறிப்பிடும் மும்மலங்களாகிய ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றிலிருந்து விடுபட்டு மனிதனைப் பக்குவப்படுத்தி ஆன்மாவின் இறுதி இலட்சியமாகிய வீடுபேற்றை அடைய ஆன்மீகம் சிறந்த வழியாகும். அதனை இந்து சமயம் சரியை, கிரியை , யோகம் , ஞானம் என நான்கு வழிகளில் காட்டுகின்றது.

இன்றைய உலகில் மனிதனை நெறிப்படுத்தி இறையுணர்வை ஏற்படுத்துவதில் ஆன்மீகம் மட்டுமின்றி கல்வியும், ஒழுக்கமும் முக்கியமானது ஆகும். உயிர்வாழும் ஒவ்வொரு மனிதனும் பெறவேண்டிய செல்வங்களில் கல்விச் செல்வமே மிக உயர்ந்த செல்வமாகும்.

ஒருவனுடைய பூதவுடல் அழிந்தாலும் புகழுடல் அழியாமல் இருப்பதற்குக் கல்விச்செல்வமே காரணமாக உள்ளது. வாழ்கையில் என்றும் துணையாக இருப்பது நற்கல்வியே எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது. "சிந்தனைக் கனலை எழுப்பும் பொறியாகக் கல்வி அமைய வேண்டும்" எனத் திருமூலர் கூறியுள்ளார். கல்விக்கும் ஒழுக்கத்திற்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு. ஒழுக்கமில்லாத கல்வி வாசனை இல்லாத பூவிற்குச்சமன். ஒருவனிடம் நல்ல குணங்களை வளர்த்தெடுப்பதே கல்வியின் நோக்கமாகும் என காந்தியடிகள் கூறியுள்ளார். மனிதனை உருவாக்கும் கல்வியே தேவை என சுவாமி விவேகானந்தரின் கருத்தும் உண்டு. "கசடறக் கற்க", "கற்றப்படி நிற்க" என்பதனை "கற்க கற்பவை கற்றப்பின் நிற்க அதற்குத்தக" என திருவள்ளுவர் தனது பொய்யா மொழியில் கல்வியின் சிறப்பைக் கூறியுள்ளார்.

எண்ணத்திலே தூய்மை, சொல்லிலே வாய்மை, செயலிலே நேர்மை கொண்டு அமையும் சமுதாயத்தை உருவாக்குவதில் குடும்பம், பாடசாலைகள், சமய சமூக நிறுவனங்கள், நண்பர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றின் பங்களிப்பு இன்றியமையாததாகும். அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கையும் பயப்பது கல்விச் செல்வமே ஆகும். இந்து சமயத்தில் கல்வி மூன்றாவது கண்ணாகவே போற்றப்படுகின்றது. கல்வி அறிவில்லாதவன் மிருகம் (வித்தியாவஹீபசு) எனக்கருதப்பட்டான். கல்வி அனைத்து மக்களுக்கும் அணிகலன் என போற்றப்பட்டது. ( வித்தியா ஸர்வஸ்ய பூஸனம்) மனிதன் வாழ்க்கையில் தேடும் செல்வங்களில் அழியாச் செல்வமாக இன்மைக்கும் , மறுமைக்கும் பயன்படும் செல்வமாக திகழ்கின்றது. பிச்சை எடுத்தாவது கல்வி கற்பது பெருமையுடையது என்பதை,

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

என வெற்றிவேற்கை என்ற நூல் கல்வியே நிரந்தமானது என கூறுகிறது.

நாளொருவண்ணம் மாற்றமடைந்து கொண்டு செல்லும் இந்த நவீன உலகில் மனிதர்கள் நெறிபிறழ்வதற்கான பல பாதைகள் காணப்படுகின்றன. அவற்றிலிலிருந்து விடுபட்டு மனிதனை பங்குவப்படுத்தி நெறிப்படுத்துவதில், இறை உணர்வை ஏற்படுத்தி முக்தி பேறடைய வழிகாட்டுவதில் ஆன்மீகமும், கல்வியும் இன்றியமையாதது ஆகும். இதனை இந்து சமயம் மிக அழகாக எடுத்துக்காட்டுகின்றது. இந்து தர்மம் மற்றும் இந்துக்கல்வியியல் ஆகியன இறை நம்பிக்கையும் , வாழ்க்கையின் உயர்ந்த இலட்சியத்தையும் ஏற்படுத்துகின்றன. இந்துசமயம் காட்டும் பல வழிகளும் மனிதனைப் புனிதமாக்குகின்றது என்றே கூறலாம். நமது சமயம் காட்டும் பாதையில் சென்று சமூகத்தை வழிப்படுத்த வேண்டியது நமது கடமையாகும்.

**ம.ஸேஷாந்த்,**
**கலைப்பீடம் (2020),**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயத்தில் புதைந்துள்ள அறிவியல் தொழில்நுட்பம்.



நவீன விஞ்ஞான தொழில் நுட்பங்களினால் கட்டுண்டு இருக்கும் இன்றைய உலகில் எமக்கு அப்பால் ஒரு சக்தி இருக்கின்றது என்றால் ஏற்று கொள்ளக்கூடிய பக்குவ நிலை எத்தனை பேருக்கு இருக்கின்றது? என்பது கேள்விக்குறியே எனினும் இன்று விஞ்ஞானம் கூறுகின்ற அறிவியல் கருத்துக்களினை பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இந்து மதம் கூறிவிட்டது என்றால் எத்தனை பேர் நம்புவார்கள்.

எல்லாவற்றிற்கும் அடிப்படையான விடயம் நம்பிக்கை. நாம் ஒன்றை அடைய வேண்டும் என்றால் முதலில் என்னால் அதனை அடைய முடியும் என்கின்ற நம்பிக்கை எமக்குள் பிறக்க வேண்டும். அதன் பிறகு நாம் அதனை அடைந்து விடலாம் என்கிறது விஞ்ஞானம். இதனையே பகவத் கீதை **"நீ எதை நினைக்கின்றாயோ அதுவாகவே ஆவாய்"** என்று கூறியுள்ளது.

ஆலய அமைப்பு முறை, வழிபாடுகள், விரதங்கள், சிவ சின்னங்கள் அணிதல் என்றாலும் சரி அதற்கு பின்னால் ஒரு அறிவியல் விஞ்ஞானம் உள்ளது. அக்காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் படிப்பறிவு இல்லாத பாமர மக்களாக விளங்கினார்கள். அவர்களுக்கு அறிவியல் விஞ்ஞானம் என்று கூறினால் அதனை பின்பற்ற மாட்டார்கள். அதனால் நம்பிக்கை என்கின்ற ஆயுதத்தினை பயன்படுத்தி அவர்களினைப் பின்பற்ற வைத்தார்கள்.

ஆலயம் ஒன்றின் முக்கியமான அம்சமாக திகழ்வது கருவறை ஆகும். இக்கருவறை தான் அதிகப்படியான காந்த சக்தியினை கொண்டு விளங்குகின்றது. இந்த காந்த சக்தி அதிகளவான நேர்மறை சக்திகளை கொண்டு காணப்படுகின்றது. இக்காந்த சக்தி மனித உடலில் படிப்பதனால் மனிதனுக்கு புத்துணர்ச்சி, உற்சாகம் என்பன பெருகும் அதனால் தான் ஆண்கள் கோயிலுக்கு வரும்போது மேலாடையினை கழட்டிவிட்டு வரவேண்டும் என்கின்றார்கள். இக்கோயில் வழிபாட்டின் மகத்துவத்தினை **"திருக்கோயில் இல்லாத திருவிலூரும் ஊரல்ல அடவிக்காடே"** என்று பாடியுள்ளார்கள்.

நாம் எவ்வளவுக்கு எவ்வளவு உணவினை சுருக்குகின்றோமோ அவ்வளவுக்கு அவ்வளவுக்கு எமக்கு நல்லது. கிழமையில் நாம் இரண்டு நாட்கள் உணவை தவிர்ப்பதனால் எமக்கு பல நன்மைகள் உண்டு என்கின்றார்கள் வைத்தியர்கள். இவ்வாறு இருப்பதினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையற்ற கொழுப்புக்கள் நீங்கி எமது உடல் ஆரோக்கியம் பேணப்படும். இதனையே முன்னோர்கள் விரதம் என்கின்ற பெயரில் கடைப்பிடித்தார்கள். இவ்வாறு விரதம் இருப்பதினால் கிடைக்கின்ற நன்மைகள் என்கின்ற ரீதியில் பார்ப்போம் எனின் உடலில் இருக்கும் தேவையற்ற கெட்ட கொழுப்பு கரையும், உடலில் உள்ள நச்சுப் பொருட்கள் அகற்றப்படும், நோய் எதிர்ப்பு சக்தி மேம்படும் மருத்துவர்களின் கணிப்பின்படி விரதம் மேற்கொள்வது சர்க்கரை நோய்யாளிக்கு மிகவும் சிறந்தது என்கின்றார்கள். இவ்வாறு விரதம் இருப்பதினால் பல்வேறு நன்மைகள் கிடைப்பதனால் வாரத்தில் ஒரு நாளாவது விரதம் இருப்போம்.

இந்து சமயத்தவர்களின் வாழ்வில் வாழை இலை என்பது பிரிக்க முடியாத ஒரு அம்சமாக திகழ்கின்றது. அதன் அடிப்படையில் வாழை இலையின் நன்மைகளினைப் பற்றி பார்க்கலாம். நாம் உணவினை தட்டில் சாப்பிடுவதினைக் காட்டிலும் வாழையிலையில் சாப்பிடுவதன் மூலம் உணவின் சுவைக்கும் மணத்திற்கும் அளவே இல்லை. அந்த காலத்தில் எல்லோரும் 60, 70 வயதானாலும் தலை முடி நரைக்காது. ஆனால் இன்று சிறுவர்கள், இளைஞர்கள் என்று எந்த பாகுபாடும் இல்லாத சிறு வயதிலேயே நரை வந்து விடுகின்றது. அதற்குக் காரணம் வாழையிலை. ஆரம்ப காலத்தவர்கள் வாழை இலையில் சாப்பிடுவதன் பயனாக அவர்களுக்கு தலைமுடி நரைக்காது கருகரு என நீண்ட காலம் நிலைத்து நிற்கின்றது. இவ்வாறு நம் முன்னோர்களின் வாழ்க்கை முறையில் எத்தனை பல சிறப்பம்சங்கள் புகுத்தப்பட்டுள்ளன. அவர்கள் வகுத்துள்ள முறைப்படி நாமும் உண்டால் நோய்நொடி இன்றி நீண்ட காலம் வாழலாம்.

இறைவனுக்கு சாத்துகின்ற அபிசேகத்தினை உண்பதினால் பல்வேறு மருத்துவ குண நலன்கள் நமக்கு கிடைக்கின்றன. இறைவனுக்கு செலுத்துகின்ற அபிசேக நீரில் துளசி, குங்குமப்பூ, கற்பூரம் ஏலக்காய் கிராம்பு முதலான மருத்துவ குணங்கள் சேர்க்கப்படுகின்றன. அவற்றுடன் சிலையில் ஊற்றும் போது அதில் உள்ள காந்த சக்தியும் அதன் உள் கலக்கப்படுவதினால் பல நன்மைகள் நமக்கு கிடைக்கின்றன.

இறைவனுக்கு அபிசேகம் பூஜை வழிபாடு மேற்கொள்ளும் போது சங்கு ஊதி வழிபடுதல் என்பது கடைப்பிடிக்கப்படுகின்றது. சமயத்தில் சங்கு ஊதுவது என்பது அதர்மத்தின் அழிவையும் தர்மத்தின் வெற்றியையும் குறிப்பதாக கூறுகின்றார்கள். சங்கினை ஊதுவதனால் மூச்சு சீராகுவதுடன் நுரையீரல் செயற்பாட்டிற்கு உதவுகின்றது. மேலும் சங்குகளில் வெளியாகின்ற காற்றானது கிருமிகளினை அழிக்க வல்லது. இதனால் எமது உடலில் இருக்கும் கிருமிகளும் அழியும்.

விபூதி, உருத்திராக்கம் முதலான சிவ சின்னங்களினை அணிவதினால் உடலுக்கும் மனத்திற்கும் நிம்மதி கிடைப்பதுடன் அதனால் பல மருத்துவ நன்மைகளும் உண்டு. திருநீற்றிற்க்கு நோய் கிருமிகளினை அழிக்கும் சக்தி உள்ளது. அதனால் காலையும் மாலையும் திருநீறு அணிவதினால் சுற்றுச்சூழலில் உள்ள நோய்கிருமிகள் எமை அண்டாது பாதுகாக்கலாம். அடுத்து திருநீறு நீரை உறிஞ்சும் சக்தி கொண்டது அதனால் குளித்துவிட்டு திருநீறு அணிவார்கள் இதனையே முன்னோர்கள் "நீறில்லா நெற்றி பாழ்" என்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு அட்டாங்க பஞ்சாங்க நமஸ்கார வழிபாட்டினால் நரம்புகள், எலும்புகள் வலுப்பெறுவதுடன் சூரிய நமஸ்காரத்தினால் தேகம் மெருகேறுவதுடன், கண்ணுக்கும் நன்மைகள் கிடைக்கின்றது. இன்றைய விஞ்ஞானத்தின் படி அதிகாலையில் படுகின்ற சூரிய வெளிச்சத்தினால் விற்றமின்–டி கிடைக்கின்றது என்கின்றார்கள். அதனால்தான் அக்காலத்தில் முன்னோர்கள் சூரிய நமஸ்காரத்தினை மேற்கொண்டார்கள்.

இவ்வாறு இந்து சமயத்தில் கடைப்பிடித்து பேணப்படுகின்ற ஒவ்வொரு விடயத்திலும் ஏதோ ஒரு விஞ்ஞானம் அடங்கியுள்ளது என்றே கூறவேண்டும். என்னதான் சில மூடநம்பிக்கைகள் காணப்பட்டாலும் அறிவியல் பூர்வ அம்சங்களினை தன்னகத்தே கொண்டு வழங்குகின்றது பழையன கழிதலும் புதிய புகுதலும் என்கின்ற கோட்பாட்டுக்கு இணங்க நமது வாழ்க்கையில் எமக்கு நன்மை பயக்கின்ற இந்து பண்பாட்டினை கடைபிடித்து வாழ்வில் நலமாக வாழ்ந்திடுவோமாக.

**கு.ஆரணி,**
**கலைப்பீடம்,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**

இறைத்தொண்டு என்பது கோவில்களைக் காப்பாற்றி அக்கோவில்களில் குடியிருக்கும் கடவுளுக்கான வழிபாடுகளைச் சிறப்பாகச் செய்வதும், கோவில்கள் இல்லாத ஊர்களில் கோவில்கள் கட்டி வழிபாடுகள் ஏற்பாடு செய்வதும், பல ஊர்களில் சேதப்பட்டிருக்கும் கோவில்களைப் புனரமைத்து வழிபாடு முறைகளைத் தொடரச்செய்வதும் ஆகும். மக்கள் சேவை என்பது, ஏழை மக்களுக்கும், இல்லாத.:.இயலாத மக்களுக்கும் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், நோய்க்கு மருந்து, கல்விச்செல்வம் ஆகியனவற்றை அளிப்பதும் ஆகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்திற்கு ஊக்கமளிக்கும் இறையுணர்வு மற்றும் நம்பிக்கை



என் கையில் தொலைபேசி காதில் செவிபேசி முகத்திற்கு முன்பாக கணினி அதன் பக்கத்தில் சிறு சுட்டி. மொத்தத்தில் காணுமிடமெல்லாம் நவீனம். ஆ! உலக உருண்டை என் கையில் இருப்பதாக ஒரு பெருமித உணர்வு! நவீன உலகம் பலவற்றை கற்றுத் தந்தாலும், உள்ளத்தின் ஏதோவொரு மூலையில் ஒரு சிறு உறுத்தல் இருப்பதாக நீங்கள் எப்போதாவது உணர்ந்திருக்கக் கூடும். நம் உள்ளங்கள் நவீனத்தால் பண்பட்டு நிம்மதியடையவில்லை போலும்...

உண்மைதான், நவீன கண்டுபிடிப்புக்களால் உடல் உழைப்பு, நேரம் சிக்கனப் படுத்தப்பட்ட போதும் உள்ளங்கள் ஆன்மீக வறுமை கொண்டதாகவே உள்ளன. உலக மாந்தர்களின் உள்ளங்களை பண்படுத்த இறையுணர்வும் நம்பிக்கையும் இன்றியமையாதவையாக உள்ளன. இவ்விரு சொற்களையும் நாம் சாதாரணமாக எண்ணி விட முடியாது. மனித மனங்களில் ஆழ்ந்த தாக்கத்தையும் ஆத்ம சாந்தியையும் ஏற்படுத்தக் கூடிய வல்லமை இவ்விரு சொற்களுக்கும் உண்டு.

சுயநலத்தாலும் அடுத்தவர் மீது கொண்ட பொறாமையாலும் கறை படிந்த மனித மனங்களில் தூய்மைப்படுத்த வந்த புனித நீரே இறை உணர்வும் நம்பிக்கையும் ஆகும். இறை உணர்வையும் நம்பிக்கையையும் நம்மால் உணர மட்டுமே முடியும் அதை உணர்வதும் ஒரு விந்தையான அனுபவமே. இனிமையான வாழ்வுக்கு இன்றியமையாத சாதனங்களாக இறை உணர்வையும் நம்பிக்கையையும் நாம் நோக்க முடியும்.

பல கோடி ஆண்டுகளாக ஒரு குகைக்குள் வெளிச்சமே போகவில்லை. இருட்டாகவே இருக்கின்றது. இந்தக் குகைக்குள் வெளிச்சம் வர ஒரே ஒரு தீக்குச்சியின் நெருப்பு போதும். அந்த தீக்குச்சியின் நெருப்பை மூட்டுவதற்கு எவ்வளவு நேரம் ஆகுமோ அவ்வளவே ஆன்மீகத்தின் விழிப்பு. இந்த விழிப்பு ஒரு நொடியிலும் வரலாம் ஓராயிரம் வருடங்களுக்கு பின்னரும் வரலாம். ஒரு வருடத்தில் ஆன்மீக விழிப்பு ஏற்படும் போது அவரின் உள்ளத்தில் இறையுணர்வு இயல்பாகவே தன் இருக்கையை போடுகிறது. பின்னர் அவரின் உள்ளம் மலர்வு பெறுகிறது. தனி மனிதன் பண்படுகிறான் குடும்பம் பண்படுகிறது கிராமம் நாடு என இவ்வுலகமே பண்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீக விழிப்பினை பெற தியானம், யோகாசனம் போன்ற உத்திகளை கையாளலாம். நிம்மதியாய், ஆனந்தமாய் , தாமரை இலை மேல் உள்ள நீர் போல் உலக வாழ்வில் உங்களுக்கு பிடித்த, உகந்த விடயங்களில் ஈடுபடுவதே ஆன்மிகத்தை மேலும் வலுப்படுத்த சிறந்த வழி என கருதுகிறேன்.

ஆன்மீக செயல்முறைகளின் மூலம் இறை உணர்வு வளர்க்கப்படாவிட்டால் உள்ளங்கள் உருக்குலைந்து போய்விடும் . தம் வாழ்வின் ஏதாவது ஒரு சூழ்நிலையில் மிகுந்த பயத்திற்கும் மன உளைச்சலுக்கும் வேதனைக்கும் ஆளாகிவிடுவார்கள்.

ஆன்மீக செயல்முறைகள் மூலம் மட்டும் தானா இறை உணர்வும் நம்பிக்கையும் வளர்க்கப்படுகிறது? என நீங்கள் கேட்பது எனக்கு புரிகிறது. கல்வி மூலமும் இறை உணர்வையும் நம்பிக்கையினையும் பெற்றுக் கொள்ளலாம்.

ஒருவர் சிறுவயதிலிருந்தே நாத்திகராக இருக்கின்றார் என வைத்துக் கொள்வோம். மனிதர் என்ற ரீதியில் இவரது உள்ளம் பண்படுவது அவசியமாக காணப்படுகிறது. இவருக்கு ஆன்மீகத்தின் மூலம் இறை உணர்வையும் நம்பிக்கையினையும் வழங்குவது அதிக பலனை தராது. எனவே, இத்தன்மை வாய்ந்த நபருக்கு நாம் அறநெறிக் கல்வி மூலமாக அல்லது உலகக் கல்வி மூலமாக உள்ளங்களை நெறிப்படுத்தும் வழிமுறைகளை எடுத்துக் கூறவேண்டும்.

திசை மாறிக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் இறை உணர்வும் வாழ்வில் வெற்றிப் படிகளை தாண்டுவதற்கு தேவையான தன்னம்பிக்கையும் கல்வியின் மூலம் வழங்கப்படுவது அத்தியாவசியமான ஒன்றாகவே பார்க்கப்படுகிறது. நம் நாட்டிலும் ஆன்மீகமும் கல்வியும் ஒருங்கிணைந்து வழங்கப்படுமாக இருந்தால் இறை உணர்வு, நம்பிக்கை ஆளுமை திறன், கற்பனை திறன், முழுமையான வளர்ச்சி, நீதி நெறியும் நற்குணமும் நிறைந்த மனிதநேயமும் நுண்ணறிவும் சிந்தனையாற்றலும் பகுத்தறிவும் கொண்ட நடுநிலை சமூகம் என்பனவற்றை மிக எளிதாக உருவாக்க முடியும்.

இல்லாவிட்டால், வங்கிக்கு சென்றால் இன் முகத்துடன் நமக்கான சேவைகளை செய்ய யாருமே இருக்க மாட்டார்கள் சந்தையில் உறவினர்களை கண்டால் கூட கண்டும் காணாது போய்விடுவார்கள் மொத்தமாக சொல்லப் போனால் உலகத்தில் எந்த நிகழ்வு நடந்தாலும் தன்னை பாதிக்காத வரை நலமே என்ற மனப்பாங்குடன் தம் உள்ளங்களை உணர்ச்சியற்றதாய் உருமாற்றி விடுவார்கள்.

ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு சமயத்திலும் ஆன்மீக போதனைகளும் இறை உணர்வையும் உள உறுதியையும் உயர்த்தக்கூடிய கல்வியும் கட்டாயமாக்கப்பட்டு சிறார்களுக்கு சிறுவயதிலிருந்து ஊட்டப்படுமானால் நம் கற்பனைக்கும் எட்டாத வரையில் மனித உள்ளங்கள் வானைப் போல விசாலமாக பரந்து விரிந்து காணப்படும் என்பதில் ஐயம் ஏதுமில்லை.

**எஸ்.முஸர்ரப்,**

**விலங்கு மருத்துவ விஞ்ஞான பீடம்,**

**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானுட வாழ்வியலில் சமயத்தின் போக்கு



சமயமானது, உலகில் பன்னெடுங்காலமாக வாழ்ந்து வருகின்றது. அது போல மனிதனும், மனிதனைச் சார்ந்த சமூகமும் வாழ்ந்து வருகின்றனர். மனிதனையோ, சமயத்தையோ வேறுபிரித்துப் பார்த்திட முடியாத வகையில், ஒன்றையொன்று இறுகப் பற்றியே அவை காணப்படுகின்றன. மனிதனைச் சமய நம்பிக்கையும், அதன் பயனாகிய இறை வழிபாடுமே பிற உயிரினங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன. ஆம், மனிதனைப் பொறுத்தளவில், உடல் வளர்ச்சிக்கு உணவும், அறிவு வளர்ச்சிக்குக் கல்வியும் தேவைப்படுவது போல, உயிர் நிலைப்புத்தன்மைக்கு சமய நம்பிக்கையும், வழிபாட்டு நெறிகளுமே தேவைப்படுகின்றன.

பொதுவில், தெய்வ நம்பிக்கை அல்லது உணர்வு, அதன் செயலான வழிபாடு இவ்விரண்டின் காரணமாகக் கடைப்பிடிக்கப்படும் ஆன்மீகக் கோட்பாடுகளே சமயம் எனப்படுகிறது. அரிசி சோறாகச் சமைக்கப்பட்டு உண்ண உணவாக்குவது போல் மனித குலத்தைச் சமைப்பது, அதாவது பக்குவப்படுத்துவதே சமயம் எனப்படுகிறது. இதனைக் காட்டிலும் தெளிவாக எடுத்துரைக்க வேண்டுமெனில், சமயத்தை **"வாழும் முறை"** அல்லது **"வாழ்க்கை நெறி"** என்று கூறிவிடலாம். அரியதான இம்மானுடப் பிறப்பில் மனிதனை வாழ்வாங்கு வாழ வைப்பதும், மனிதனை பண்படுத்துவதும் சமய நெறிகளே. இதனையே சம்பந்தர், **"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும், எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவில்லை"** என்று அழகுற எடுத்துரைத்துள்ளார்.

மனிதன் ஆதியில் இருந்தே சமய நம்பிக்கைகளிலும், சாஸ்திர சம்பிரதாயங்களிலும் சமயம் என்ற அம்சத்துடன் இணைந்தே வாழ்ந்து கொண்டிருக்கிறான். இன்றைய காலத்து வரலாற்று சான்றுகளின் அடிப்படையில் நோக்கினால், ஆதிகால மனிதன் இயற்கைச் சக்திகளான சூரியன், சந்திரன், காற்று, நீர், மரம் முதலியவற்றையே தெய்வங்களாக வணங்கியுள்ளான். அதுமட்டுமன்றி அவை காட்டும் இசைவாக்கங்களுக்கு பயந்தவனாகவும், அவற்றுக்கு இசைந்து கொடுக்கக் கூடியவனாகவும் வாழ்ந்துள்ளான்.

இவ்வாறு காலங்கள் செல்லச் செல்ல முதலில் உருவான அதி உன்னதமான சமயமாக இன்றளவும் ஏற்றுக் கொள்ளப்படுவது இந்து சமயமேயாகும். சிந்துவெளி நாகரீகத்தில் மொஹஞ்சதாரோ, ஹரப்பா முதலிய பகுதிகளில் சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து சமயம் உருவானது என இன்றைய வரலாறு கூறினாலும், அதற்கு முன்பிருந்தே அங்கு இந்து சமயத்தின் ஆதிக்கம் தலைத்தோங்கி இருந்தது என்ற நம்பிக்கை இன்றும் நிலவி வருகின்றது.

உண்மையில், மனித வாழ்வானது, வாழ்க்கை வேறு சமயம் வேறு என்று கருத முடியாத அளவுக்கு எமது சமயத்தினால் மெருகூட்டப்பட்டுள்ளது. குறிப்பாக சைவ சமயிகளான எமது அன்றாடக் கருமங்கள் யாவும் இறை சிந்தனையுடன் தொடங்கி, இறை சிந்தனையுடனேயே நிறைவெய்துகின்றன.

காலமாற்றத்திற்கமைவாக, இன்றைய நிலையில், விஞ்ஞானம் பெற்றுள்ள அபரிமிதமான, பிரமிக்க வைக்கும் அசுர வளர்ச்சியானது, உலகம் முழுவதும் எல்லா சமயங்களிலும், கலாச்சார, பண்பாடுகளிலும் மாபெரும் மாற்றங்களை உருவாக்கியுள்ளது. இந்த நிலையில் தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாட்டை காப்பாற்ற வேண்டிய பொறுப்பும், போற்றிப் பேணி வளர்க்க வேண்டிய நிர்ப்பந்தமும் மானுடர்க்கு ஏற்பட்டுள்ளது. அதற்கு இந்து சமயத்தில் உள்ள வாழ்வியல் நெறிமுறைகளை கடைப்பிடிக்க வைக்க வேண்டியது மிக மிக அவசியமாகும். இந்து சமய வாழ்க்கை என்பது அன்பு, அறிவு, ஆற்றல், செல்வம், ஒழுக்கம், ஒற்றுமை, செயல், தியாகம், நம்பிக்கை உட்பட பல்வேறு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டது.

அதன்படி நோக்கினால், **"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்"** எனும் வள்ளுவனின் கூற்றுக்கிணங்க, சைவநெறியில் வாழ்வாங்கு வாழ்கின்ற வாழ்க்கைமுறையாக அமையப்பெறுவது ஒழுக்கமே. அச்சாணி இல்லாத் தேர் முச்சாணும் ஓடாது என்பது போல ஒழுக்கமே மனித வாழ்வின் அச்சாணி. மனிதனை விழித்து அடையாளப்படுத்திக் காட்டுவதும் ஒழுக்கமேயாகும். ஒழுக்கமில்லாத மனிதனின் வாழ்க்கையை மதிப்பாரும் இல்லை, கேட்பாரும் இல்லையெனலாம். ஒழுக்கத்தைக் கைக்கொண்டு வாழ்ந்த மாமனிதர்கள் என்றே சமயம் நம் முன்னோரை பறைசாற்றி நிற்கின்றது. அதனால் ஒழுக்கம் மனிதனை பண்படுத்தும் ஆகச்சிறந்த கருவியெனலாம்.

நாம் அன்பு செலுத்த வேண்டியவர்களில் இறைவன் மிக முதன்மையானவர். அவரை இடையறாது சிந்திக்க வேண்டும் என்பதோடு அவரால் படைக்கப்பட்ட சகல உயிர்களிடத்தும் அன்பு செலுத்த வேண்டும். சிபிச்சக்கரவர்த்தி என்ற அரசன் பருந்திடம் இருந்து, புறாவைக் காப்பதற்காகத் தன் உடலின் தசையை அறுத்து வழங்கினான். மனுநீதிகண்ட சோழன் தன் மகனுக்கென்று பாராது பசுவுக்காக இரங்கினான். திருவள்ளுவர் அத்தகைய அன்பின் பெருமையைப் பற்றிக் கூறுகையில், அன்பில்லாதவர் பிறருக்கு உதவி செய்யமாட்டார்கள். ஆதலால், அவர்களது எல்லாப் பொருள்களும் அவர்களுக்கே உரியதாகும். ஆனால், அன்புடையவர் தம்மிடம் உள்ள பொருள்களால் மட்டுமன்றித் தம் உடம்பாலும் பிறருக்கே உரியவர் ஆகிறார். என்பதனை **"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு"** என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது சமூகத்தில் உள்ளவர்களிடம் வளர்க்கப்பட வேண்டிய சமய விழுமியப் பண்புகளில் பகிர்ந்துண்ணலும் மற்றொரு பண்பாகும். அதனையே, எமது முன்னோர்கள் அறம், தர்மம் என்னும் பெயர்களால் வழங்கினர். இதனை ஔவையார். "அறம் செய விரும்பு", "ஐயமிட்டுண்" என ஆத்திச்சூடியில் அழகாகக் குறிப்பிட திருமூலர், பசியென்று வந்த எவருக்கும் நாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி உணவைக் கொடுத்து, பகிர்ந்துண்ணுதல் எல்லோராலும் செய்யக்கூடிய அறம் என்கிறார். இதனைப் பின்வரும் திருமந்திரப் பாடலில்,

**"யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை**
**யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை**
**யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி**
**யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே."**

எனக் குறிப்பிட்டுள்ளார். திருவள்ளுவரும் மக்கள் செய்ய வேண்டிய அறங்களில் பகிர்ந்துண்ணலை பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் எனக் குறிப்பிட்டுள்ளார். அறங்கள் எல்லாவற்றிலும் தலையான அறமாக விளங்குவது, தமக்குக் கிடைத்த உணவை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுத்து, தானும் உண்டு பல உயிர்களையும் காப்பாற்றுவதாகும்.

மேற்கண்ட அனைத்துப் பண்புகளும் ஒரு மானிடனிடம் வாய்க்குமேயானால், ஒரு சிறந்த ஆளுமையாக அவன் உருவாவதோடு, இந்து சமயத்தின் இந்த ஒருங்கிணைந்த பண்புகளின் பயிற்சியைப் பெறும் போது மனிதன் தன் வாழ்க்கையில் சலனம் இல்லாத மேம்பாட்டை எட்ட முடியும். அது மட்டுமின்றி எந்த நல்ல கருத்தையும் ஏற்றுக் கொள்வது இந்து சமயத்தின் தனித்துவமான சிறப்பாகும். இந்து சமயம் மனிதனுக்கும் அவனது கொள்கை, வாழ்க்கை முறை, வழிபாட்டு முறைகளுக்கு முழுமையான சுதந்திரத்தை கொடுத்துள்ளது. அதனால் தான் எத்தனையோ சாஸ்திரங்கள், சம்பிரதாயங்கள் இருந்தாலும் இந்துக்கள் தம் இறைவழிபாட்டை வாழ்வியலோடு ஒருங்கிணைந்த ஒன்றாக எளிமையானதாக வைத்துள்ளனர்.

மக்களின் வாழ்க்கை நடைமுறைகள் ஒவ்வொன்றும் இந்து சமய இறைவழிபாட்டில் எதிரொலித்தப்படி உள்ளது. அதற்கு ஏராளமான எடுத்துக்காட்டுகள் உள்ளன. ஆதி காலத்தில் புனிதமாக கருதப்பட்ட காதல் தெய்வங்களின் வாழ்வியல் மூலம் உணர்த்தப்பட்டது. கிருஷ்ணர், சத்தியபாமாவை காதலித்துக் கரம்பிடித்தார். முருகப்பெருமான் தினைப்புனம் காத்த வள்ளியைக் காதலித்து திருமணம் செய்தார். அது போல கணவனுக்கும் மனைவிக்கும் இடையே ஊடல் ஏற்படுவதையும் இறைவழிபாட்டில் காணலாம். சிவபெருமானுக்கும், பார்வதிக்கும் சிவம் பெரிதா, சக்தி பெரிதா என்ற ஊடல் ஏற்படுகையில், இறுதியில் சக்தி இல்லாமல் சிவன் இல்லை. சிவன் இல்லாமல் சக்தி இல்லை என்ற தத்துவம் உணர்த்தப்பட்டது.

ஆண், பெண் இருவரில் யார் உயர்வு, யார் தாழ்வு என்ற பேச்சுக்கே இடமில்லை. இருவரும் சமம் என்பது ஆலய வழிபாட்டில் பல்வேறு வகைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆணும், பெண்ணும் சேர்ந்ததுதான் வாழ்க்கை. இந்து மத தெய்வக் கோட்பாட்டில் சிவலிங்கத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவமே இதுதான். அர்த்தநாரீஸ்வரர் வழிபாட்டு தத்துவமும் இதனை உள்ளடக்கியதுதான். எந்த நிலையிலும் ஆண் – பெண் சரிநிகர் சமம் என்பதை இந்து மதம் காலம், காலமாக உணர்த்தியபடி உள்ளது.

இந்த அடிப்படையில் தான் இந்து ஆலயங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டும் மையங்களாக உருவாக்கப்பட்டன. ஆலயங்களில் நடத்தப்படும் திருவிழாக்கள் அனைத்தும் நமது சமுதாயத்தை ஒருங்கிணைப்பதற்காக நம் முன்னோர்களால் உருவாக்கப்பட்டவையாகும். தேர் திருவிழா நடக்கும் போது தேரை ஏழை – பணக்காரர், தாழ்ந்த சாதி – உயர்ந்த சாதி என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோரும் வடம் பிடித்து இழுப்பார்கள். 'இறைவன் முன்பு நாம் அனைவரும் சமம்' என்ற மிகப்பெரிய வாழ்வியல் நெறி அங்கு உணர்த்தப்படுகிறது. இப்படி நமது வாழ்வியலின் ஒவ்வொரு செயலிலும் இந்து சமய கோட்பாடுகள் இரண்டற கலந்துள்ளது. அந்த கோட்பாடுகளை சரியாக கடைபிடிப்பவர்களே பிறவிச் சூழலில் இருந்து விடுபட முடியும்.

இவ்வாறு அன்றாடம் சைவ சிந்தனையில் தம்மை ஈடுபடுத்தி வாழ வேண்டிய இந்துக்களின் வாழ்க்கையில் இன்று இந்நிலை மாறி மாற்று கலாச்சாரத்தின் பக்கம் அவனது பார்வை திரும்பியிருக்கிறது. இதற்குக் காரணம் அவனது சமயத்தின் உன்னதமும், சிறப்பும் அவனுக்கு தெரியாததே ஆகும். அதுமட்டுமல்ல அவனிடத்தே காணப்படுகின்ற வேட்கை, மோகம், அவா என்பனவும் அவனது சுயநலமும் கூட இதற்கு முக்கிய காரணியாக அமையப்பெற்றுள்ளன.

எனவே இந்நிலை மாற வேண்டும். ஆதிமனிதனைப் போன்று அனைத்து செயற்பாடுகளிலும் இறை சிந்தனையுடன் ஈடுபட்டால், சமயத்தோடு ஒன்றித்துப் பயணித்தால், அவனது வாழ்வு சீரும் சிறப்பும் பெறும் என்பது எமது இந்து சமயத்தின் வாயிலான நோக்குகையில் புரிந்திடும் ஆணித்தரமான உண்மை ஆகும்.

**சி.கஜனி,**
**கலைப்பீடம் (2020),**
**பேராதனைப் பல்கலைக்கழகம்,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து தர்மம்



ஒரு மதம் பிடித்த யானையை பலத்த சங்கிலியால் கட்டிப் போடுவதைப் போல், வாழ்க்கையில் நெறிகெட்டுத் திரியும் மனிதர்களை நல்வழிப்படுத்துவதே மதங்கள் ஆகும். உலகில் எத்தனையோ மதங்கள் உள்ளன. ஆனால் அனைத்து மதங்களின் சாரமும் ஒன்றே. மனிதனை அறநெறியில் செல்ல வைப்பது அது. அப்படிப்பல மதங்களில் ஒன்றுதான் இந்து மதம். பலவற்றில் ஒன்று எனச் சொல்வதை விட அனைத்திலும் சிறந்தது என்று, சொல்வதே சாலச்சிறந்தது அப்படி என்ன சிறப்பு? என சிந்திப்போர்க்கு இவ்விளக்கம்.

இந்துமதம் என்று சொல்வதை விட சனாதன தர்மம் என்று சொல்வதே சிறப்பு. இறைவனை அடைய நாம் செல்லும் இந்த வழியை சனாதன தர்மம் என்றே நம் முன்னோர்களால் பின்பற்றப்பட்டது. "இந்து தர்மம்" என்ற பெயர் அன்னியர்களால் இடப்பட்டது. அதாவது சிந்து நதி மக்களால் பின்பற்றப்பட்ட சனாதன தர்மமே இந்து மதம் என அன்னியர்களால் அழைக்கப்பட்டது. இந்துமதம் யாராலும் உருவாக்கப்பட்டதல்ல. எப்போது தோன்றியது என யாராலும் கணிக்க முடியவில்லை. உதாரணமாக கிறிஸ்துவ சமயம் இயேசு நாதருக்குப் பின் தோன்றியது. இஸ்லாமிய மதம் முகம்மது நபியால் தோற்றுவிக்கப்பட்டது. பௌத்தம் புத்தருக்குப் பின் தோன்றியது. ஆனால் இந்து மதமோ இப்படி யாராலும் உருவாக்கப்பட்டது அல்ல. இது பல யுகங்களைக் கடந்து நிற்கிறது. இந்து மதம் காணும் யுகங்கள் நான்கு அவையாவன.

1. க்ருதயுகம்
2. திரேதாயுகம்
3. துவாபரயுகம்
4. கலியுகம்

இப்பொழுது, நாம் வாழம் யுகம் கலியுகமாகும். நான்கு வேதங்கள், உபநிடதங்கள், மற்றும் பல புராணங்கள், சடங்கு சம்பிரதாயங்களை கொண்டது இந்து மதமாகும். ஒவ்வொரு மனிதர்களையும் நல்வழிப்படுத்த வியாசத் மற்றும் பலமுனிவர்கள் மூலம் இறைவன் நமக்கு அளித்து அருள் கொடைகளாகும். இந்து தர்மம் அதைப் பின்பற்றுபவர்களுக்கு பல சுதந்திரங்களை வழங்கியுள்ளது. இந்த நேரத்தில் நான் இறைவனை தொழ வேண்டும், இப்படித்தான் வழிபட வேண்டும் என்று பிறர் கருத்துகளை நம் மீது திணிப்பதில்லை. அவரவர் எண்ணங்களுக்கேற்ப இறைவனை வழிபடலாம். இது மற்ற எந்த மதத்திலும் இல்லாத கருத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற மதத்தவர் இந்து மதத்தினைப் பார்த்துக் கேட்கும் கேள்வி இந்து மதத்தில் ஏன் பல தெய்வங்கள்?

பல தெய்வங்கள் உண்டா? என்றால் இல்லை. ஒரு பரமாத்மாவின் பல்வேறு அம்சங்களே. இவ்வடிவங்கள் பற்றிய சிறந்த விளக்கம் கூறுவதாயின் பள்ளிப் பருவ கணித பாடத்தில் பெரிய கணக்கை பல படிமுறைகளில் பிரித்து, வகுத்து, இறுதியில் ஒரே விடையாக தந்திருப்பார்கள் எமது விளக்கத்திற்காக. அதே போன்றது தான் பலவடிவங்களில் வழிபட்டாலும் இறுதியில் அடைவது ஒரு பரமாத்வாவை தான்.

இப்படிப்பட்ட அறிவார்ந்த இந்து மதத்தை அதனுள் பொதிந்துள்ள விஞ்ஞானத்தை நாம் ஆராய வேண்டும். வெறும் வெளிப்புற அல்லது தனிப்பட்ட நம்பிக்கையாக அல்ல. உபநிடதங்கள். போன்ற இந்து, தத்துவ நூல்கள் பிளேட்டோ மற்றும் அரிஸ்டாட்டில் போன்ற கிரேக்கர்களின் நூல்களை விடப் பழைமையானவை. மற்றும் மேற்கத்திய தத்துவாக்கத்திற்கு முந்தியவை எனக் கூறப்படுகிறது. இந்த இந்து நூல்கள் உலகளாவிய அண்ட நுண்ணறிவை வழங்குவதால் அவை பல விடயங்களால் ஆழமானவையாக விளங்குகின்றன. வெறும் தத்துவப் பேச்சு மதநம்பிக்கை என்று மட்டும் இல்லாமல் வாழ்க்கையின் மர்மங்களுக்குள் அழைத்துச் செல்லக்கூடிய மனதை ஒருமுகப்படுத்தும் தியானத்தை ஊக்குவிக்கின்றது..

இந்த அடிப்படையிலான தத்துவங்கள், விஞ்ஞானம் மற்றும் அறிவியல் முன்னேற்றத்துக்கு கிடைத்த மிகப்பெரிய பரிசு என்றே கூறலாம். எனவே இது ஒரு அர்த்தமுள்ள இந்துமதம் என்று அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய விடயம். நவீன உலகம் முன்னேற ஆழமான கருத்துகளின் மையப்புள்ளி இந்துமதம் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

**ர.வைகர்த்தன்,**
**விவசாய விஞ்ஞான பீடம் (2022),**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2023/2024 ஆம் ஆண்டு இந்து மாணவர் சங்க 67வது செயற்குழுவின் ஆண்டறிக்கை

| | | |
|---|---|---|
| 14.01.2023 | - | தைப்பொங்கலை முன்னிட்டு சிரமதான நிகழ்வு இடம்பெற்றது. |
| 15.01.2023 | - | தைப்பொங்கல் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றது. |
| 27.01.2023 | - | ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இனிதே ஆரம்பம். |
| 04.02.2023 | - | அலங்கார உற்சவ இறுதி நாள் குறிஞ்சி குமரப்பெருமான் திருவீதியுலா வலம் வந்தார். |
| 05.02.2023 | - | தைப்பூச திருவிழா இடம்பெற்றது |
| 18.02.2023 | - | மகா சிவராத்திரி நாளன்று மாணவர்களின் பரிபூரண பங்களிப்புடன் நான்கு சாம பூஜை வழிபாடுகள் மற்றும் ஆறுகால பூஜை இடம்பெற்றது. |
| 14.04.2023 | - | சோபகிருது வருஷப்பிறப்பு, விசேஷ அபிஷேகப் பூஜை வழிபாடுகளுடன் நடைபெற்றது. |
| 22.04.2023 | - | கார்த்திகை உற்சவம் விசேட அபிசேக ஆராதனைனகள் சிறப்பாக இடம்பெற்றன |
| 05.05.2023 | - | சித்திராப் பூரணை விசேஷ அபிஷேகப் பூஜைகள் இனிதே நடைபெற்றன |
| 12.05.2023 | - | நடேசர் அபிஷேகம், நடேசர் தரிசனம் மற்றும் பஞ்சபுராண பாராயணம் இடம்பெற்றது |
| 19.05.2023 | - | கார்த்திகை உற்சவம் விசேட அபிசேக ஆராதனைகள் சிறப்பாக இடம்பெற்றன. |
| 02.06.2023 | - | வைகாசி விசாக உற்சவம் மாணவர்களின் சரியைத் தொண்டுகளுடன் சிறப்புப் பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. |
| 15.06.2023 | - | கார்த்திகை உற்சவம் விசேட அபிசேக ஆராதனைனகள் சிறப்பாக இடம்பெற்றன. |
| 26.06.2023 | - | ஆனி உத்தர நடேசர் தரிசனம் இடம்பெற்றது. |
| 13.07.2023 | - | கார்த்திகை உற்சவம் விசேட அபிசேக ஆராதனைனகள் சிறப்பாக இடம்பெற்றன. |
| 22.07.2023 | - | ஆடிப்பூர உற்சவம் மற்றும் சுவாமி வீதியுலா வருகை இடம்பெற்றது. |
| 09.08.2023 | - | கார்த்திகை உற்சவம் விசேட அபிஷேக ஆராதனைனகள் சிறப்பாக இடம்பெற்றன. |
| 15.08.2023 | - | ஆடி அமாவாசை விசேஷ பூஜை இடம்பெற்றது |
| 20.08.2023 | - | விநாயகர் சதுர்த்தி உற்சவம் மற்றும் பிள்ளையார் கதை பாராயணம் |
| 25.08.2023 | - | சிரமதான நிகழ்வு முன்னெடுக்கப் பட்டது |
| 26.08.2023 | - | மணவாளக் கோல தின நவோத்ர சகஸ்ர (1008) சங்காபிஷேகம் இடம்பெற்றது<br>சுவாமி வீதியுலா வருதல் |
| 29.08.2023 | - | நடேசர் அபிஷேகம் இடம்பெற்றது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 05.09.2023 | - கார்த்திகை உற்சவம் விசேட அபிஷேக ஆராதனைனகள் சிறப்பாக இடம்பெற்றன |
| 06.09.2023 | - ஸ்ரீ கிருஸ்ண ஜெயந்தி விசேஷ பூசை இடம்பெற்றது |
| 28.09.2023 | - நடேசர் அபிஷேகம், நடேசர் தரிசனம் இடம்பெற்றன |
| 03.10.2023 | - கார்த்திகை உற்சவம் விசேட அபிசேக ஆராதனைகள் சிறப்பாக இடம்பெற்றன |
| 14.10.2023 | - நவராத்திரி விரதாரம்பத்தை முன்னிட்டு ஆலயத்தில் சிரமதானம் இடம்பெற்றது |
| 15.10.2023 | - நவராத்திரி பூஜை கொலுவைப்புடன் ஆரம்பமானது. தொடர்ந்து எட்டு தினங்கள் பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. மாலை திருவூஞ்சல் நடைபெற்று விசேஷ தவில் நாதஸ்வர கச்சேரியுடன் குறிஞ்சி குமரப்பெருமான் திருவீதியுலா வலம் வந்தார். |
| 24.10.2023 | - விஜயதசமி உற்சவம் (மானம்பூ) மற்றும் சிறப்புப் பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன |
| 30.10.2023 | - கார்த்திகை உற்சவம் விசேட அபிசேக ஆராதனைனகள் சிறப்பாக இடம்பெற்றன |
| 12.11.2023 | - தீபாவளி விசேட பூஜைகள் இடம்பெற்றன |
| 14.11.2023 | - ஸ்கந்த சஷ்டி விரதாரம்பம் , கந்தசஷ்டிக்கவசம் பஞ்சபுராண பாராயணம் என்பன இடம்பெற்றன |
| 18.11.2023 | - சூரசம்ஹாரம் நிகழ்வு இனிதே இடம்பெற்றது முருகன் மற்றும் சூரன் அலங்கரிக்கப்பட்டு சிறப்பான சூரனாட்டம் இடம்பெற்றது. மாணவர்களின் அளப்பரிய பங்காற்றலுடன் இனிதே நடைபெற்றது. |
| 19.11.2023 | - குறிஞ்சிக்குமரப் பெருமான் திருக்கல்யாண நிகழ்வு இடம்பெற்று சிறப்பு அன்னதான நிகழ்வும் இடம்பெற்றது |
| 27.11.2023 | - விஷ்ணுவாலய தீபத்திருநாள், தீபங்கள் ஏற்றப்பட்டு அத்தீப ஒளியில் குறிஞ்சிக்குமரனுக்கு சிறப்புப் பூஜை இடம்பெற்றது |
| 18.12.2023 | - திருவெம்பாவை விரத ஆரம்பம் விசேட பூஜைகள் விநாயகஷ்டி உற்சவம் இடம்பெற்றன. |
| 27.12.2023 | - நடேசர் ருத்ரா அபிசேகமும் ஆருத்ரா தரிசனமும் இடம்பெற்றன. |
| 14.01.2024 | - தைப்பொங்கலை முன்னிட்டு சிரமதான நிகழ்வு இடமபெறறது. |
| 15.01.2024 | - தைப்பொங்கல் விசேட பூஜை மற்றும் வழிபாடுகள் அனைத்துப்பீட மாணவர்களின் பங்களிப்புடன் சிறப்பாக கொண்டாடப்பட்டது. |
| 16.01.2024 | - ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இனிதே ஆரம்பம். முதல் பத்து தினங்களும் விசேட அபிசேக பூஜைகளுடன் வசந்த மண்டப பூஜை இடம்பெற்று திருவீதியுலா வருதலும் சிறப்பாக இடம்பெற்றது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24.01.2024 - அலங்கார உற்சவ இறுதி நாள் விசேட அஷ்டோத்திர சத சங்காபிஷேகம் காலை இடம்பெற்றது. மாலை விசேட தவில் நாதஸ்வர கச்சேரியுடன் குறிஞ்சிக் குமரப் பெருமான் விநாயகர் அம்பாள் சமேதரராக வீதியுலா வந்தார்.

12.01.2024 - வெள்ளிக்கிழமை விசேட பூஜைகளுடன் ஆண்டிற்கான இந்து மாணவர் சங்க புதிய உறுப்பினர்களிடம் பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டன.

மேற்குறிப்பிட்ட பூஜை வழிபாடுகளுடன் சுபகிருது வருஷ மற்றும் சோபகிருது வருஷ விஞ்ஞாபனங்களில் குறிப்பிட்டுள்ளவாறான மாதாந்த கார்த்திகை உற்சவங்கள், நடேசர் அபிஷேகங்கள் உள்ளிட்ட அனைத்து விசேட பூஜை வழிபாடுகளும் உரிய காலத்தில் இடம்பெற்றன. மேலும் பிரத்தியேக அபிஷேக பூஜை வழிபாடுகளும், அடியார்களால் நிறைவேற்றப்பட்டன.

ஆலய நித்திய பூஜை, வழிபாடுகள், காலை 07.00 மணிக்கு திருவனந்தலும், காலை 10.30 மணிக்கு அர்த்தஜாம பூஜையும் காலம் தவறாது நடைபெற்றன. ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் மாலை பூஜை 05.45 மணிக்கு இடம் பெற்று தொடர்ந்து முருகனடியார்களால் பஜனை வழிபாடுகளும் இடம்பெற்றன.

**இணை செயலாளர்கள்,**

**ந.பானுஜன், த.கோபிகன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "1952ம் ஆண்டு முதல் இன்று வரை இந்து மாணவர் சங்கப் பெருந்தலைவர்கள் மற்றும் தலைவர்கள்"

| ஆண்டு | பெருந்தலைவர் | தலைவர் |
|---|---|---|
| 1952 - 57 | பேராசிரியர் ரி.ஆர்.வீ.மூர்த்தி | |
| 1957 - 58 | பேராசிரியர் த நடராஜா | திரு.ஏ. முத்துக்கிருஷ்ணன் |
| 1959 - 62 | பேராசிரியர் தநடராஜா | திரு.க.சிவஜோதி |
| 1962 - 63 | பேராசிரியர் த.நடராஜா | |
| 1963 - 64 | பேராசிரியர் த.நடராஜா | திரு.எஸ் நவரட்ணராஜா |
| 1964 - 65 | பேராசிரியர் த.நடராஜா | திரு.மு.கனகரட்ணம் |
| 1965 - 66 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு.து.அப்புலிங்கம் |
| 1966 - 67 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு.கு. சண்முகநாதன் |
| 1967 - 68 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு.க.கிருஷ்ணானந்தசிவம் |
| 1968 - 69 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு.ந.சுகுமாரன் |
| 1969 - 70 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு.க.ஜெயபாலன் |
| 1970 - 71 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு.என்.சந்திரகாந்தன் |
| 1971 - 72 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு.என்.சந்திரகாந்தன் |
| 1972 - 73 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு.பா.பத்மநாதன் |
| 1974 - 75 | பேராசிரியர் பே.கனகசபாபதி | திரு.க.குமரேசன் |
| 1975 - 76 | பேராசிரியர் சி. தில்லைநாதன் | திரு.கு.கந்தசாமி |
| 1976 - 77 | பேராசிரியர் சி. தில்லைநாதன் | திரு.கு.கந்தசாமி |
| 1977 - 78 | பேராசிரியர் சி. தில்லைநாதன் | திரு.இ.கைலாசநாதன் |
| 1978 - 79 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு.எஸ்.சிவானந்தன் |
| 1979 - 80 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு.கு.சிவகணேசன் |
| 1980 - 81 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு.கோ.யுசீலாந்தன் |
| 1981 - 82 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | |
| 1982 - 83 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு.சி.பாலகிருஷ்ணன் |
| 1983 - 84 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு.சி.பாலகிருஷ்ணன் |
| 1984 - 85 | பேராசிரியர் த.யோகரட்ணம் | திரு.ஏ.விஜயரஞ்சன் |
| 1985 - 86 | பேராசிரியர் த.யோகரட்ணம் | திரு.ஏ.விஜயரஞ்சன் |
| 1986 - 87 | பேராசிரியர் த.யோகரட்ணம் | திரு.பீ.தயாபரன் |
| 1987 - 88 | பேராசிரியர் சி.சிவயோகநாதன் | திரு.பீ.தயாபரன் |
| 1988 - 89 | பேராசிரியர் சி.சிவயோகநாதன் | திரு.எஸ். குகனேசன் |
| 1989 - 90 | பேராசிரியர் து.விநாயகலிங்கம் | திரு.இ.சந்திரகுமார் |
| 1990 - 91 | பேராசிரியர் து.விநாயகலிங்கம் | திரு.செ.இரவீந்திரநாதன் |
| 1991 - 92 | பேராசிரியர் து.விநாயகலிங்கம் | திரு.க.வல்லபவானந்தன் |
| 1992 - 93 | பேராசிரியர் இ.சிவகணேசன் | திரு.தி.நவநீதன் |
| 1993 - 94 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு.க.கணேசநாதன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 1994 - 95 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு.க.நந்தகுமார் |
| 1995 - 96 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு.பா.சஞ்சயன் |
| 1996 - 97 | கலாநிதி செ.திருச்செல்வம் | |
| 1997 - 98 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு.உயசீலன் |
| 1998 - 99 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு.க. இராகவன் |
| 1999 - 00 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு.நே.ராஜரூபன் |
| 2000 - 01 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு.க. கருணாநிதி |
| 2001 - 02 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு.இ. மயூரன் |
| 2002 - 03 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு.ச.சிவயோதி |
| 2003 - 04 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு.து.அரவிந்தன் |
| 2004 - 05 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு.ப.தயாபரன் |
| 2005 - 06 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு.நெ.நந்தகுமார் |
| 2006 - 07 | வைத்தியகலாநிதி தி.ஆனந்தமூர்த்தி | திரு.சா. மோகனஜீவ் |
| 2007 - 08 | வைத்தியகலாநிதி தி.ஆனந்தமூர்த்தி | திரு.சி.திவாகரன் |
| 2008 - 09 | வைத்தியகலாநிதி தி.ஆனந்தமூர்த்தி | திரு.செ. ஜெயசுதன் |
| 2009 - 10 | திரு.வ.தர்மதாசன் | திரு.ந.சிந்துஜன் |
| 2010 - 11 | திரு.வ.தர்மதாசன் | திரு.த.கோபிராம் |
| 2011 - 12 | திரு.சிவயோகலிங்கம் | திரு.ச.சசிக்குமார் |
| 2012 - 13 | திரு.சிவயோகலிங்கம் | திரு.கு.ஜெயமோகன் |
| 2013 - 14 | திரு.சிவயோகலிங்கம் | திரு.சி.வினோஜ் |
| 2014 - 15 | திரு.வ.தர்மதாசன் | திரு.கு.அபிராம் |
| 2015 - 16 | திரு.வ.தர்மதாசன் | திரு.தி.தர்ஷன் |
| 2016 - 17 | திரு.வ.தர்மதாசன் | திரு.த.வெங்கடேஸ்வரன் |
| 2017 - 18 | திரு.வ.தர்மதாசன் | திரு.சி.சுஜேந்திரன் |
| 2018 - 19 | திரு.வ.தர்மதாசன் | திரு.வீ.ராஜ்குமார் |
| 2019 - 20 | திரு.வ.தர்மதாசன் | திரு.ஜெ.கபிலானந் |
| 2020 - 21 | திரு.வ.தர்மதாசன் | திரு.ம.மணிவண்ணன் |
| 2021 - 22 | திரு.த.சிவானந்தவேள் | திரு.ந.சுமித்தரசாந்த் |
| 2022 - 23 | திரு.த.சிவானந்தவேள் | திரு.க.மாலவன் |
| 2023 - 24 | திரு.த.சிவானந்தவேள் | திரு.சி.டிலக்ஷன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றிகள்...

பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தினால் ஆண்டு தோறும் வெளியிடப்படும் இந்து தருமம் நூலானது இந்த வருடமும் சிறப்பான முறையிலே வெளிவர எல்லாம் வல்ல குறிஞ்சிக்குமரனின் திருவருள் கைகூடியுள்ளது.

எமது இந்து தருமம் இதழுக்கு ஆக்கங்களை தந்துதவிய எமது பல்கலைக்கழக சகோதர சகோதரிகளுக்கு முதற்கண் நன்றிகளைக் கூற கடமைப்பட்டுள்ளோம். மேலும் இம் மலருக்கு மெருகூட்டிய பேராசிரியர்கள், போதனாசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆலய நித்திய, நைமித்திய கிரியைகளை சிறப்பாக ஆற்றிவரும் ஆலய பிரதமகுரு க.வரதராஜ குருக்கள் அவர்களுக்கும், ஆலய உற்சவங்கள் மற்றும் விசேட வழிபாடுகள் சிறப்பாக நடந்தேற உதவிய அனைவருக்கும் ஆலய சிரமதானங்களை நடாத்த முன்னின்று உதவிய அனைத்து பீடமாணவர்களுக்கும் பல்கலைக்கழக கல்விசார், கல்விசாரா ஊழியர்களுக்கும், கிராம மக்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள்.

அத்துடன் எம்மை முன்னிறுத்தி எமக்குப் பின்னால் இருந்து எம்மை பலப்படுத்தும் பல்கலைக்கழக போதனாசிரியர்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள். மேலும் நூல் வடிவமைப்பிற்கு ஆலோசனை வழங்கி உதவிய நல்லுள்ளங்களிற்கும், விளம்பரங்களை தந்து இதழை சிறப்பித்த அனைத்து வர்த்தக பெருந்தகையினருக்கும் நன்றிகள் உரித்தாகுக. ஏனைய நன்றி கூற தவறிய அனைத்து உள்ளங்களிற்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"



செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from...*

# MURUGAN Stores



**081 238 7057**




36, Colombo Road, Peradeniya

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Pearson | BTEC

SOLENT UNIVERSITY SOUTHAMPTON

OXFORD BROOKES UNIVERSITY

**A/L இன் பின்னர்**
**25 வருடகால தொழிற்துறை சார்ந்த**
**உயர்கல்வித்துறையில் நம்பகமும்,**
**சிறப்புமிக்கதுமான BCAS Campus**
**உடன் இணைந்து UGC அங்கீகாரம்**
**கொண்ட UK பட்டப்படிப்புகளை**
**தொடருங்கள்!**



Degree Progression to 139 universities in UK, USA, Australia etc.

UGC Recognized

Foundation Courses *After O/L* ▶ BTEC HNDs *After A/L* ▶ BSc (Hons) LLB (Hons) ▶ MBA | MSc

**COMPUTING**
Software Engineering
Network Engineering

**BUSINESS**
Business | Marketing
HRM | Accounting & Finance

**APPLIED SCIENCES**

**QUANTITY SURVEYING**

**CIVIL ENGINEERING**

**LLB (HONS)**

**077 684 6261**

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

CELEBRATING 25 YEARS OF TRUST & EXCELLENCE IN HIGHER EDUCATION

**BCAS Campus Jaffna**
**#16, Point Pedro Road,**
**Jaffna**

**HOTLINE : 021 221 9910**

jaffna@bcas.lk | www.bcas.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருபா லேணர்ஸ்

කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS

கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS

DS - 589

அரச அங்கிகாரம் பெற்ற வடக்கின் முதல் தர சாரதிப் பயிற்சி பாடசாலை

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.



0777 22 5292
www.kirubalearners.com
fb.com/kirubaalearners
kirubalearners@gmail.com

**தலைமைக் காரியாலயம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 4353, 021 492 3200

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | சித்தங்கேணி 021 225 2500 | பருத்தித்துறை 021 226 1100 | நெல்லியடி 021 226 0700 |
| திருநெல்வேலி 021 221 4488 | கிளிநொச்சி 021 228 5505 | மன்னார் 023 225 1656 | வவுனியா 024 222 7777 |

# வைஷ்ணவி

நகைப்பூங்கா

நவீன வடிவமைப்புகளில் அழகிய தங்க நகைகளைச் செய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்



ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் 22 கரட்டில் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

பிரதான வீதி, நெல்லியடி கரவெட்டி.
**021 226 4519**

# SELLAMUTHUS TEXTILES

செல்லமுத்து புடவையகம்



AB20 - 57, Main Street, Nelliady,
Karaveddy, Jaffna.
021 226 3238


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'INNOVATIVE IDEAS OPEN NEW WORLD'

TECHNO WORLD

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகில்

தொழில்நுட்பப் பிரிவு

A/L 2025

நவீன ஆய்வுகூட வசதிகளுடன்

தொடர்புகளுக்கு

077 017 5346

வேறு எங்கும் கிளைகள் இல்லை

NEW SCIENCE HALL

Kannathiddy Road, Jaffna

2024 A/L DAY CLASS

கணித, விஞ்ஞானப் பிரிவுகள்

| | | |
|---|---|---|
| COM.MATHS | P.செந்தில்நாதன் 7.00-AM<br>S.சிவகரன் 5.00-7.00-PM | |
| BIOLOGY | V.S குணசீலன் 8.00-9.30AM | |
| CHEMISTRY | V.K நந்தா<br>P. லோகாசனன்<br>9.30-11.30AM | |
| PHYSICS | G.பிரபா<br>R. ராகுலன்<br>11.30-1.30 NOON | |

சகல மாவட்டங்களிலும் இருந்து இணைந்துகொள்ளலாம்.

தொடர்புகளுக்கு- 0765693006, 0777917611

https:// facebook.com
NEW SCIENCE HALL JAFFNA

நிகழ்நிலை (ZOOM) வகுப்புக்களும் நடைபெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# ESWARAN'S BOOK DEPOT

whole sale, Retail Dealers in all kind of Books, Wedding Cards, Stationaeries & Internet Cafe with Type Setting

No: 126/1 , COLOMBO STREET , KANDY,

081-2220820

eswarancybervila@gmail.com






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from...*

# Kalyani Stores



55, Yatinuwara Veediya, Kandy

# Sri Lekah

## Jewellers (Pvt) Ltd.



57, Yatinuwara Street, Kandy

081 220 2925, 081 222 9105

# KRISHNA STORES

Dealers in Agro Chemicals, Vegetable Seeds, Fertilizer & Sprayers Etc.

LANKEM Hayleys AGRICULTURE HARCROS CIC

**#163, Colombo Street Kandy.**

**081 223 4204, 081 499 3850**

# KANDY TRACTOR & MOTOR SPARES

Dealers for *Massey Ferguson, Ford Kubota, Tiafe, Mahindra, international Tractors, spares and implements*

Agents for *Sri Lanka state Trading (Tractor) Corporation, Sathiyawadi Stores & Motor Transport Limited, Freudenberg Industries Limited*



#68, Colombo Street Kandy.

081 223 205 1740, 081 222 2894

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழியிலே பிறப்பெடுத்த ஆண்டவன் - ஊழ்
விலக்க வேலெடுத்த வேலவன் - சூழ்
பொரி பொங்கல் போதும் - நாள்
கோள் நலமாக்கிய காவலன் - அல்
அண்ணாரும் மலையோன காதலன்- எம்
பெருமான் குறிஞ்சி குமரனே ஆண்டவன்.



Guru Printers - 021 221 4777